
மலைவாசல்
சாண்டில்யன்
வானதி பதிப்பகம்

| | | | |
|---|---|---|---|
| ஆறாம் பதிப்பு | : | நவம்பர் | 1969 |
| பதினைந்தாம் பதிப்பு | : | செப்டம்பர் | 1975 |
| பதினாறாம் பதிப்பு | : | பிப்ரவரி | 1992 |
| பதினேழாம் பதிப்பு | : | டிசம்பர் | 1994 |
| பதினெட்டாம் பதிப்பு | : | ஜூன் | 1997 |
| பத்தொன்பதாம் பதிப்பு | : | பிப்ரவரி | 1999 |
| இருபதாம் பதிப்பு | : | டிசம்பர் | 2000 |
| இருபத்தி ஒன்றாம் பதிப்பு | : | மே | 2003 |
| | : | பிப்ரவரி | 2005 |



உரிமை : ஆசிரியருக்கு



திருநாவுக்கரசு தயாரிப்பு

**விலை : ரூ.120-00**

- Title : **Malai Vaasal**
- Author : Sandilyan
- Language : Tamil
- Subject : Historical Novel
- Edition : Twenty First Edition, February, 2005
- No. of Pages : 484
- Published by : **VANATHI PATHIPPAKAM**
  13, Deenadayalu Street,
  Thyagaraya Nagar,
  Chennai-600 017.
- Price : **Rs.120.00**

Laser Typeset at : **M.H.Computers**, Chennai - 600 071.
Printed at : Novena Offset Printing Co., ☎ 28446891/28446166


## அணிந்துரை

(திரு. ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள்)

பழங்காலத்தில் வடமேற்குக் கணவாய்களின் வழியாகப் பாரத நாட்டிற்கு வந்த தொல்லைகள் பலவாகும். பாரதத்தின் செல்வத்தை விரும்பிப் படையெடுத்தனர் பகைவர்கள். இந்நாட்டு மன்னர்கள் அவர்களை எதிர்த்துப் போரிட்ட வரலாற்றை நாமறிவோம். அத்தகைய படையெடுப்புகளில் ஒன்று ஹூணர்கள் என்னும் நாடோடிச் சாதியாரால் நேர்ந்தது. அன்னவருடைய மின்னல் தாக்குதல்களை முறியடித்துப் பாரத நிலத்தில் அவர்கள் ஆதிக்கம் நிலைபெறா வண்ணம் தடுத்து வந்தனர் குப்த மன்னர்கள். ஆயினும், ஸ்கந்தகுப்தன் என்னும் மன்னன் நோய்வாய்ப்பட்டுப் படுக்கையில் இருந்தபோது அப்பகைவரது படையெடுப்பைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. அப்போது ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால் பொன்னின் மதிப்பும் நாட்டில் குறைந்துபோயிற்று.

ஸ்கந்தகுப்தனுடைய மாற்றாந் தாயாகிய ஆனந்ததேவி தன் மகன் பூரகுப்தனை அரியாசனத்

தில் ஏற்ற விரும்பி எதிரியான தோரமானா என்னும் படைத்தலைவனுடன் சேர்ந்து சதி செய்து வந்தாள். அச்சமயம் ஹூணத் தலைவன் அடிலனிடம் உபாத்தியாயராகப் பணியாற்றி வந்தான் குப்த ராஜ்ய உபசேனாதிபதி அஜித் சந்திரன். இந்த உள்நாட்டுக் கலகத்தையும், தோரமானாவின் தாக்குதலையும் உபசேனாதிபதி அஜித் சந்திரன் தன் ராஜதந்திரத்தால் முறியடித்து, அடிலன் மகள் சித்ராதேவியை மணந்த வரலாற்று உண்மையைப் பகைப்புலமாகக் கொண்டு சிறந்ததொரு சரித்திர நாவலைப் புனைந்திருக்கிறார் திரு. சாண்டில்யன் அவர்கள்.

வரலாற்று நூல் எழுதுதல் எளிதன்று. அதிலும் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு மெய்ச்சான்றுகளுக்கு மாறுபடாமல், நாவலுக்கு ஏற்ற குணநலங் குன்றாமல் எழுதுதல் அதனினும் கடினமானதொன்று. மேனாட்டு ஆசிரியர்களாகிய சர் வால்டர் ஸ்காட், டூமாஸ் போன்றவர் தம் வரலாற்றுக் கற்பனை நாவல்களால் உலகப் புகழ் பெற்றதோடு தம் மொழிக்கும் ஆக்கம் தேடித் தந்திருக்கிறார்கள்.

திரு. சாண்டில்யன் அவர்கள் தமிழில் சிறந்த எழுத்தாளர். இயற்கையான நகைச்சுவையாலும் சிறந்த பாத்திரங்களைப் படைக்கும் திறத்தாலும், நன்றாகக் கதையை நடத்திச் செல்லும் நலத்தாலும் நல்லதொரு நாவலைத் தமிழ்நாட்டிற்கு அவர்கள் அளித்திருக்கிறார்கள். அவர்கள் படைத்துள்ள பல்தேவ், ராகுலன், காமினி போன்ற பாத்திரங்களே இதற்குச் சான்று.



ஏறக்குறைய ஐநூறு பக்கங்கள் கொண்ட இந்த வரலாற்று நாவலை இயற்றித் தமிழ் நாட்டிற்கு அளித்ததற்காகத் தமிழ் மக்கள் ஆசிரியர் சாண்டில்யனைப் போற்றுவர் என்பதில் ஐயமில்லை. மேலும் மேலும் வரலாற்றுக் கதைகளைப் பொதிந்து புனைந்து நாட்டின் புகழையும் மொழியின் வளத்தையும் வாழ்விப்பீர்களாக.

காந்தி நகர்
*13 - 2 - 56*

**ரா. பி. சேதுப்பிள்ளை**

# முன்னுரை

ஹூணர்கள் என்ற நாடோடிச் சாதியார் பாரதத்தின்மீது படையெடுத்துப் புரிந்த அட்டூழியங்களை ஆதாரமாகக் கொண்டு, 'மலைவாசல்' கதை புனையப்பட்டிருக்கிறது. சக்கரவர்த்தியான ஸ்கந்தகுப்தன் நோய்வாய்ப்பட்டு விட்டதாலும், அவன் உற்றார் விளைவித்த உள்நாட்டுச் சதியாலும் பணக் கஷ்டத்தாலும் தத்தளித்த குப்த ராஜ்யம் முழுமையையும் ஹூணர்கள் விழுங்கவொட்டாது காப்பாற்றிய உபசேனாதிபதியான அஜித் சந்திரனின் தியாகக் கதைதான் மலைவாசல்.

இந்தக் கதை திடமான சரித்திர ஆதாரங்களைக் கொண்டது. ஆசிரியர் வின்ஸென்ட் ஸ்மித் பின்வரும் குறிப்புகளைக் கொடுத்திருக்கிறார்:

"கி.பி. 455-வது வருஷத்தில் ஏற்பட்ட ஹூணர்களின் படையெடுப்பை ஸ்கந்தகுப்தன் முறியடித்தாலும் 460க்கு மேல் 470-க்குள் மீண்டும் ஹூணர்கள் சாரிசாரியாக இந்தியாவுக்குள் புகுந்து விட்டார்கள். இந்த இரண்டாவது படையெடுப்புக் காலத்தில் சக்கரவர்த்தியான ஸ்கந்தகுப்தன் நோய்வாய்ப்பட்டு விட்டான். நேரிடையாக எதிரிகளைச் சமாளிக்க முடியவில்லை. ஆகவே



ஹூணர்கள் பத்து வருஷ காலத்திற்குள் ஸிந்து நதிப் பிராந்தியம் பூராவையும் ஆக்கிரமித்துக் கொண்டார்கள். திரும்பத் திரும்ப ஏற்பட்ட படையெடுப்பால் ஸ்கந்தகுப்தன் செல்வ நிலையும் சீரழிந்து விடுகிறது. ராஜ்யத்திலிருந்த தங்க நாணயத்தின் மாற்றை 108லிருந்து 73 ஆகக் குறைத்து விடுகிறான். தவிர, ஸ்கந்தகுப்தனின் சிறிய தாயாரான ஆனந்ததேவி தன் மகனான பூரகுப்தனுக்கு குப்த ராஜ்யத்தைச் சம்பாதித்துக் கொடுக்கச் சதியிலிறங்குகிறாள். இதனால் உள்நாட்டு அமைதியும் குலைகிறது" (*The Early History of India- by Vincent Smith, Chapter XII, Pages: 289 to 293*) இந்தச் சரித்திரக் குறிப்புகளைக் கொண்டு சரித்திரப் பாத்திரங்களோடு சில புது கதாபாத்திரங்களையும் சிருஷ்டித்து, 'மலைவாசல்' எழுதினேன். வடமேற்கு எல்லையிலுள்ள மலைப் பிரதேசத்தின் வாசலாக அமைந்து உள்ள கைபர் கணவாய்க்கு அருகே இக்கதை பெரும்பாலும் நடப்பதால் இதற்கு 'மலைவாசல்' என்று பெயர் கொடுத்தேன். இக்கதையில் ஸ்கந்தகுப்தன், தோரமானா, ஆனந்ததேவி, பூரகுப்தன், கிங்கலன் ஆகியோர் சரித்திரப் பாத்திரங்கள். அஜித் சந்திரன், சித்ராதேவி, அடிலன், காமினி, பல்தேவ், ராகுலன் முதலியோர் கதையின் தேவையை முன்னிட்டுச் சிருஷ்டிக்கப்பட்டவர்கள்.

'மலைவாசல்' அமுதசுரபியில் வந்த இரண்டரை வருஷ காலமும் அதை விடாமல் படித்து ஆதரவு தந்த தமிழன்பர்கள் புத்தக ரூபத்திலும் அதை வரவேற்பார்கள் என்று நம்புகிறேன்.

'மலைவாசல்' புத்தகம் உண்மையில் அதிர்ஷ்டம் வாய்ந்ததென்பதில் சந்தேகமில்லை. சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர், சொல்லின் செல்வர் பேராசிரியர் ரா.பி. சேதுப்பிள்ளை அவர்களின் முகவுரையைப் பெற்று இது வெளியாகிறது. எவ்வளவோ அலுவல்களுக்கிடையே உடல்நலக் குறைவையும் பொருட்படுத்தாது, திரு. சேதுப்பிள்ளை அவர்கள் என் வேண்டுகோளுக்கிணங்கி அணிந்துரை எழுதித் தந்தார்கள். அணிந்துரையில் என்னைப் பற்றி அன்னார் கூறியுள்ள சிறப்புரைகளுக்கு அன்னாருக்கு என் மேலுள்ள அன்புதான் காரணம். இப்படி எனக்கு அன்பையும் ஆசியையும் தந்த திரு. ரா.பி. சேதுப்பிள்ளை அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'மலைவாசல்' கதையை நான் எழுதுவதற்குத் தூண்டுகோலாயிருந்தவர் 'அமுதசுரபி' ஆசிரியரும் எனது நண்பருமான திரு. சு. வேம்பு அவர்கள். என்னை வற்புறுத்தி எழுத வைத்த அன்னாருக்கும், இதைப் பதிப்பித்துள்ள வானதி பதிப்பகத்தாருக்கும் நன்றி உரித்தாகும்.

சாண்டில்யன்

# மலைவாசல்

## 1. மலையும் மடுவும்

நீர்த் திவலைகளை அள்ளி வீசித் துள்ளிக் குதித்துச் சலசலப்புடன் அருகில் ஓடிக்கொண்டிருந்த மலையருவியின் நிலையிலிருந்தது உபாத்தியாயனான அஜித் சந்திரனின் மனம்.

நீரோட்டத்தைத் தடுத்து நின்றவை சிறு கற்களாயிருந்தால் அவற்றைத் தாக்கி மேலெழுந்து தாண்டியும், பெரிய பாறைகளாயிருந்தால் அவற்றைச் சுற்றி வளைத்து ஓடியும் பெரிய நதியை அடைய வேண்டும் என்ற லட்சியத்தை மட்டும் விடாமல் அருவி ஒரே திக்கில் மிக வேகமாகச் சென்று கொண்டிருந்தது. அஜித் சந்திரனின் மனமும், தனக்கும் சித்ராதேவிக்கும் இருக்கும் தார தம்மியத்தையும் இதர இடைஞ்சல்களையும் நினைத்தபோதெல்லாம் அவற்றை எப்படி எப்படியோ கடந்து அவளை அடைவதிலேயே நாட்டங் கொண்டு, என்னென்னவோ இன்பக் கனவுகளில் லயித்துக் கட்டுக்கடங்காமல் போய்க் கொண்டிருந்தது. இம்மாதிரி சொப்பன அவஸ்தையில் நடந்து சென்ற அஜித் சந்திரன், பக்கத்தில் தனக்குத் துணையாக ஓடி வந்து கொண்டிருந்த அருவியைச் சிறிது நேரம் பார்த்தான். பிறகு கண்களை உயர்த்தித் தொலைவில் வெள்ளைவெளேரென்று வைரக் கிரீடங்கள் போல் ஜ்வலித்துக் கொண்டிருந்த மலையுச்சிகளைப் பார்த்தான்.

வஸந்தகால உதயசூரியனின் கிரணங்கள் ஹிந்துகுஷ் மலையின் பனி உறைந்த உச்சிகளை அப்பொழுதுதான் மெல்ல மெல்ல முத்தமிட ஆரம்பித்தன. கிரணங்கள் உறைக்க உறைக்க, காதலின் வசப்பட்ட இளமங்கையின் இதயம் போல் பனிக்கட்டிகள் இளகி முத்து முத்தாக நீரைச் சொட்டத் தொடங்கின. பனிக்கட்டிகளின் மற்றொரு பாகம் அஜித் சந்திரனின் மன விகாரத்தைப் போல் புகைந்து கிளம்பி எங்கோ இருக்கும் ஆகாயத்தை எட்டிப் பிடிக்க மேலே சென்று கொண்டிருந்தது. அந்த இயற்கை வனப்பைப் பருகிய அஜித் சந்திரன், தன் எண்ணமெல்லாம் அந்தப் பனிக்கட்டிகளின் வெண் புகையைப்போல் ஆகாயக் கோட்டையாகத்தான் முடியுமா அல்லது சித்ராதேவியின் மனம் அந்தப் பனிக்கட்டியின் மற்றொரு பாகத்தைப் போல் தன்பால் இளகுமா என்று யோசிக்க ஆரம்பித்தான்.

'அவள் மனம் இளகியிருக்காவிட்டால் நேற்றுப் பாடம் சொல்லிக் கொடுக்கையில் என்னுடன் அவ்வளவு தூரம் ஏன் சிரித்து விளையாடினாள்? வழக்கமாக எட்டி உட்கார்ந்து பாடம் கேட்பவள் நேற்று மட்டும் ஏன் அவ்வளவு சமீபத்தில் வந்து உட்கார்ந்து கொண்டாள்?' என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டான். முதல் நாள் சம்பவங்களை நினைத்துக் கொண்டதும், அஜித் சந்திரன் முகம் சந்தோஷத்தால் நன்றாக மலர்ந்து அவன் இதழ்களில் சிறிது புன்முறுவலும் படர்ந்தது. பக்கத்தில் ஓடிக் கொண் டிருந்த அருவியொலி சித்ராதேவியின் சிரிப்பொலியாக அவன் காதுகளில் விழுந்தது. பாடம் கேட்கப் பக்கத்தில் உட்கார்ந்தபோது அவள் காதில் செருகியிருந்த சண்பக மலரின் சுகந்தத்தை இப்பொழுது கூட அவன் மனத்தால் அனுபவிக்க முடிந்தது.

எப்பேர்ப்பட்ட முக்கிய விஷயங்களையும் இலகுவில் மறக்கும் தன்மை வாய்ந்த மனித மனம் இன்பமான



விஷயங்களை மட்டும் இம்மியும் பிசகாமல் அணுஅணுவாக நினைவில் இருத்திக் கொள்கிறது. இயற்கையின் இந்த உதவியால் அஜித் சந்திரனும் முதல் நாள் சித்ராதேவி தன்னுடன் நடந்து கொண்ட மாதிரியைப் பலப்பல விதமாக யோசித்துப் பார்த்து, அவளுக்கும் தன்னிடம் சிறிது பிடிப்பு இருக்கத்தான் இருக்கிறது என்று நினைத்துக் கொண்டான். அவனுடைய இந்தக் கற்பனையைக் கண்டு சற்றுத் தூரத்தில் கும்பலாக நின்றிருந்த சண்பக மரங்கள் சிரித்துக் காற்றில் சலசலவெனப் புஷ்பங்களை உதிர்த்தன. அருவியோரமாகக் காட்சி அளித்த காட்டுப் புஷ்பங்கள் அவனை விழித்துப் பார்த்தன. அருவியை அணைத்து நின்ற பாறைகளில் இரவில் லேசாகப் படிந்திருந்த பனித்துளிகள் உபாத்தியாய னின் பிரமையை நினைத்து உருகி, கற்களிலிருந்து உருண்டு விழுந்து அருவியின் தண்ணீரில் கலந்து மறைந்து விட்டன.

அஜித் சந்திரனுக்கு மட்டும் இதில் எவ்விதப் பிரமையும் தெரியவில்லை. யௌவன வயதுள்ள புருஷன் சித்ராதேவி யைப் போன்ற அழகியிடத்தில் மனத்தைப் பறி கொடுப்பதில் பிரமை என்ன இருக்கிறதென்று யோசித்தான். "அவள் சிரித்தது பொய்யல்ல. மனிதர்களின் எண்ணங்களை அவர்கள் நடவடிக்கைகளிலிருந்து புரிந்து கொள்வது சரி யென்றால், நான் கட்டக்கூடிய முடிவு வேறென்ன இருக் கிறது?" என்று அஜித் சந்திரன் தனக்குத் தெரிந்த தத்துவ சாஸ்திரத்தையெல்லாம் பிரயோகித்துச் சித்ராதேவியின் மனோநிலையைச் சரிபார்த்துத் தனக்கு அனுகூலமான ஒரு முடிவை ஏற்படுத்திக் கொண்டே எதிரேயிருந்த சண்பக மரங்களை நோக்கி நடந்து சென்றான்.

காம இச்சையில் சிக்கியவன், வேதாந்தி, பைத்தியக் காரன் ஆக மூவரையும் ஒரே தராசில் வைக்கலாம். தன்னந்

தனியாகப் பேசி, சிரித்து, அழுது எல்லாம் தாங்களாகவே செய்து கொள்ளக் கூடியவர்கள் உலகத்தில் இந்த மூன்று வகை பேர்வழிகள்தான். சித்ராதேவியின் பேரெழிலில் மூழ்கியிருந்த அஜித் சந்திரனும் அவளைப் பற்றிய இன்ப நினைவுகளால் ஏதேதோ தானே பேசிக்கொண்டு சென்று சண்பகத் தோட்டத்தை அடைந்ததும் சுய நினைவு வரவே தன் பகற் கனவை நினைத்துச் சற்று உரக்கவே சிரித்துவிட்டான்.

"உபாத்தியாயர் ஏது அதிகாலையில் இவ்வளவு மகிழ்ச்சியுடனிருக்கிறார்?" என்று குயிலினுமினிய குரல், அவன் சிரிப்பில் குறுக்கிட்டது. சந்திரனைக் கண்ட ஹிந்துகுஷ் பனித் துளிகளைப்போல் அஜித் சந்திரன் சிரிப்பு பாதியில் அப்படியே உறைந்துவிட்டது. அஜித் சந்திரன் கல்லாய்ச் சமைந்து நின்றான். அவன் மாணவியும் எஜமான் மகளுமான சித்ராதேவி அவனை அப்படியே விழுங்கிவிடும் மோகனப் புன்னகையுடன் எதிரே நின்றிருந்தாள்.

சித்ராதேவிக்கு வயது பதினேழு அல்லது பதினெட்டு தான் இருக்கும். குளிர்ச்சியான மலைப் பிரதேசத்தில் வளர்ந்தவளாகையால், மலைப் புஷ்பங்களில் காணப்படும் ஒரு செழுமையும் பளபளப்பும் அவள் மேனியிலும் காணப் பட்டன. சுற்றியிருந்த சண்பகச் சோலைக்கும், தூரத்தில் மின்னிக்கொண்டிருந்த பனிமலையுச்சிகளுக்கும், எதிரே சித்ராதேவி நின்றிருந்ததற்கும் ஓர் ஓவியனாயிருந்தால் அவளை அப்படியே சித்திரத்தில் தீட்டியிருப்பான். உபாத்தியாயனான அஜித் சந்திரன் ஓவியனில்லா விட்டாலும் அவளுடன் பழகிய சென்ற இரண்டு வருஷங்களாக அவள் அழகிய உருவத்தைத் தன் மனபீடத்தில் நன்றாகச் செதுக்கித் தான் வைத்திருந்தான். என்ன செதுக்கி வைத்திருந்தாலும் அவளை நேருக்கு நேர் கண்டதும் அவன் தைரியமெல்லாம் எங்கோ பறந்து போய், விவரிக்க முடியாத ஒரு குழப்பம்



அவனைச் சுற்றி வளைத்துக் கொண்டது. அதை மறைத்துக் கொள்ளப் பக்கத்திலிருந்த ஒரு மரக்கிளையிலிருந்து சண்பக மலரை எடுத்து, "சித்ராதேவி! உங்களுடைய இன்னொரு காதில் புஷ்பமில்லையே" என்று நீட்டினான். சித்ராதேவி புன்சிரிப்புடன் அவன் கொடுத்த புஷ்பத்தை வாங்கி ஒரு புஷ்பத்துக்கு ஜோடியாக இன்னொரு காதிலும் அணிந்து கொண்டாள்.

"'நீங்கள், போங்கள்' என்ற மரியாதையை உபாத்தியாயர் இன்னும் விடவில்லையே! நான் உங்கள் மாணவி என்பதை அடிக்கடி மறந்து விடுகிறீர்களே" என்றாள் சித்ரா தேவி.

இதனால் சிறிது தைரியம் வரப்பெற்ற அஜித் சந்திரன் "சித்ரா என்று அழைக்க எனக்கு இஷ்டம்தான். இருந்தாலும்..." என்று இழுத்தான்.

"அப்பா கோபித்துக் கொள்வாரென்று பார்க்கிறீர்களா? அதைப் பற்றிக் கவலை வேண்டாம். அவரை நான் சரிப் படுத்திக் கொள்கிறேன்" என்று சொல்லிக் கொண்டே சண்பகத் தோட்டத்தில் நுழைந்தாள் சித்ரா.

அவள் இவ்வளவு தூரம் இடங் கொடுத்ததால் கொஞ்சம் துணிச்சலடைந்த அஜித் சந்திரன் அளவோடு சற்று நெருங்கியே நடந்து அவள் கையைப் பற்றி, "சித்ரா! இன்று நான் சிரித்ததற்குக் காரணம் கேட்டாயே சொல்லட்டுமா?" என்று கேட்டான்.

அவன் அப்படித் துணிச்சலாகக் கையைப் பிடித்ததும் அவள் முகம் திடீரெனக் கோபத்தணலாக மாறியது. கையைச் சரேலென இழுத்துக் கொண்டவள் "உபாத்தியாயரே! என்ன இது? நான் இன்னும் குழந்தையென்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்களா? அல்லது நான் ஹூணர் வம்சத்தில் பிறந்தவளென்பதை மறந்துவிட்டீர்களா?" என்று

சொல்லி அவனைச் சுடச்சுடப் பார்த்தாள். அவள் மூதாதைகளின் மூர்க்க குணம் பூராவும் அவள் முகத்தில் அப்பொழுது பரிபூரணமாகப் பிரதிபலித்தது.

"அதை எல்லாம் மறந்துவிட்டேன் சித்ரா. வஸந்தம் மலர்ந்திருக்கும் இந்தக் காலையில் உன் எழில் ஒன்றுதான் என் நினைவிலிருக்கிறது" என்று தைரியமாகவே பேசினான் அஜித் சந்திரன்.

சித்ரா அவனைச் சிறிது நேரம் கூர்ந்து நோக்கினாள். சுமார் ஆறடி உயரத்துக்கு மெல்லிய சரீரத்துடன் ஆஜானுபாகுவாய் நின்றிருந்த அஜித் சந்திரன் பார்வைக்கு அழகாகவே இருந்தான். இருபத்து நான்கு வயதாகியும் அவன் முகத்தில் குழந்தைக் களை மட்டும் போகவில்லை. முகத்தில் தீக்ஷண்யமாய் பிரகாசித்துக் கொண்டிருந்த இரண்டு கண்கள் மட்டும் உபாத்தியாயனை அடியோடு குழந்தையாக்கிவிட முடியாதென்பதை நிரூபித்தன. அவன் கண்களைச் சந்தித்ததும் சித்ராவின் விழிகளில் கோபம் மறைந்து பரிதாபம் குடிகொண்டது.

"உபாத்தியாயரே! வேண்டாம். இந்த எண்ணத்தை இத்துடன் விட்டுவிடுங்கள். உங்களுக்கும் எனக்கும் வாழ்க்கையில் இருக்கும் வித்தியாசத்தை நினைத்துப் பாருங்கள். நீங்கள் எங்கள் வீட்டு அடிமை" என்று உபதேசித்த சித்ராவை இடைமறித்து, "அடிமையாயிருந்தாலும் நான் ஆண்பிள்ளையல்லவா?" என்றான் அஜித் சந்திரன்.

"யுத்தத்தில் என் தகப்பனார் பிடித்த கைதி."

"யுத்தக் கைதியானலும் உனக்கும் உன் தம்பிக்கும் வித்தை கற்றுக் கொடுத்திருக்கிறேன்!"

"அதனால்தான் சுதந்திர புருஷனாக இருந்து வருகிறீர்கள். ஹூணர்கள் மற்றவர்களைப் படுத்தும் பாடு உங்களுக்குத் தெரியாதா?"



"தெரியும் சித்ரா, அதனால்தான் ஹூண ஸ்திரீயான நீயும் என்னை வதைக்கிறாய்!" என்று சொல்லிப் பெருமூச்சு விட்டான் அஜித் சந்திரன்.

"நான் உங்களை வதைக்கிறேனா?" என்று ஆச்சரியத்துடன் அவனைப் பார்த்தாள் சித்ரா.

அஜித் சந்திரன் லேசாகச் சிரித்தான். "புரியவில்லையா சித்ரா! நீ சிரிக்கும் போதெல்லாம் நான் என் மனத்தைப் பறிகொடுக்கிறேன். பாடம் சொல்லும்போது பரவசமடைகிறேன். நீ நேற்று அருகில் உட்கார்ந்ததும் நான் சுவர்க்க புரிக்கே போய்விட்டேன்" என்றான்.

சித்ரா பதிலுக்கு மிகக் குரூரமாகச் சிரித்து, "இப்படியே நீங்கள் பேசிக்கொண்டு போனால், சுவர்க்கபுரிக்கல்ல, மோட்ச லோகத்துக்கே என் தகப்பனார் உங்களை அனுப்பி விடுவார் தெரியுமா? உபாத்தியாயரே! புருஷர்களின் திமிர் எவ்வளவு தூரம் போகிறது பாரும்! பெண்கள் எங்கேயாவது பார்த்துச் சாதாரணமாகச் சிரித்தால் தங்கள் வலையில் விழுந்துவிட்டதாக ஒரு நினைப்பு. அவர்கள் உடல் மேலே பட்டுவிட்டால் வாரியணைத்து விடலாமென்ற ஒரு பிரமை; அன்பாகப் பேசிவிட்டால் அடிமையாகி விட்டார்களென்ற அசட்டு எண்ணம். புருஷர்களின் இந்த முட்டாள்தனத்தில் சுத்த வீரனும், படித்தவருமான நீங்கள் சேர மாட்டீர்கள் என்று நினைத்தேன். நீங்களும் அதற்கு விலக்கில்லை போலிருக்கிறது" என்றாள்.

அஜித் சந்திரன் பதில் சொல்லத் தெரியாமல் விழித்தான். சித்ரா மறுபடியும் அவனுக்குப் படும்படியாகச் சொன்னாள்: "நம்மிருவர் அந்தஸ்தில் மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசமிருக்கிறது. அதோ அந்த ஹிந்துகுஷ் மலைச் சிகரத்தைப் பாருங்கள். அது இந்தத் தரைமட்டத்துக்கு வருமா? யோசித்துச் சொல்லுங்கள்" என்றாள்.

அஜித் சந்திரன் அதை ஒரு விநாடி உற்று நோக்கினான். பிறகு சித்ராவையும் ஏற இறங்கப் பார்த்தான். "அந்த மலை உச்சி இங்கு வராது. ஆனால் மனிதன் முயன்றால் அதை அடையலாமல்லவா?" என்றான்.

இதற்கு என்ன பதில் சொல்வதென்று சித்ராதேவிக்குத் தெரியவில்லை. சற்று அவள் குழம்பியிருந்த சமயத்தைப் பயன்படுத்திக் கொள்ள அவளை நெருங்கி, அவள் இரு கைகளையும் அஜித் சந்திரன் பிடித்துக் கொண்டான். "சித்ரா! இதோ பார், என்னை மறுக்காதே. அந்தஸ்தை மறந்துவிடு. அந்தஸ்து உலகத்தில் நிலையற்றது; இன்றிருக்கும் ராஜிய நிலை புரண்டால் நாளை நான் எஜமானனும் உன் தகப்பனார் அடிமையுமாக மாறலாம். நீ முழுக்க முழுக்க ஹூணர் குலத்தவளும் அல்ல. உன் தாயார் கூர்ஜர ஸ்திரீ! இல்லாவிட்டால் ஹிந்துக்களின் முகவெட்டும், இவ்வளவு அழகும் நீண்ட அளகபாரமும் உனக்கு வந்தே இரா. ஆண் பெண் மனம் ஒன்றுபடும் போது உலகச் சூழ்நிலை அர்த்த மற்றது" என்று கெஞ்சி அவளைத் தழுவ முயன்றான்.

"எல்லாவற்றையும் விட உன் பேச்சு அர்த்தமற்றது, விலகி நில், இல்லாவிட்டால் கூச்சலிட்டு மாளிகையிலிருந்து என் தந்தையை உதவிக்கு அழைப்பேன்!" என்று சீறினாள் சித்ரா.

"நீ கூச்சலிட வேண்டிய அவசியமே இல்லை. டேய் அஜித்! நீ என் பெண்ணுக்குச் சொல்லிக் கொடுக்கும் படிப்பு இதுதானா?" என்று கர்ஜித்துக்கொண்டே கையில் நீண்ட சாட்டையுடன் பக்கத்திலிருந்த சண்பக மரத்தின் மறைவிலிருந்து வெளியே வந்தான் சித்ராவின் தகப்பன் அடிலன்.

## 2. புருஷபுரத்து வில்லவர்

அடிலனுக்கும் அஜித் சந்திரனுக்கும் இருந்த சம்பந்தத்தைப் பூரணமாக அறிய வேண்டுமானால், பாரத தேசம் அந்தக் காலத்தில் இருந்த நிலையையும் அறிந்துகொள்ள வேண்டும். கிருஸ்து மகான் பிறந்து நானூறு வருஷங்களுக்குப் பின் அவர் போதித்த அத்தனை கொள்கைகளுக்கும் எதிரிகளாய் ஹூணர்கள் என்ற நாடோடி ஜாதியர் ஆசியாவின் மத்திய பாகத்திலிருந்து கிளம்பினார்கள். அஹிம்சை, ஈவு, இரக்கம் இந்தக் குணங்களைக் குறைவாக நினைத்த அந்த ராக்ஷஸக் கும்பல் இரண்டு கிளைகளாகப் பிரிந்து ஒன்று ஐரோப்பாவை நோக்கிச் சென்றது; இன்னொன்று இந்தியாவை நோக்கிக் கிழக்கில் திரும்பியது. இந்தியாவுக்கு எல்லாத் திக்குகளிலும் மலைகளையும், சமுத்திரங்களையும் சிருஷ்டித்து இயற்கைப் பாதுகாப்புகளை அளித்த கடவுள் வடமேற்கில் ஹிந்துகுஷ் மலைப் பிராந்தியத்தில் மட்டும் பல வாசல்களை வைத்துவிடவே அவற்றின் மூலமாகப் பாரத தேசத்தைப் பக்ஷணம் செய்ய எதிரி பின் எதிரியாய்ப் பல பேர் வரத் தொடங்கினார்கள். அப்படி வந்த ஆதி எதிரிகளில் ஹூணர்களை விடப் பயங்கரமானவர்கள் பாரதத்தின் சரித்திரத்திலேயே இல்லை.

ஹூணர்கள் சாரிசாரியாகக் குதிரைகள் மேல் வந்தார்கள். கிராமங்களை அழித்தார்கள். ஜனங்களைக் குவியல் குவியலாகக் கொன்று குவித்தார்கள். தீப்பந்தங்களை விட்டெறிந்து குடிசைகளையும் பயிர்களையும் அழித்தார்கள். இப்பேர்ப்பட்ட ஹூணர்களின் பயங்கரப் பிரவேசம் கி.பி. 460ஆம் ஆண்டில் நடந்தது. அப்போது குப்த சாம்ராஜ்யம்

மிகச் செல்வாக்குடன் இருந்த காலம். குப்தர்களின் வம்சப் பரம்பரையில் கடைசிச் சக்கரவர்த்தியான ஸ்கந்தகுப்தன் சிம்மாசனம் ஏறி ஐந்து வருடங்களுக்கெல்லாம் இந்தப் பயங்கர ஜாதியார் அவன் சாம்ராஜ்யத்திற்குள் புகுந்தார்கள். ஸ்கந்தகுப்தன் அவர்களை இப்பொழுது பெஷாவர் என்று சொல்லப்படும் புருஷபுரத்துக்கருகில் சந்தித்து முறியடித்துத் துரத்தினான்.

ஆனால் ஹூணர்கள் விடவில்லை. அடுத்த பத்து வருஷங்களில் சிறுகச் சிறுகக் கைபர் கணவாயை அடுத்த ஸிந்து நதியின் பிராந்தியங்களை ஆக்கிரமித்துக் கொண்டனர். அவர்களில் சிலர் ஹிந்து ஸ்திரீகளை மணம் செய்து கொண்டு சின்னஞ்சிறு பிராந்தியங்களைத் தங்கள் கொடுமையால் ஆண்டு வந்தார்கள். ஸ்கந்த குப்தனுக்குச் சொல்லவொண்ணாத ராஜியக் கஷ்டங்கள் ஏற்பட்டதால் அவர்கள் அட்டூழியங்களை எதிர்த்து நிற்க முடியவில்லை. அவ்வப்பொழுது சிறுசிறு படைகளை அனுப்பிவைத்தான். அப்படைகளில் ஒன்றைத் தலைமை வகித்துப் புருஷபுரத்துக்கு வந்தவர்களில் அஜித் சந்திரனும் ஒருவன்.

நாற்புறமும் சூழ்ந்துகொண்ட ஹூணர்களின் பெரும் படை அஜித் சந்திரன் படையை அரை விநாடியில் நிர்மூலப் படுத்திவிட்டது. அஜித் சந்திரன் கைதியானான். அவன் போரிட்ட திறமையைக் கண்டு வியந்து அடிலன் அவனைச் சிறையிலிருந்து விடுவித்துத் தன் மகனுக்கு வாள் போர்ப் பயிற்சி அளிக்கும் உபாத்தியாயனாய் நியமித்தான். அஜித் சந்திரனிடம் பழகப் பழக அவனுக்கிருந்த காவிய ஞானத்தைப் பார்த்த அடிலன் தன் பெண்ணுக்கும் அவனையே ஆசிரியராக்கினான்.

புருஷபுரத்திலிருந்து சிறிது தூரத்தில் கிரித்வாரம் என்று அந்தக் காலத்தில் அழைக்கப்பட்டு வந்த பெரிய மலை



வாசலான கைபர் கணவாயிலிருந்த அடிலன் மாளிகையில் இரண்டு வருட காலத்தை அஜித் சந்திரன் மெல்ல கழித்து விட்டான். யுத்தத்தில் அவன் உடலைத்தான் அடிலன் அடிமையாக்கினான். ஆனால் அந்த இரண்டு வருடங்களில் சித்ரா அவன் உள்ளத்தையும் அடிமையாக்கிவிடவே அஜித் சந்திரன் சம்பூர்ண அடிமையானான். இல்லாவிட்டால் சென்ற அத்தியாயத்தில் விவரிக்கப்பட்ட விசேஷங்கள் நடந்திருக்கக் காரணமே இல்லை.

சித்ராதேவியிடம் தனக்குப் பாசம் விழுந்ததற்கு அஜித் சந்திரன் பல தடவைகள் தனக்குத் தானே சமாதானம் சொல்லிக் கொண்டிருக்கிறான். பார்வைக்குச் சித்ரா சிறிதும் ஹூணர்களைக் கொள்ளவில்லை. ஹூணர்களின் உயரமோ பயங்கரமான விழிகளோ அவளுக்கு இல்லை! அவள் சகோதரனையும் அவளையும் பக்கத்தில் ஜோடியாக வைத்துப் பார்த்தால் அவர்களை யாரும் உடன் பிறந்தவர்கள் என்று சொல்லவே மாட்டார்கள். சேற்றில் முளைத்த செந்தாமரை என்று சித்ராதேவியை நினைத்துப் பூரித்தான் அஜித் சந்திரன். அடிலன் வரவால் பயந்து மிரண்டபோதும் அவள் விழிகளில் ஜொலிப்பு மட்டும் போகவில்லை என்பதை அஜித் சந்திரன் பார்த்தான்.

ஐரோப்பிய வல்லரசுகளை நடுங்க வைத்த ஹூணர்கள் தலைவனான அந்த அடிலனல்ல; அவன் பெயரைக் கொண்ட சிறிய படைத்தலைவன். ஆனால் குரூரத்தில் அந்தப் பெரிய அடிலனுக்குத் தான் எந்த விதத்திலும் சப்பையல்ல என்பதை நாட்டில் கால் வைத்த நாளாய்ப் பலமுறை நிரூபித்திருக்கிறான். அவனால் தீக்கிரையான வீடுகள் பல; கற்பழிக்கப்பட்ட ஸ்திரீகள் அநேகர்; சுமார் ஐம்பது வயதுக்கு மேலிருக்கும். ஆனால் உடல் கட்டுச் சிறிதும் தளரவில்லை. சண்பக மரத்தின் கிளையை அவன் தலை இடித்துவிடும் போலிருந்தது. அவ்வளவு உயரம்!

கைகள் திரணை திரணையாகப் பெரிய உலக்கைகள் போல் இருந்தன. முகத்தில் அதிகக் கேசமில்லை. ஹூணர்களின் இயற்கைப்படி பாலைவனச் சோலைகள் போல் திட்டுத் திட்டாக முளைத்திருந்த கேசமும் தாடியும் சாதாரணமாகவே பயங்கரமாயிருந்த அவன் உருவத்தை இன்னும் அதிகப் பயங்கரமாக்கின. அத்துடன் கோபமும் வந்துவிடவே, விழிகள் செக்கச் செவேலென்று காட்சியளித்தன.

தன் கேள்விக்குப் பதில் சொல்லாமல் எதிரே மௌனமாய் நின்ற அஜித் சந்திரனை நோக்கி இடிபோல் மீண்டும் வார்த்தைகளை உதிர்த்தான். "நீ பேசிய அனைத்தையும் கேட்டேன். உன்னை என் வீட்டில் எனக்குச் சமமாக நடத்தினதற்கு என் பெண்ணின் மேலேயே கை வைக்கப் பார்க்கிறாயா?" என்றான்.

"அடிமையை நடத்த வேண்டிய முறையில்தானே நடத்த வேண்டும். இந்தா, இதை வாங்கிக்கொள்" என்று கையிலிருந்த சாட்டையை அஜித் சந்திரனை நோக்கி ஓங்கினான் அடிலன்.

அடிலனுடைய திடீர் விஜயத்தால் அதுவரை திக்பிரமையடைந்து நின்றிருந்த சித்ரா, அவன் சாட்டையை ஓங்கியதும் மனந்தாளாமல், "அப்பா! வேண்டாம். உபாத்தியாயரை அடிக்க வேண்டாம்" என்று சொல்லிக்கொண்டே அவர்களிருவருக்கும் குறுக்கே புக ஓரடி எடுத்து வைத்தாள். ஓங்கிய கையை ஒரு விநாடி நிறுத்தி அடிலன் அவளை ஆச்சரியத்துடன் பார்த்தான். அத்தனை கோபத்திலும் குரூரமான ஒரு புன்முறுவல் அவன் இதழ்களில் தோன்றி உதடுகளைச் சற்றுக் கடுமையாக மடித்தது. "இவன் ஓர் உபாத்தியாயனா? உபாத்தியாயன் மாணவியிடம் நடந்து கொள்ள வேண்டிய முறை என்னவென்பதை இவன் அறிவானா?" என்றான்.



தகப்பனுக்கும் பெண்ணுக்கும் நடந்த சம்பாஷணையில் அஜித் சந்திரன் கலந்துகொள்ளாமல் இருந்திருக்கலாம். ஆனால், அவன் தலைச்சுழியும் மனத்திற்குள் எழுந்து பாய்ந்து கொண்டிருந்த எண்ண அலைகளும் அவனைச் சும்மா இருக்க விடவில்லை. "உபாத்தியாயனுக்கும் மாணவிக்கும் ஏற்படக்கூடிய உறவு புத்தகங்களை மாத்திரம் பொறுத்ததல்ல, இயற்கையையும் பொறுத்தது" என்றான் அஜித் சந்திரன்.

சித்ரா நடுக்கத்துடன் அவனையும் பார்த்துத் தகப்பனையும் பார்த்தாள். தகப்பன் இதழ்களில் பழைய குரூரச் சிரிப்பு அப்படியே இருந்தது. அஜித் சந்திரன் தன் அபிப்பிராயங்களை மேலும் சொல்லிக்கொண்டே போனான்: "உபாத்தியாயனுக்கு மாணவி பெண்ணுக்குச் சமானம் என்று புத்தகங்கள் சொல்லுகின்றன. ஆனால், பெண் வயதைக் கவனித்து அதற்குத் தக்கபடி உபாத்தியாயரை நியமிக்க வேண்டும். பஞ்சுக்கருகில் நெருப்பை வைப்பது போல் யுவதிக்குப் படிப்புச் சொல்லிக் கொடுக்க வாலிபனை நியமித்தால் புத்தகங்களில் கண்ட நியாயம் வெற்றி பெறுவது மிகக் கடினம்; இயற்கைதான் வெற்றி பெறுகிறது. அதை தடை செய்யப் புத்தகத்தின் அத்தனை விதிகளும் உபயோகப்படுவதில்லை..." என்று அபிப்பிராயத்தைச் சொல்லிக்கொண்டே போன அஜித் சந்திரன் வாய் சரேலென அடைத்து நின்றது. மிகவும் எதிர்பாராதவிதமாக மின்னல் வேகத்தில் அடிலன் சாட்டை அவன் கழுத்துப் பக்கத்தில் இறங்கியது. அடிலன் கடகடவெனச் சிரித்து, "பெண் அவமானப்படும்போது தகப்பன் இயற்கையையும் தடை செய்ய முடிவதில்லை அஜித்! நீ செய்த தர்க்க சாஸ்திரப் பிரசங்கத்துக்கு இன்னும் வெகுமானம் தருகிறேன் வாங்கிக்கொள்" என்று மீண்டும் சாட்டையை ஓங்கினான். ஆனால், இம்முறை சாட்டை அஜித் சந்திரன் மேல் விழவில்லை.

காமத்தில் அதுவரையில் மயங்கிக் கிடந்த உபாத்தியாயனின் மனம் சாட்டையடியால் கனவை இழக்கவே, அவன் கண்கள் இரண்டும் நெருப்புப் பொறிகள் போல் பிரகாசித்தன. அடிலனோ சித்ராதேவியோ சற்றும் எதிர்பாராத சம்பவங்கள் அடுத்த விநாடியில் நடந்தேறின. இரண்டாம் முறை கீழே இறங்கிய சாட்டையிலிருந்து சற்று அப்புறமாக நகர்ந்து தப்பிக்கொண்ட அஜித் சந்திரன் தனக்கும் அடிலனுக்கும் இடையிலிருந்த இடத்தை இரண்டடிகளில் தாண்டிச் சென்று அடிலனை அடைந்தான். மெல்லியதாய் நீண்டிருந்த அவன் கரங்களில் எவ்வளவு பலம் ஒளிந்திருந்ததென்பதை அடிலன் அன்றுதான் உணர்ந்து கொண்டிருக்க வேண்டும். முஷ்டியாகப் பிடித்து முகவாய்க் கட்டையில் பாய்ந்த வலது கரத்தாலும் இரும்பு போலத் தன் மென்னியைப் பிடித்த இடது கரத்தாலும் அடிலன் நிலை கலங்கி நின்றான். அடுத்த நிமிடம் காலொன்று அவன் கால்களை இடறவே அடிலன் மண்ணில் புரண்டான். அவன் கையிலிருந்த சாட்டை உபாத்தியாயன் கைகளுக்கு மாறிவிட்டது.

அடிலன் தான் அடிபட்டதைக்கூட அவ்வளவு பிரமாதமாகக் கருதவில்லை; பிராணன் போகிற மாதிரி இருக்கும் இந்த உபாத்தியாயனுக்கு ராக்ஷஸனைப் போன்ற தன்னை நிமிஷ நேரத்தில் மண்ணில் புரள வைக்கும் அத்தனைப் பலம் எங்கிருந்தது வந்தது என்று ஆச்சரியத்துடன் எழுந்திருந்தான். சித்ராதேவியையும் இந்த ஆச்சரியந்தான் கவ்வி நின்றது. ஆனால் அவ்விருவர் ஆச்சரியத்தையும் கலைத்தது அஜித் சந்திரனின் கடுமையான குரல்.

"அடிமைகளை குரூரமாக நடத்துவதற்கும் எல்லையிருக்க வேண்டும் என்பது எஜமானுக்கு இப்பொழுது புரிந்திருக்கும். அது மட்டுமன்று, சண்டையில் ஜெயிப்பதற்கு மாம்ஸ பலம் மட்டும் போதாது. சாஸ்திரீயமான யுத்த ஞானமும் வேண்டும் என்பதும் தெரிந்திருக்கும்" என்றான்.



அடிலன் ஏதோ பதில் சொல்லப் போனான். அஜித் சந்திரன் அவனைப் பேசவிடாமல் தன் பேச்சுத் தோரணையைச் சிறிது மாற்றி, "அடிலா! இதோ உன் சாட்டையால் என் கழுத்திலிருக்கும் காயத்தையும், அதிலிருந்து வரும் ரத்தத்தையும் பார். சாட்டை இப்போது என் கையிலிருக்கிறது. என்னால் உனக்கும் இந்த மாதிரி சன்மானத்தைக் கொடுக்க முடியும்" என்று சொல்லிக்கொண்டே சாட்டையின் வாரை உருவினான்.

சித்ரா நடுநடுங்கிப் போனாள். அந்த ஓர் அடி தன் தகப்பனார் மேல் விழுந்தால் அஜித் சந்திரன் வாழ்நாள் அன்றுடன் முடிந்துவிடும் என்பது அவளுக்குத் தெரியும். தகப்பனார் ஒரு குரல் கொடுத்தால் மாளிகையிலுள்ள வீரர்கள் வந்து உபாத்தியாயனைக் கண்ட துண்டமாக வெட்டி எறிந்து விடுவார்களென்பதைச் சித்ரா சந்தேகமறத் தெரிந்து கொண்டிருந்தாள். ஆகவே, "உபாத்தியாயரே! வேண்டாம், இந்தச் சண்டை இத்துடன் நிற்கட்டும்" என்று கெஞ்சினாள். அகங்காரமே உருவான அந்தப் பெண் கெஞ்சுவது அஜித் சந்திரனுக்கே ஆச்சரியமாயிருந்தது.

இதற்குள் எழுந்து சமாளித்துக்கொண்ட அடிலன், "சித்ரா! அவனிஷ்டப்படி விடு. அவனுக்கு வாழ்க்கையில் வெறுப்புத் தட்டிவிட்டது" என்றான்.

"அடிலா! உன்னிடம் அடிமையாய் இருக்கும் எவனுக்குத்தான் வாழ்க்கையில் வெறுப்புத் தட்டாது? ஆனால் சித்ராதேவி மன்றாடுவதால் உன்னை விட்டு விடுகிறேன்" என்று சொல்லிக் கையிலிருந்த சாட்டைப் பிடியை இரண்டாக உடைத்துத் தூர எறிந்தான்.

சித்ராவின் மனத்திலிருந்த சஞ்சலம் அடங்கியதால் பெருமூச்சு ஒன்று வெளிப்பட்டு அவள் அழகிய மார்பகத்தை ஒருமுறை ஏற்றி இறக்கியது. அந்த அமைதியால்

உபாத்தியாயனுக்காகத் தன் தந்தையிடம் பரிந்து பேசினாள்: "அப்பா! இந்த நாடகம் இந்தச் செண்பகச் சோலையுடன் நிற்கட்டுமே. இது வெளிப்பட்டால்..." என்று மேலே எதுவும் சொல்ல முடியாமல் இருந்தாள்.

"வெளிப்பட்டாலென்ன? உன் கௌரவத்துக்கு ஹானியாக இங்கு என்ன நடந்துவிட்டது?" என்று அஜித் சந்திரன் கேட்டான். சித்ரா பதில் சொல்லவில்லை.

"அடிலன் மகளை அடிமை நேசித்தான் என்பதை விட வேறு என்ன அவமானம் வேண்டும்? அத்தகையவனை அடிலன் உயிரோடு விட்டான் என்பதும் எவ்வளவு அகௌரவம்?" என்று கோபத்தால் துடித்துக்கொண்டே அடிலன் பதில் சொன்னான்: "டேய் அஜித்! நான் மாளிகைக்கு ஒரு குரல் கொடுத்தால் உன் உயிர் சிட்டுக் குருவியைவிட வேகமாய் ஆகாசத்தில் பறந்துவிடும்! உனக்காக சித்ரா மன்றாடுவதால் உன்னை உயிருடன் விடுகிறேன். என் அதிகாரத்திற்குட்பட்ட மலைவாசல் பிராந்தியத்திலிருந்து ஓடிவிடு. திரும்பி இந்த எல்லைக்குள் காலை வைத்தால் உன் தோலை உரித்துவிடுவேன். ஜாக்கிரதை" என்றான்.

"இந்த எல்லையை விட்டுப் போவதில் ஆட்சேபணை இல்லை. ஆனால், நீ கொடுத்த சாட்டையடிக்குப் பழி வாங்காமல் போகமாட்டேன். வீரன் வீரனோடு போரிடச் சாட்டையல்ல ஆயுதம், ஒரு வாள். போரிடுவோம். அதில் நானிறந்தாலும் சரி, உன் மகன் இறந்தாலும் சரி...!" என்ற அஜித் சந்திரனை இடைமறித்து, "என் மகனா?" என்றான் அடிலன்.

"ஆம்! என் கையால் ஓர் அடி தாங்க முடியாத வயோதிகனான உன்னுடன் நான் போரிடுவது பாரத நாட்டு க்ஷத்திரிய தர்மத்துக்குப் பொருந்தாது. உன் மகன் வாலிபன்.



என்னிடம் வாள் போரும் பயின்றிருக்கிறான். மாளிகைக்குப் போனதும் அவனை இரண்டு வாள்களுடன் அனுப்பு. நான் இங்கேயே இருக்கிறேன்" என்றான் அஜித் சந்திரன். அவனுடைய துணிச்சலைக் கண்டு அடிலனும் சித்ராவும் வியந்தே போனார்கள்.

"அஜித்! உனக்கு நிச்சயமாகப் பைத்தியம் பிடித்திருக்கிறது. உன் சின்ன எஜமான் உன்னிடம் வாளெடுத்துப் போரிடுவானா? அடிமையும் எஜமானும் சமமாகச் சண்டை போட்டால் மலைவாசலிலுள்ள என் குடிகள் என்ன நினைப்பார்கள்! கடைசி முறையாகச் சொல்கிறேன். இந்த இடத்தைவிட்டு ஓடிவிடு. மீண்டும் இந்த எல்லைக்குள் உன்னைப் பார்த்தால் கோதண்டத்தில் உன்னைக் கட்டி உயிர் போகும் வரையில் சாட்டையால் அடிக்கச் சொல்லுவேன். வா சித்ரா! இவன் தப்பித்துத் தொலையட்டும்" என்று சொல்லிக்கொண்டு சித்ராவின் கையைப் பற்றி இழுத்துக் கொண்டு மாளிகைக்காக நடக்கத் தொடங்கினான்.

சித்ரா கண்ணுக்கு மறையுமட்டும் அஜித் அவளைப் பார்த்துக்கொண்டே நின்றான். பிறகு கழுத்திலிருந்து வழிந்த ரத்தத்தைக் கையால் தொட்டுப் பார்த்தான். "அடிலன் இதற்குப் பதில் சொல்லித்தான் ஆக வேண்டும், க்ஷத்திரிய ரத்தம் சாட்டையால் சொட்டுவதா?" என்று முணுமுணுத்துக் கொண்டே கொஞ்சம் தொலைவில் தெரிந்த வில்லவர் வீடுகளை நோக்கி மெல்ல நடந்து சென்றான்.

கைபர் கணவாய்க்கு அருகில் வசித்துவந்த புருஷபுரத்து வில்லவர் ஒரு காலத்தில் மிகப் பிரசித்தமானவர்கள்! விஷந் தீட்டிய அம்புகளைக் குறி தவறாமல் எய்யும் அந்த பூர்வீகக் குடிகளின் பரம்பரைகள் ஒவ்வொரு படையெடுப்பின் போதும் பாரத நாட்டுக்குச் செய்துள்ள தியாகத்தைச் சொல்லி முடியாது. தளராத அவர்கள் தைரியமும் ஹூணர்

களின் கொடுமையால் தளர்ந்து கிடந்தது. பிடாரன் பெட்டிக்குள் அடங்கிய பாம்புபோல் புருஷபுரத்து வில்லவர் ஹூணர்களிடம் அடங்கிக் கிடந்தார்கள். வில்லவர் வீடுகள் அந்தப் பிராந்தியத்தில் சுமார் இரண்டாயிரம் இருக்கும். அவர்களுக்குக் கொஞ்சம் உடம்பில் தைரியத்தை மட்டும் புகுத்தினால் மலைவாசல் பிராந்தியத்திலுள்ள ஹூணர்களைத் தவிடு பொடியாக்கி விடலாமே என்ற நினைப்பில் அவர்கள் வீடுகளிருக்குமிடத்தை அடைந்து, "இங்கு உதயன் வீடு எது?" என்று விசாரித்தான். "அதோ அந்த வீடுதான்" என்று சிலர் சுட்டிக் காட்டினார்கள். அஜித் சந்திரன் அந்த வீட்டையடைந்தபோது அங்குக் கொட்டு மேளம் பலமாய் முழங்கிக் கொண்டிருந்தது. வாசலில் நின்று கொண்டு, "அதை அப்படிச் செய். இதை இப்படிச் செய்" என்று நாட்டாண்மை செய்துகொண்டிருந்த கிழவனான உதயன், அஜித் சந்திரனைப் பார்த்ததும், "யார் அரண்மனை உபாத்தியாயரா? நல்ல சமயத்திற்கு வந்தீர்கள். நமது குழந்தை காமினிக்கு இன்றைய தினம் கல்யாணம், தெரியுமல்லவா?" என்று வரவேற்றான்.

எங்கோ சுழன்று கொண்டிருந்த மனத்தைச் சிறிது திடப்படுத்திக் கொண்டு, "தெரியாதே!" என்றான் அஜித் சந்திரன்.

உதயனை ஏதோ தகவல் கேட்க அந்தச் சமயம் வீட்டுக்குள்ளிருந்து வெளியே வந்த காமினி, "அரண்மனையிலேயே சொக்கிக் கிடந்தால் வெளியே நடக்கிற விஷயம் எப்படித் தெரியும்" என்று சொல்லிச் சிரித்தாள். உபாத்தியாயன், புன்னகை தவழும் அவள் முகத்தைப் பார்த்தான். சந்தோஷமும் வெட்கமும் கலந்த காமினியின் புன்னகை அடுத்த விநாடி மறைந்து, அவள் முகத்தில் அளவிட முடியாத திகில் படர்ந்தது.

# 3. காமினி

**க**ட்டுப் புஷ்பங்களைத் தலையில் சூட்டிக்கொண்டு கல்யாணக் கோலத்திலிருந்த கட்டழகி காமினியின் முகத்தில் திகில் படர்ந்ததைக் கண்ட உதயன் திடுக்கிட்டான். காமினியின் அடுத்த வார்த்தைகள் அவன் கண்களைத் திறந்துவிட்டன. "தாத்தா! அதோ பார்" என்று அஜித் சந்திரனின் கழுத்தைச் சுட்டிக் காட்டினாள் காமினி. சாட்டை வார் பிய்த்துவிட்ட சதையிலிருந்து அப்பொழுதும் ரத்தம் லேசாக வழிந்து கொண்டிருந்தது.

அதைக் கண்ட உதயன் ஆச்சரியத்தாலும் பயத்தாலும் சிறிது நேரம் ஸ்தம்பித்து நின்றான். சாட்டை வார் அடியோ, கத்திக்குத்தோ, நாக்குத் துண்டிக்கப்படுதலோ உதயனுக்குப் புதிதல்ல. ஹூணர்கள் ஆதிக்கம் ஸிந்துநதி தீரத்தில் படர்ந்த நாளாய் இத்தகைய தண்டனையைப் பார்ப்பது அவனுக்குச் சர்வ சகஜமான சம்பவமாகி விட்டது. ஆனால் அந்த மாதிரி ஒரு தண்டனையை அரண்மனை உபாத்தியாயனுக்கு யாரும் துணிந்து அளிப்பார்களென்று அவன் சொப்பனத்தில் கூட நினைத்தது கிடையாது. குரூரமே உருவான அடிலனே உபாத்தியாயனிடம் மிகுந்த மதிப்பு வைத்திருந்தான் என்பதைப் புருஷபுரத்திலிருந்த எல்லோரும் அறிந்திருந்தார்கள். சித்ராதேவியிடம் அஜித் சந்திரன் கட்டுப்பட்டுக் கிடந்தான் என்பதும் வில்லவர் வீட்டுப் பெண்களுக்கு நன்றாகத் தெரியும். அஜித் சந்திரன் தன் எண்ணங்களை யாரிடமும் எடுத்துச் சொன்னதில்லை. சொல்ல வேண்டிய அவசியமும் இல்லை. ஆண் பிள்ளை மோகத்திலிருந்தா அதைப் பெண்கள் வெகு சுலபமாகக் கண்டுபிடித்து வி

கிறார்கள். அவன் அந்தப் பெண்ணைப் பார்க்கும் பார்வையும், அவளைப் பற்றி அவர்கள் பேச்செடுக்கும்போதெல்லாம் அவன் முகத்தில் ஏற்படும் அசட்டுச் சிரிப்பும் ஆண் பிள்ளையைச் சுலபமாகக் காட்டிக்கொடுத்து விடுகின்றன. பெண்களின் தீட்சண்யமான புத்தி இந்த விஷயங்களில் அதி துரிதமாக வேலை செய்வதோடு அந்த ரகஸ்யத்தை அடுத்த வீட்டுப் பெண்களிடம் பகிர்ந்து கொள்ள இஷ்டப் படுவதால் 'ரகஸ்யம்' என்று ஆண் பிள்ளைகள் நினைத்துக் கொண்டிருக்கும் விஷயம் அரை விநாடியில் அம்பலத்துக்கு வந்து விடுகிறது.

சித்ராதேவியுடன் அஜித் சந்திரன் தனிமையில் வேட்டைக்குச் சென்ற எவ்வளவோ சமயங்களில் அவன் நடவடிக்கைகளை வில்லவர் வீட்டுப் பெண்கள் கவனித் திருக்கிறார்கள். குதிரை லகானைக் கை பிடித்திருந்தாலும் உபாத்தியாயன் கண் மட்டும் மாணவியையே உற்றுப் பார்த்துக் கொண்டு செல்வதைப் பலமுறை பார்த்திருக் கிறார்கள். அவன் வில்வித்தை பழகத் தங்கள் வீடுகளுக்கு வரும்போதெல்லாம் சித்ராதேவியைப் பற்றிய கேள்விகளை அவனிடம் வீசுவார்கள். அவன் பதில் சொல்லப் படும் சங்கடத்தைக் கண்டு ஒருவருக்கொருவர் மின்னல் வேகத்தில் கண்களால் பேசிக்கொண்டு இதழ்களில் புன்முறுவல் காட்டுவார்கள். பெண்ணிடம் ஆண் அடிமைப்படுவதைப் பெண் உள்ளம் விரும்புகிறது. அடிமைப்படுபவன் யாரா யிருந்தாலும் சரிதான். அடிமைப்படுத்துபவள் யாராயிருந் தாலும் கவலையில்லை. தங்கள் இனத்தின் வெற்றியில் பெண்களுக்கு உள்ளூர ஏற்படும் மகிழ்ச்சியை அளவிட முடியாது.

ஆகவே உபாத்தியாயன் ரகசியம் அவனுக்கு ரகசியம். இந்த விஷயங்களைக் கடைசியாகத் தெரிந்து கொள்ளும்



தலைவிதியுள்ள பெண்ணின் தகப்பனுக்கு ரகசியம். வேறு யாருக்கும் ரகசியமல்ல. அரண்மனை என்று வில்லவர் அழைத்து வந்த அடிலன் மாளிகை மலையடிவாரத்தில் தனித்துத்தான் நின்றது. கட்டடம் தனித்து நின்றாலும் அதைச் சுற்றி கோட்டையே இருந்தாலும், அந்தமாதிரி ரகசியங்களை மூடிவைக்க முடிவதில்லை. மனக்கோட்டையையே திறந்து பார்க்கக்கூடிய ஊர்வம்பு கன வேகத்தில் இந்த விஷயங் களை அலசி விடுகிறது.

உபாத்தியாயனுடைய மன விகாரத்தையும் அடிலனுடைய குரூரத்தையும் நன்றாக உணர்ந்துகொண்டிருந்த உதயன், அஜித் சந்திரனுடைய கழுத்திலிருந்த சாட்டை யடியைப் பார்த்ததும் மேல்படி விவகாரம் ஏதோ முற்றி யிருக்கிறதென்று தீர்மானித்துக் கொண்டான். அடிலன் மதிப்புப் பெற்ற உபாத்தியாயன் மேல் கை வைக்க யாரும் துணிய மாட்டார்களென்பது உதயனுக்குத் தெரியும். அடித் திருந்தால் அடிலனைத் தவிர வேறு யாரும் அடித்திருக்க முடியாது. ஆகையால் 'ஏன் அடித்தான்? இந்த உபாத்தி யாயன் என்ன செய்திருப்பான்?' என்ற நினைப்புடன், "இதென்ன உபாத்தியாயரே?" என்று அஜித் சந்திரனைக் கேட்டான்.

"அடிமைகளுக்கு ஹூணர்கள் தரும் பரிசு."

"ஆனால், உபாத்தியாயருக்கு இது கிடைப்பது சுலப மில்லையே."

"கொடுப்பவர்கள் கொடுத்தால் சுலபம்."

"அப்படியானால் அடிலனே அடித்தானா? ஏன்?" என்று வினவினான் உதயன்.

காமினி அவர்களை மேலே பேசவிடாமல் "தாத்தா, இதைத் தெருவில் நின்று பேச வேண்டாம். அவரை உள்ளே

அழைத்து வாருங்கள். காயத்தைக் கழுவிப் பச்சிலை போடுகிறேன். பிறகு பேசலாம்" என்றாள்.

"சரியம்மா, நாங்கள் கொல்லைப்புறம் வருகிறோம். குடத்தில் யாரையாவது தண்ணீர் எடுத்து வைக்கச் சொல். அப்படியே மந்தாரை இலை இரண்டும் வாட்டிவை" என்று சொல்லி உதயன், அஜித் சந்திரனைக் கொல்லைப்புறமாக அழைத்துச் சென்றான்.

காமினி தன் கல்யாணத்தைக் கூடப் பொருட்படுத்தாமல் உபாத்தியாயனுக்கு வேண்டிய சிசுருக்ஷைகளைச் செய்தாள். அடிலனுடைய எவ்வளவோ குரூரச் செயல்களிலிருந்து அவர்களை அஜித் காப்பாற்றியிருக்கிறான். வில்லவர் குற்றம் செய்யும்போது அடிலன் தண்டனையிட்டால் அதைத் தான் நிறைவேற்றுவதாக அனுமதி பெற்று வருவான் அஜித். அவன் கொடுக்கும் சாட்டையில் வெளிக் கோபமும், கை அபிநயமும் இருக்கும். அடி மாத்திரம் மேலே விழாது. வீட்டைத் தீக்கிரையாக்க உத்தரவிட்டால் உத்தரவை உடனே நிறைவேற்றாமல் ஆறப்போட்டு அடிலன் சந்தோஷமாய் இருக்கும் சந்தர்ப்பங்களில் மன்னிப்பு வாங்கிக் கொடுப்பான்.

ஆகையால் அஜித் சந்திரன் வார்த்தை, வில்லவருக்கு வேத வாக்கியமாயிருந்தது. அவன் க்ஷேமம், அவர்கள் க்ஷேமமாயிருந்தது. அவனுக்கிருந்த துணிச்சல் அவர்களுக்கும் இருந்திருந்தால் அடிலன் அவர்களை அரை விநாடி ஆள முடியாது. கழுத்தைக் கழுவி காமினி அவனுக்குப் பச்சிலை வாட்டிப் போட்ட பின்பு உதயனுடன் தனிமையாயிருக்கையில் அஜித் சந்திரன் இதைத்தான் சொன்னான். "உதயா! வில்லவர் வீடுகள் இரண்டாயிரம் இருக்கின்றன. வீட்டுக்கொரு ஆண் கிளம்பினாலும் அடிலனை இருந்த இடம் தெரியாமல் அழித்து விடலாம். அந்த பயம் அவனுக்கிருந்தால் இந்த மாதிரி துணிச்சலுடன் அடிக்கமாட்டான். நான் பட்ட அடிக்காகச் சொல்லவில்லை. உயிரையும் நான் அதிகமாக மதிக்கவில்லை. வாள் போரில் மடிவதானால் சம்மதம். ஆனால், ஆடுமாடுகள் மாதிரி அடிபட இஷ்டமில்லை" என்றான்.



"உபாத்தியாயரே! நீங்கள் சொல்வது உண்மை. ஆனால் வில்லவர் எவ்வளவு துன்பப்பட்டிருக்கிறார்கள் பாருங்கள். வீடுகளோ எதிரிகள் வரும் மலைவாசலில். எந்தப் படையெடுப்பிலும் முதல் காவு இவர்கள்தான். அடிக்கடி குடும்பங்கள் நிர்மூலமாக்கப்படுகின்றன."

"அதனால் உங்கள் ஜாதி நசிந்து விடுவதில்லை. கிளைகளைக் கழித்தாலும் ஜீவனுள்ள மரம் திரும்பக் கிளைக்குமல்லவா?"

"தொடர்ச்சியாகக் கழித்தால் எந்த மரமும் பட்டுவிடும். காலம் விட்டுக் கழிக்க வேண்டும். ஐம்பது வருஷத்துக்கொரு முறை படையெடுப்பு வந்தால் சமாளிக்கலாம். ஹூணர்கள் மேன்மேலும் வந்து கொண்டேயிருக்கிறார்கள். பத்து வருஷத்தில் மூச்சு விடவும் சமயம் அளிக்காமல் தொடர்ச்சியாகத் தாக்கியிருக்கிறார்களே. அவர்கள் செய்வதோ நமக்குத் தெரிந்த தர்ம யுத்தமன்று. எந்த வரம்புக்கும் உட்படாத போர். தவிர மகாராஜாவிடமிருந்து எந்த உதவியும் இல்லை," என்றான் உதயன்.

அஜித் சந்திரன் இதற்குப் பதிலே சொல்லாமல் மௌனமாய் உட்கார்ந்து கொண்டிருந்தான். உதயன் சொல்லுவதில் ஏராளமான உண்மையிருக்கிறதென்பது அவனுக்குத் தெரியும். மகாராஜாவின் மேல் பிசகு சொல்லிப் பிரயோஜனமில்லை யென்பதையும் அவன் அறிவான். வாலிப வயதில் ஹூணர்களை முறியடித்துப்

பாரதத்தின் எல்லையிலிருந்து விரட்டிய ஸ்கந்த குப்தனுக்கு வயதாகி விட்டது. வாலிபத்திலிருந்த பலமில்லை. எவ்வளவோ ராஜாங்கக் கஷ்டம். ஆனால், குடும்பங்களை வருஷந் தவறாமல் பலி கொடுத்து வரும் வில்லவர்களிடம் அதைச் சொல்லி என்ன பயன்? இருந்தாலும் ஸ்கந்த குப்தன் மேல் தவறு சொல்வதைக் கேட்டுக் கொண்டிருக்க முடியாமல் "உதயா! மகாராஜா என்ன செய்வார்? அவருக்கும் ராஜாங்கக் கஷ்டங்கள் மாத்திரமல்ல குடும்பக் கஷ்டங்கள் வேறு இருக்கின்றன. அடுத்தபடி முடிசூடுவது யார் என்று தகராறு இருக்கிறது" என்றான்.

"மகாராஜாவின் குடும்பக் கஷ்டம் பிரஜைகளுக்கு அனர்த்தமாக முடிகிறது. அவர்கள் முடிசூடும் போட்டியால் ஏழைகளின் தலைகள் மலை வாசலில் உருளுகின்றன" என்றான் உதயன் வெறுப்புடன்.

உதயன் கஷ்டத்தால் அவ்விதம் பேசுகிறான் என்பதால் அஜித் அவனிடம் அனுதாபமே பட்டான். தன் ஜாதியின் கஷ்டங்களை நினைத்த உதயனுக்கு வெளியே கேட்டுக் கொண்டிருந்த மேளச் சத்தங்கூடக் காதில் விழவில்லை. அவன் துயரத்தைப் பார்த்த அஜித் பேச்சை மாற்றித் தன் கதையை விவரமாகச் சொன்னான். விஷயத்தைக் கேட்ட உதயன் அஜித் சந்திரனை நோக்கி, "உபாத்தியாயரே! நீர் செய்த காரியத்துக்கு அடிலன் உம்மை உயிரோடு விட்டது எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது" என்றான்.

"உயிர் கிடக்கட்டும் உதயா! என் ஜன்மத்தில் இதுவரை நான் யாரிடமும் அடிபட்டதில்லை. இதற்குப் பழிவாங்க வேண்டும். அடிலன் மகனுடன் நான் வாளெடுத்துப் போராடி வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்ள வேண்டும். இதை அவனிடம் தெரிவிக்க நீ ஒருதரம் அரண்மனைக்குப் போய் வரவேண்டும்" என்றான் அஜித் சந்திரன்.



"போகலாம்; வரமுடியாது" என்று இகழ்ச்சியாகப் புன்முறுவல் செய்தான் உதயன்; அத்துடன் நிறுத்தவில்லை. "உபாத்தியாயரே! பிராணனை விட வழி எவ்வளவோ இருக்கிறது. இதற்காக நான் அடிலன் வீட்டுக்குப் போக வேண்டிய அவசியமில்லை. உமது பைத்தியத்தையும் கொஞ்சம் குறைத்துக்கொள்வது நல்லது. இன்று நம் காமினிக்குக் கல்யாணம். இந்த ஒரு நாளைக்கு என்னை உயிருடன் விட்டுவிடுங்கள். குழந்தையின் கல்யாணத்தைப் பார்த்துவிட்டு நாளைக்கு வேண்டுமானால் அடிலன் வீட்டுக்குப் போய்க் கோதண்டத்தில் தொங்கலாடுகிறேன். நீங்களும் தயவு செய்து இன்று ஒரு நாளைக்கு பிராணனை வைத்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லிவிட்டு அஜித் சந்திரனை மணப்பந்தலுக்கு அழைத்துச் சென்றான்.

காமினியின் கல்யாணம் சம்பிரதாயம் சிறிதும் மாறாமல் நன்றாக நடந்தது. மண்டபத்தில் வில்களாலும் அம்புகளாலும் அலங்கரித்துப் புஷ்பத் தோரணங்களை எங்கு பார்த்தாலும் கட்டியிருந்தார்கள். மாப்பிள்ளை பல்தேவ் பெயருக்குத் தகுந்தபடி வாட்ட சாட்டமாக இருந்தான். அஜித் சந்திரனும் உதயனும் மணப்பந்தலுக்கு வந்ததும் தம்பதிகள் அவ்விருவரையும் வணங்கினார்கள். "என்ன காமினி! முரடனான பல்தேவனையே கைக்குள் போட்டுக்கொண்டு விட்டாயே" என்று அஜித் பரிகாசம் செய்தான். காமினி வெட்கத்துடன் அஜித் சந்திரனைப் பார்த்துச் சிரித்தாள். மலை போலிருந்த பல்தேவனும் கொஞ்சம் சிரமத்துடன் உடம்பை நெளித்துத் தனக்கிருக்கும் சங்கோஜத்தை வெளிப்படுத்தினான். தோழிகள் காமினியைக் கேலி செய்தார்கள். பல்தேவனைச் சேர்ந்த வாலிப முரடர்கள் அவனை வம்புக்கிழுத்தார்கள்.

அன்று முழுவதும் கலியாண வீடு கோலாகலத்தில் கழிந்தது. இரவில் இன்னும் அதிகக் குதூகலத்துக்கு ஏற்பாடு

நடந்திருந்தது. ஊர்வலத்தின்போது ஈட்டிப் போர், சிலம்ப வேடிக்கைகள், அம்பு எய்தல் முதலிய வேடிக்கைகளுக் கெல்லாம் தயார் செய்திருந்தார்கள். குறித்த காலத்தில் ஊர்வலம் கிளம்பியது. சந்திரோதயமான சிறிது நேரத்திற் கெல்லாம் இரண்டு குதிரைகள் கட்டிய திறந்த வண்டியில் மஞ்சம் அமைத்துத் தம்பதிகள் உட்கார்ந்து சென்றார்கள். வில்லவர் சிலர் தூர மரங்களில் அம்புகளைக் குறி வைத்து எய்தார்கள். ஆங்காங்கு ஊர்வலம் நின்று ஈட்டிக்காரர்கள் சண்டையிட்டுக் காட்டினார்கள். பந்தங்களின் வெளிச்சத் திலும் சந்திர ஒளியிலும் நகைகள் மின்ன பெண்கள் கூட்டமாக நடந்து சென்றார்கள். அவர்கள் சிரிப்பொலி அடிக்கடி ஈட்டிகளின் சத்தத்தோடு சுருதி சேர்ந்து இன்ப நாதத்தை எழுப்பின. ஊர்வலத்தின் கடைசியில், பெண் களுக்கும் பின்பாக அஜித் சந்திரன் உதயனோடு நடந்து கொண்டிருந்தான்.

இப்படி உல்லாசமாகப் பேரிரைச்சலோடு சென்று கொண்டிருந்த ஊர்வலத்தைத் திடுதிடுவென்ற குதிரைக் காலடிகள் சற்று நிதானப்படுத்தின. உதயன் முன்னால் ஓடி ஊர்வலத்தின் விளையாட்டுகளை நிறுத்தி ஓர் ஓரமாக செல்லும்படி ஆக்ஞாபித்தான். பின்னால் வெகு வேகமாக வந்திருந்த குதிரைகளுக்கு ஊர்வலம் வழிவிட்டது. வேட்டை யாடிவிட்டுத் தன் சகாக்களுடன் வந்துகொண்டிருந்த அடிலன் ஊர்வலத்தை அடைந்ததும் குதிரையின் வேகத் தைச் சற்று அடக்கினான். மற்றவர்களும் ஒருகணம் நிதானித் தார்கள். ஹூணர்களைக் கண்ட வில்லவர் சப்த நாடிகளும் அடங்கி நின்றார்கள். எதிரே நடுங்கிக் கொண்டு நின்ற உதயனைப் பார்த்த அடிலன், "உதயா! யாருக்குக் கல்யாணம்" என்று விசாரித்தான்.

"என் பேத்திக்குத்தான்."— உதயன் பணிவுடன் சொன்னான்.



அடிலன் மஞ்சத்தில் அமர்ந்திருந்த காமினியைப் பார்த்தான். குடியால் சிவந்து வேட்கையால் அலுத்திருந்த அவன் கண்களில் ஆச்சரியம் அதிகரித்தது. "உதயா, இதுவரை அழகான பேத்தி உனக்கிருக்கிறாளென்று தெரியாதே" என்று சொல்லிக்கொண்டே, "பெண்ணே! இப்படி வா" என்று ஆக்ஞாபித்தான்.

மாப்பிள்ளை பல்தேவ் மலைபோல் வளர்ந்திருந்தானே யொழிய அவன் புத்தி அவ்வளவு சூட்டிகையானதன்று. புத்தி யில்லாதவன் பேசாமலாவது இருந்திருக்கலாம். ஆனால், 'காமினிக்கு என்ன நேருமோ? இந்தப் படுபாவி கண்போட்டு விட்டானே!' என்ற திகிலில், "அவளைக் கூப்பிடாதீர்கள் மகராஜ்! அவளுக்குப் பதில் தாங்கள் சொல்லும் எல்லா வேலைகளையும் நான் செய்கிறேன்," என்று கெஞ்சிக் கொண்டே வண்டியிலிருந்து குதித்து ஓடிவந்து அடிலன் குதிரையின் அருகில் நின்று காலைப் பிடித்துக் கொண்டான்.

"இந்த மடையன் யார்?" என்றான் அடிலன்.

"மாப்பிள்ளை" என்றான் உதயன்.

"அது தெரிகிறது; இவன் பெயர்?"

"பல்தேவ்."

"சரியான பெயர்!" என்று ஆமோதித்த அடிலன், "மடையா! விலகி நில்!" என்று அக்ஞாபித்து, "பெண்ணே! இப்படி வா" என்றான்.

வில்லையும் அம்பையும் ஈட்டியையும் ஏந்தி நின்ற அத்தனை வீரர்களில் ஒருவனுக்குக்கூட அடிலனை எதிர்த்துப் பேசத் தைரியமில்லை. அவர்களைப் பற்றிக் கொண்டிருந்த கொஞ்சநஞ்ச நல்ல அபிப்ராயத்தையும் இழந்த அஜித் சந்திரன் ஒரு மூலையில் நின்று என்ன நடக்கிறதென்று பார்த்துக் கொண்டிருந்தான்.

காமினி பயத்துடன் வண்டியிலிருந்து இறங்கி அடில னிடம் தயங்கித் தயங்கிச் சென்றாள். தன் காலடியில் நின்ற காமினியை அடிலன் உற்றுப் பார்த்தான். இடது கையால் குதிரை லகானைப் பிடித்தவண்ணம் வலது கையால் அவள் முகத்தை நிமிர்த்தி ஆராய்ந்தான். குற்றமற்ற அந்த முகத் தாமரையில் லயித்த அடிலன் கண்களில் கூடக் காமவெறி ஒரு விநாடி அகன்றது. "உன் பெயரென்ன?" என்றான் அடிலன்.

"காமினி."

"உன் அழகுக்குத் தகுந்த பெயர்" என்று சொல்லி மாப்பிள்ளை பல்தேவைப் பார்த்தான்.

பல்தேவ் மீண்டும் தன் வாயைத் திறந்து அடிலன் கோபத்தைக் கிளறினான். "மகராஜ்! அவளை ஒன்றும் செய்ய வேண்டாம். இன்றுதான் எங்களுக்குக் கலியாண மாயிற்று" என்று அடிலன் காலைப் பிடித்துக் கொண்டான். காலை மீண்டும் பிடித்த கையைச் சாட்டைப் பிடியால் அடித்து விலக்கிய அடிலன், "மடையா! உன் மனைவியை யார் என்ன செய்து விட்டார்கள்? நான் அவளைப் பார்த்துப் பேசிக் கொண்டிருக்கையில்..." என்று சொல்லிக் கொண்டு போகையில் மாப்பிள்ளை குறுக்கே பாய்ந்து, "மகராஜ்! நீங்கள் பேசுவதோடு நிற்கவில்லை, தொடு கிறீர்களே" என்றான்.

அடிலன் கோபம் எல்லை மீறிவிட்டது. "டேய்! நான் என்ன செய்யலாம், என்ன செய்யக்கூடாது என்று தீர்ப்புச் செய்ய உனக்கு என்ன துணிச்சல்? அடிலனை யாரென்று நினைத்தாய்?" என்று கர்ஜித்துத் தன் வீரர்களைப் பார்த்து, "இந்தப் பெண்ணை அரண்மனைக்குக் கொண்டு வாருங்கள்" என்று உத்தரவிட்டு லகானை இழுத்துக் குதிரையை நகர விட்டான்.



உதயனும் பல்தேவும், "மகராஜ்" என்று கதறினார்கள். கூட்டத்தினர் திக்பிரமை பிடித்து நின்றார்கள். அடிலன் வீரர்களில் இருவர் காமினியைப் பிடிக்க நெருங்கினார்கள். "ஐயோ! என்னிடம் வராதீர்கள்" என்று காமினி கூச்ச லிட்டாள். அந்த சமயத்தில் அருகே வந்த வீரன் ஒருவனும், "ஐயோ" என்று கூச்சலிட்டுத் தரையில் சாய்ந்தான். அவன் கழுத்தில் வில்லவரின் விஷந் தீட்டிய அம்பு பாய்ந்திருந்தது. இந்தத் துணிகரச் செயலை யார் செய்திருப்பார்கள் என்று அம்பு வந்த திக்கை நோக்கினான் உதயன். ஓர் அம்பு செலவழிந்து விடவே இரண்டாவது அம்பை வில்லில் மாட்டி நாணை இழுத்துக் காமினியை அணுகிக் கொண் டிருந்த இரண்டாவது வீரனுக்காகக் குறி வைத்துக் கொண் டிருந்தான் அஜித் சந்திரன்.

காமினியை நெருங்கிய இரண்டாவது வீரன் பயந்து குதிரையைத் திருப்பிக்கொண்டு ஓடிவிட்டான். ஆனால், அஜித் சந்திரன் வெற்றி ஒரு விநாடிதான் நிலைத்தது. அடுத்த நிமிஷம் சுமார் இருபது குதிரை வீரர்கள் தடதடவென ஊர்வலத்தில் புகுந்தார்கள். அவர்களுக்குத் தலைமை வகித்து அடிலனே வந்தான். "யாரவன் அம்பு எய்தவன்?" என்று விசாரித்தான் அடிலன்.

"நான்தான்!"

ஊர்வலத்தின் கோடியிலிருந்து வந்த சப்தத்தை நோக்கி கண்களைச் செலுத்திய அடிலன் கோபம் பன்மடங்கு அதிக மாயிற்று. "யார்... உபாத்தியாயனா? உனக்கு உயிர் வெறுத்து விட்டதா?"

"இல்லை; மானம் பெருத்துவிட்டது அடிலா! இன்னோர் அம்பும் தயாராயிருக்கிறது. இந்தா, இத்துடன் உன் அக்கிரமம் உலகத்திலிருந்து ஒழியட்டும்," என்று சொல்லி அம்பை எய்தான்.

பல யுத்தங்களில் பயின்றுள்ள அடிலன் குதிரையைத் தட்டிப் பாய வைத்து அதன் உடலில் அம்பைத் தைக்கச் செய்து, குதிரை விழுமுன் லாகவமாக அப்புறம் குதித்தான். உடனே இடிபோன்ற குரலில் கட்டளையிட ஆரம்பித்தான். “இந்த அடிமைகளை அடித்து விரட்டுங்கள். அந்தச் சிறுக்கியையும் உபாத்தியாயனையும் பிடித்து வாருங்கள். இங்கு எவனாவது அரை விநாடி நின்றால் ஒழித்துக் கட்டுங்கள்” என்றான்.

அடுத்த விநாடி ஊர்வலம் அமளிப்பட்டது. குதிரை வீரர்கள் பாதசாரிகளான வில்லவர்மேல் பாய்ந்தார்கள். இரு வீரர்கள் காமினியைக் கரகரவென்று இழுத்துச் சென்றார்கள். உபாத்தியாயன் எதையும் சட்டை செய்யாமல் மீண்டும் ஓர் அம்பை வில்லில் பொருத்தினான். நாணை இழுக்குமுன் பிரம்மாண்டமான ஒரு குதிரை அவன் தலை மேல் பாய்ந்தது. ஈட்டியின் நுனி ஒன்று தலையில் பலமாகத் தாக்கியது. அஜித் சந்திரனுக்கு உலகமே இருட்டிவிட்டது போல் தோன்றியது. ஸ்மரணை எங்கோ பறந்துவிட்டது.

# 4. உணர்ச்சியின் புரட்சி

மனிதனுக்கு எண்ணற்ற உணர்ச்சிகளை இறைவன் படைத்திருக்கிறான். ஒவ்வோர் உணர்ச்சியின் குணமும் தனித்தனியாக இருப்பது போல் தோன்றினாலும், ஓர் உணர்ச்சிக்கும் இன்னோர் உணர்ச்சிக்கும் நெருங்கிய சம்பந்தம் இருந்துகொண்டே இருக்கிறது. சமுத்திரத்தின் அலைகளில் ஒன்று எழுந்து முடிந்தவுடன் எப்படி இன்னோர் அலை எங்கிருந்தோ பிரம்மாண்டமாகக் கிளம்பு கிறதோ, அந்த மாதிரியே மனித உணர்ச்சியில் ஒன்று நம்மை வளைத்து ஆட்டிவிடப் போகும் சமயத்தில் இன்னோர் உணர்ச்சி அதைவிடப் பெரிதாகக் கிளம்பி நம்மை ஆட்கொள்ளுகிறது. இப்படி ஓர் அலையிலிருந்து இன்னோர் அலைமேல் தாவிச் சென்று நாட்கள் கடப்பது தெரியாமல் வாழ்க்கை யாத்திரையை நடத்துகிறோம்.

உதாரணமாக அனுதாபம், அன்பு, ஆசை, இன்பம் என்ற உணர்ச்சிகளை எடுத்துக் கொள்வோம். இந்த உணர்ச்சிகள் நான்கும் நால்வகைப்பட்டவை. ஆனால் அனுதாபத்திலிருந்து அன்பு முளைக்கிறது. அன்பு எந்த வஸ்துவிடத்தில் ஏற்படு கிறதோ அதை அடைய ஆசைப்படுகிறோம். ஆசை பூர்த்தி யாகும் நிலைதான் இன்பம். இப்படி நெருக்கமாகத் தொடுக்கப்பட்டிருக்கும் இந்த உணர்ச்சிகளிலிருந்து யாரும் விடுபடுவதில்லை. சித்ராதேவி மட்டும் எப்படி விடுபடுவாள்?

காலையில் சண்பகத் தோட்டத்திலிருந்து திரும்பி வந்தது முதல் அவள் மனம் ஒரு நிலையில் இல்லாமல் சதா அஜித் சந்திரனைச் சுற்றியே பலவிதமாக வட்டமிட்டுக்

கொண்டிருந்தது. அன்று பகலில் கூட என்ன சாப்பிடுகிறோமென்பதை அறியாமலே சாப்பிட்டாள். வேலைக்காரர்கள் கேட்ட கேள்விகளுக்குச் சம்பந்தமில்லாத பதில்களைச் சொன்னாள். தகப்பனுடன் வழக்கம் போல் வேட்டைக்குச் செல்ல மறுத்துத் தன் அறையில் தனிமையை நாடினாள். ஆண் பெண் உறவில் ஒருவரைப் பற்றி மற்றொருவருக்கு எழும் எண்ணங்கள் புத்தியில் சஞ்சரிக்க ஆரம்பித்து விட்டால் வேற்று மனிதர்கள் வேம்பாக இருப்பார்கள். இந்த எண்ணங்களின் சஞ்சாரத்துக்குத் தனிமையால் கிடைக்கும் தடையற்ற சுதந்திரம் அத்தியாவசியமானது.

ஆகையால்தான் அறையில் பஞ்சணையில் படுத்துக் கொண்ட சித்ராதேவி காலை நிகழ்ச்சிகளை ஒவ்வொன்றாக நினைத்துப் பார்த்துக் கேள்வி சமாதானங்களைத் தானே சொல்லிக் கொண்டாள். தன் தகப்பனார் எவ்வளவோ அடிமைகளுக்குக் கசையடிகள் கொடுப்பதை அவள் பார்த்திருக்கிறாள். ஆனால் உபாத்தியாயனை அடித்தபோது மட்டும் ஏன் தன் மனம் தாளவில்லை என்று யோசித்தாள். அதற்குக் காரணம் அவன் அழகா? உயரமா? அல்லது சதா ஈட்டிகள் போல் பிரகாசிக்கும் அந்த இரு விழிகளா? அதெல்லாம் எதுவுமில்லை, நெடுநாள் பழகிய தோஷம். அதனால் ஏற்பட்ட அனுதாபம். இவ்வளவேதான் என்று சொல்லிக் கொண்டாள். அஜித் சந்திரனிடம் உண்டானது அனுதாபமாயிருந்தால் அவன் அழகு, உயரம், கண்கள் இவற்றைப் பற்றி என்ன கவலை? அவனிடம் ஏற்பட்டது அன்புதானா?

இந்த நினைப்பில் அவள் கர்வம் குறுக்கிட்டது. 'சீ அடிமையிடம் அன்பா! இல்லை, இல்லை; அது அனுதாபந்தான். பாடம் சொல்லிக் கொண்டதால் ஏற்பட்ட பரிவுதான்' என்று தன்னைக் கடிந்துகொண்டாள். 'இருந்தாலும் உபாத்தி



யாயர் என்னிடம் அப்படியெல்லாம் பேசியிருக்கக் கூடாது. அதுவும் என் கையைப் பிடித்து இழுத்து...'

இந்த இடத்தில் அவள் எண்ணங்கள் உடைந்து உடல் முழுவதும் இன்பம் பரிமளித்தது. யௌவனம் துளிர்த்துப் பளபளவென மின்னிய அவள் உடல் ஒருமுறை பஞ்சணையில் புரண்டது. பருவத்தின் வேட்கையால் இதழ்களில் மயக்கமான புன்முறுவலும் ஓடியது. மல்லாந்து படுத்து அறையின் கூரையிலிருந்த வேலைப்பாடுகளைக் கண்கள் பார்த்தன. கண்களில் ஒரு வெட்கங் கலந்த வெறி இருந்தது. அவள் உடலில் இயற்கையாகக் குன்றிப் போயிருந்த இடை முதலிய வளைவுகள், வெட்கத்தால் இன்னும் அதிகமாகக் குன்றிப் போயின.

இத்தகைய எண்ணங்களைச் சித்ராதேவி உதறித் தள்ளப் பார்த்தாள். ஆனால் உணர்ச்சிகளிலிருந்து அவளால் விடுபட முடியவில்லை. அனுதாபத்திலிருந்து அன்பும், அன்பிலிருந்து ஆசையும், ஆசையின் வேகத்தினால் இன்ப அலைகளும் அவள் புத்தியில் ஓட ஆரம்பித்து, அவள் உடலை இல்லாத பாடெல்லாம் படுத்தி வைத்தன. ஆனால் அந்தஸ்தினால் ஏற்பட்ட கர்வம் மட்டும் உண்மையை ஒப்புக் கொள்ள மறுத்தது.

இந்த நிலையில் நாள் முழுவதையும் எப்படியோ கடத்திய சித்ரா, மாலையில் உப்பரிகைக்கு வந்து தூரத்தில் தெரிந்த ஹிந்துகுஷ் மலையுச்சிகளைப் பார்த்துக் கொண்டு நின்றாள். எஜமானியின் சஞ்சலமான நிலையைக் கண்ட தோழி, "அம்மா, உடம்புக்கு ஏதாவது..." என்று ஆரம்பித்தாள்.

"ஒன்றுமில்லை" என்ற பதில் பளிச்சென்று வந்தது.

"என்ன பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்!"

"ஹூம்... காலையில் வேட்டைக்குப் போன தகப்பனார், வரவில்லையே என்று பார்க்கிறேன்."

தோழி மேலும் ஏதோ கேள்விகளைக் கேட்க ஆரம்பித்தாள். சித்ராதேவி விழித்த விழிகளில் அக் கேள்விகள் வாயிலிருந்து கிளம்பவே இல்லை.

"நீ கீழே போய் விருந்தினர்களைக் கவனி. நான் சற்றுப் பொறுத்து வருகிறேன்" என்று சித்ராதேவியின் சொற்களால் துரத்தப்பட்ட தோழி வெகு வேகமாகப் படிகளில் இறங்கிச் சென்றுவிட்டாள்.

அடிலன் மாளிகையில் அன்று விருந்தினர்கள் ஏராளமாக வந்திருந்தார்கள். அவர்கள் சாதாரண விருந்தினர்கள் அல்ல. கபூல் என்று இப்பொழுது அழைக்கப்படும் கபீச புரத்திலிருந்து வந்திருந்தார்கள். கபீசம் ஹூணர் வசமாகிப் பதினைந்து வருஷங்களுக்கு மேல் ஆகிவிட்டன. அடிக்கடி அடிலன் மாளிகையில் கூடி ஹூணர்கள் ஆட்சியை ஸிந்து நதிக்கு அப்பால் எப்படிப் பரப்பலாம் என்று யோசித்து வந்தார்கள். அத்தகைய முக்கிய யோசனையை முன்னிட்டே கபீசத்தின் தலைவன் தன் பிரபலமான படைத் தலைவர்களில் நால்வரை அடிலனிடம் அனுப்பியிருந்தான். அன்று சித்ராதேவிக்குப் பிரதேச விஸ்தரிப்பிலோ, வேறு விஷயங்களிலோ மனம் செல்லாததால் அவள் வந்திருந்த விருந்தினர்களோடு கலந்து கொள்ளவே இல்லை. கீழே நடந்துகொண்டிருந்த ஹூண ஸ்திரீகளின் பேச்சொலிகள் காதில் விழுந்து கொண்டிருந்தனவேயொழிய புத்தியில் காலை நிகழ்ச்சிகளைத் தவிர வேறொன்றும் ஏறவே இல்லை. புத்தி யோசனையிலிருந்ததால் காலம் கன வேகமாகப் பறந்தது. அடிலன் அரண்மனையை நெருங்குவதற்கு அறிகுறியாகக் குதிரைக் காலடிகள் பலமாகக் கேட்டன.

சித்ராதேவி மாடியிலிருந்தே அடிலன் வருகையைக் கவனித்துக் கொண்டிருந்தாள். குதிரையிலிருந்து இறங்கிய அடிலன் உள்ளே வராமல் மாளிகை பக்கவாட்டுக்காகச்



சென்றான். சற்று நேரத்தில் மாளிகையின் முதல் கட்டுக்கும் இரண்டாம் கட்டுக்கும் இடையிலிருந்த வெளி முற்றத்தில் இரைச்சல் பலமாகக் கேட்டது. மாடியின் கைப்பிடியிலிருந்து சித்ராதேவி எட்டிப் பார்த்தாள். பத்துப் பதினைந்து வேலைக்காரர்கள் எதையோ சூழ்ந்து கொண்டிருந்தார்கள். கீழே சென்று என்ன நடக்கிறதென்பதைப் பார்க்கலாமென்று சித்ராதேவி திரும்பினாள். அதற்குள் வெகு வேகமாக மாடிக்கு ஓடி வந்த தோழி, "அம்மா! அம்மா! மலைவாசல் வில்லவர்கள் புரட்சி செய்து விட்டார்களாம். அவர்களோடு சேர்ந்து கொண்ட ஒருவன் உங்கள் தகப்பனாரின் வீரர்களில் ஒருவனைக் கொன்றுவிட்டானாம். அவ்வளவு துணிச்சல் உள்ளவன் யாரென்று நினைக்கிறீர்கள்?" என்றாள்.

"யார்?"

"நமது உபாத்தியாயர்?"

சித்ராதேவி கற்சிலைபோல் நின்றுவிட்டாள்.

"அவரைத் தலையில் ஈட்டியாலடித்துக் கட்டிக் கொண்டு வந்திருக்கிறார்கள்" என்றாள் தோழி தொடர்ந்து.

"உயிர்...?" என்று மார்பில் கையை வைத்துக் கொண்டு சித்ராதேவி கேட்டாள்.

"இன்னும் இருக்கிறது. மூர்ச்சை தெளிவிக்கத்தான் சிகிச்சை நடக்கிறது. மூர்ச்சை தெளிந்ததும் கோதண்டத்தில் கட்டப் போகிறார்கள்."

சித்ராதேவிக்கு மூச்சே நின்றுவிடும் போலிருந்தது. மிகுந்த வேதனையுடன் சுவரின் கைப்பிடியில் சாய்ந்தாள்.

"உபாத்தியாயன் விழித்துக் கொண்டான்" என்ற கூச்சல் கீழே இருந்து வந்தது. வெகு துரிதமாகப் படியிலிருந்து இறங்கிச் சித்ராதேவி கீழே ஓடி வெளி முற்றத்தை அடைந்தாள்.

வேலைக்காரர்களும் விருந்தினர்களுமாகப் பெருங் கூட்டம் அங்கே நின்றுகொண்டிருந்தது. கூட்டத்தை விலக்கிக் கொண்டு சித்ரா எட்டிப் பார்க்கப் போனாள். அவள் அருகில் மிக உயரமாய் நின்றிருந்த தோரமானா என்ற ஹூணன், அவளைச் சிறிது பிடித்து நிறுத்தி, உபாத்தியாயனுக்கு உங்கள் தகப்பனார் இப்பொழுதுதான் உயிர் கொடுத்திருக்கிறார். கொஞ்சம் பொறுங்கள்" என்றான்.

"எதற்காக சிகிச்சையளித்து உயிர்ப்பித்தார்?"

"சாவை அளிப்பதற்காக. பிறப்பும் இறப்பும் மனிதனுக்கு மாறிமாறி வருகிறதல்லவா?" என்று சொல்லிப் புன்முறுவல் செய்தான் தோரமானா.

சித்ராதேவி அப்பொழுது ஹாஸ்யத்தில் இறங்கும் மனப்பான்மையில் இல்லை. மூர்ச்சையாயிருக்கும் ஒரு மனிதனுக்குச் சிகிச்சையளித்து அவனைக் கசையாலடித்துக் கொல்லுவதைப் போன்ற மிருகத்தனம் ஹூண ஸ்திரீயான அவளுக்குக்கூடப் பொறுக்கவில்லை. ஆனால் அடிலனையோ அங்கிருந்த இதர ஹூணர்களையோ எதிர்க்கத் துணிவில்லாதவளாய்ச் செயலற்று நின்றிருந்தாள்.

இதற்குள் வேலைக்காரர்கள் அஜித் சந்திரன் கைகளை உயரத் தூக்கிக் கோதண்டத்தில் கட்டினார்கள். கால்களுக்குக் கீழேயிருந்த இரும்பு முளைகளில் தளை போட்டார்கள். அஜித் சந்திரன் கண்கள் லேசாகத் திறந்தன. எதிரே கூட்டத்திலிருந்த சித்ராவின் கண்களை அவை சந்தித்ததும் அவன் இதழ்களில் புன்முறுவல் படர்ந்தது. அதைப் பார்த்த சித்ராவின் கண்களில் இரண்டு நீர்த்துளிகள் எழுந்து நின்றன.

## 5. உபாத்தியாயன் உயிர்

ஈட்டிக் காயத்திலிருந்து வழிந்த ரத்தத்தால் ஏற்கெனவே சிவந்திருந்த அஜித் சந்திரன் முகம், வெளி முற்றத்தை அடுத்து நின்ற தூண்களில் சொருகப்பட்டிருந்த தீப்பந்தங்களின் ஜ்வாலையில் இன்னும் அதிகச் சிவப்பாகத் தெரிந்தது. சாதாரணமாகவே பிரகாசிக்கும் கண்கள் தீப்பொறிகள் போல் தெரிந்தன. அவன் கம்பீரமான பார்வையையும் இதழ்களில் ஓடிய அந்தச் சிரிப்பையும் நீண்ட நேரம் பார்க்கச் சக்தியில்லாதவளாய் சித்ராதேவி தலைகுனிந்து, கண்களில் எழுந்து திரண்ட நீர்த்துளிகளைத் துடைத்துக் கொண்டாள். மரணம் எதிரில் நிற்கும் அந்தச் சமயத்திலும் அவனால் சிரிக்க முடிந்த நெஞ்சத் துணிவு அவளுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது! பக்கத்தில் நின்ற தோரமானாவும், "சித்ராதேவி! இவன் மிகவும் தைரியஸ்தன். குப்த வம்சத்தில் இவனைப் போல பத்துப் பேர் இருந்தால் ஸிந்துஸ்தானத்தை ஜெயிக்கவே முடியாது" என்றான்.

சித்ராதேவிக்கு அந்தச் சமயத்தில் ஹிந்துஸ்தானத்தைப் பற்றியோ, பூமியின் வேறு எந்தப் பிரதேசத்தைப் பற்றியோ கவலை ஏதும் இல்லை. உபாத்தியாயன் கதியைப் பற்றிய எண்ணமே அவள் இதயத்தைச் சூழ்ந்திருந்தது. கோதண்டத்தில் கட்டப்பட்டிருந்த உபாத்தியாயன் எதிரில் உடையேதுமில்லாமல் பருமனும் உயரமுமாய் ராக்ஷஸன்போல் நின்றுகொண்டிருந்த ஹூணன் எந்தச் சமயத்தில் கசையடியைத் தொடங்கிவிடுவானோ என்ற திகில் அவள் மனத்தை வாட்டிக் கொண்டிருந்தது.

"உம்! ஆகட்டும்" என்று உத்தரவிட்டான் அடிலன். ஹூண அடிமையின் கையிலிருந்த சாட்டை உயர எழுந்து 'சுளீ'ரென்ற சத்தத்துடன் உபாத்தியாயன் உடலின் மேல் இறங்கியது.

முதல் அடியைக் கொடுத்துவிட்ட ஹூண அடிமை "உபாத்தியாயருக்கு மொத்தம் எவ்வளவு அடிகள் கொடுக்கும்படி உத்தரவு!" என்று கேட்டான்.

"மடையா! இவன் உயிர் போவதற்கு எவ்வளவு அடிகள் தேவை என்பது எனக்கு எப்படித் தெரியும்" என்று சொல்லிவிட்டுத் தன் பதிலில் அடங்கிய ஹாஸ்யத்தை நினைத்து இடிஇடியென்று பயங்கரமாகச் சிரித்தான் அடிலன். கூட்டத்திலிருந்த இதர ஹூணர்களும் சிரித்தார்கள், இருவரைத் தவிர. ஒருத்தி சித்ராதேவி, இன்னொருவன் தோரமானா. இந்தச் சம்பவம் நடைபெற்ற சில வருஷங்களில் ஸிந்துஸ்தானத்தில் ஹூணர்களின் சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்த தோரமானா அப்பொழுது ஹூணர் சைன்னியத்தில் சாதாரண தலைவனாகத்தான் இருந்தான். ஆனால் பிற்கால ராஜ்யாதிபதிக்கு அவசியமான ஒரு நிதான புத்தியும், சம்பவங்களைச் சரியானபடி சீர் தூக்கிப் பார்க்கக்கூடிய சக்தியும் அவனிடம் அப்பொழுதே புலப்பட்டன. அப்பேர்ப்பட்ட தோரமானாவுக்கு ஒரு வீரனை அடிலன் இம்மாதிரி சித்திரவதை செய்வது அடியோடு பிடிக்கவில்லை. இருந்தாலும் அடிலன் வீட்டில் தான் விருந்தாளி என்ற காரணத்தால் இந்தச் சித்திரவதையில் குறுக்கிட்டு எதுவும் செய்யாமல் மௌனமாக என்ன நடக்கிறதென்று பார்த்துக் கொண்டிருந்தான்.

சாகும்வரை உபாத்தியாயனை அடிக்க உத்தரவு கொடுத்தவுடன் கசையடிக்காரன் தன் தொழிலை அதிக உக்கிரமாகவும் துரிதமாகவும் செய்யத் தொடங்கினான்.



சுளீர் சுளீர் என்று உபாத்தியாயன் உடல் மேல் சாட்டை வார் மின்னல் வேகத்தில் பாய்ந்தது. ஒவ்வோர் அடியிலும் அது பிய்த்துவிட்ட சதையிலிருந்து ரத்தம் பீரிட்டு எழுந்து உபாத்தியாயன் உடலைச் செந்நிறமாக அடித்துக் கொண்டிருந்தது! இத்தனை அடிக்கும் உபாத்தியாயன் வாயிலிருந்து எந்தவிதமான சத்தமும் வரவில்லை! அவன் அலறுவான் என்று எதிர்பார்த்த அடிலன் ஏமாந்து போனான். ஆகவே சுமார் பன்னிரண்டு அடிகள் கொடுத்த ஆயாசத்தில் கை அசந்து போய் ஒரு நிமிஷம் அடியை நிறுத்தி நெற்றி வேர்வையைத் துடைத்துக் கொண்ட கசையடிக்காரன் மேல் அடிலன் எரிந்து விழுந்தான். "டேய்! பன்னிரண்டு அடி பட்டவனுக்கு ஆயாசமில்லை, அடித்த உனக்கு ஆயாசம் வந்துவிட்டதா? உம் ஆகட்டும். சீக்கிரம் இவன் உயிர் போகாவிட்டால் உன் உயிரை வாங்கிவிடுவேன்" என்று அடிலன் கூவினான். அந்தக் கூச்சலால் நடுங்கிய கசையடிக்காரன் மீண்டும் சாட்டையை ஓங்கினான்.

"நிறுத்து அடியை" என்ற அதிகாரமான குரல் அவனை ஸ்தம்பிக்கச் செய்தது. கும்பலை விலக்கித் தள்ளிவிட்டுச் சித்ராதேவி கசையடிக்காரன் எதிரில் வந்து "கொடு அந்தச் சாட்டையை இப்படி" என்றாள். அவள் வேகத்தையும், கோபத்தையும் கண்ட அடிலன் கூட ஆச்சரியப்பட்டான். சித்ராவின் மனோபாவம் அவனுக்குப் புரியவில்லை! உபாத்தியாயன் மீது விழுந்த ஒவ்வோர் அடியும் அவள் இதயத்தின் மீது விழுந்திருக்கிறதென்பதையும் அவன் உடலிலிருந்து சொட்டிய ஒவ்வொரு துளி ரத்தமும் அவள் இருதயத்திலிருந்து சொட்டியிருக்கிறதென்பதையும் அவன் எப்படி அறிவான்?

ஆகவே, "சித்ரா! வழியை விடு. அடிமை தண்டனையை நிறைவேற்றட்டும்" என்றான் அடிலன். சித்ரா பதில் ஏதும்

சொல்லவில்லை. சாட்டையைக் கொடுத்துவிடும்படி கசையடிக்காரனிடம் கையை நீட்டினாள். கசையடிக்காரன் நிலைமை தர்மசங்கடமாயிருந்தது. எஜமான் ஒருவித உத்தரவையும் எஜமானுடைய பெண் அதற்கு நேர்மாறாக மற்றோர் உத்தரவையும் இடும்போது யார் உத்தரவை நிறைவேற்றுவது என்பதை அறியாமல் தவித்தான். சித்ராதேவியின் கோபம் எல்லை மீறிவிடவே ஒரே பாய்ச்சலில் கசையடிக்காரன்மீது பாய்ந்து சாட்டையைப் பிடுங்கிக் கொண்டாள். "நான் உத்தரவிடும்போது அதை எதிர்த்து நிற்க உனக்கு அவ்வளவு துணிச்சலா? இதோ இது எப்படியிருக்கிறது பார்?" என்று சாட்டையை ஓங்கி வீசினாள்.

சுளீர் சுளீரென மின்னல் வேகத்தில் இறங்கிய சாட்டையடிகளைத் தாங்க முடியாமல் கசையடிக்காரன் வெளி முற்றத்தின் ஒரு மூலையிலிருந்து இன்னொரு மூலைக்கு ஓடினான். "ஐயோ ஐயோ" என்று அலறினான். சித்ராதேவி அவனை விடாமல் துரத்தித் துரத்தி அடித்துக் கொண்டே "உனக்கு வலிக்கிறதா? இந்த வலியைக் கூடத் தாங்க முடியாத நீ ஒரு வீரனா? உபாத்தியாயர் அத்தனைக்கும் வாயைத் திறந்தாரா, பார்த்தாயா?" என்று சீறிப் பேசினாள்.

கொடுமையே அவதாரமான அடிலன் அடிமை அடிபடுதை மிகவும் ரசித்தான். கசையடியில் அவன் துள்ளித் துள்ளி ஓடுவது அவனுக்கு வேடிக்கையாக இருந்தது. ஹிம்சையை ரசிப்பதில் ஹூணர்கள் மிகச் சிறந்தவர்கள் என்பதைச் சரித்திரமே சொல்லுகிறது. கசையடிக்காரன் அடி தாங்கமாட்டாமல், "எசமான்! எசமான்" என்று கதறினான். பிரும்மாண்டமான அவன் சரீரத்திலிருந்து ரத்தம் ஆறாய்ப் பெருகிக்கொண்டிருந்தது. அடிமையின் கூக்குரலும், தான் அஜித் சந்திரனுக்கு அளித்த தண்டனை நிறைவேற்றப் படாமல் பாதியில் நிற்பதால் அடிலன் குறுக்கிட்டு "சித்ரா!



என்ன இது? சாட்டையை அவனிடம் கொடுத்துவிடு!" என்றான்.

இந்த உத்தரவைக் கேட்ட சித்ராதேவி கசையடிக்காரனைத் துரத்துவதை விட்டுத் தகப்பனிடம் வந்து "உபாத்தியாயரை எதற்காகக் கொல்லப் பார்க்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

"என்ன இதற்குள்ளாகவா மறந்துவிட்டாய்?" என்றான் அடிலன்.

"எதை?"

"என் வார்த்தையை! 'திரும்பியும் இந்தப் பிராந்தியத்தில் காலை வைத்தால் சாட்டையால் உயிர் போகும் வரை அடிக்கச் சொல்லுவேன்' என்று உபாத்தியாயனை நான் காலையில் எச்சரிக்கவில்லையா?"

"உபாத்தியாயர் தாமாக மாளிகைக்குள் வரவில்லையே, நீங்கள்தானே காயப்படுத்திக் கட்டிக்கொண்டு வந்தீர்கள்?"

இதற்கு என்ன பதில் சொல்வதென்று அடிலனுக்குத் தெரியவில்லை. "இந்தப் புரட்சிக்காரனை நான் எப்படி உயிருடன் விட முடியும்? இவனை விட்டால் மற்றவர்களுக்கும் புரட்சி செய்யத் துணிச்சல் உண்டாகி விடாதா?" என்று கேட்டான்.

"உபாத்தியாயர் என்ன புரட்சி செய்தார்?" என்று சித்ரா வினவினாள்.

"என் உத்தரவை எதிர்த்து நிற்கும்படி வில்லவரைத் தூண்டினான். என் வேலைக்காரர்களில் ஒருவனைக் கொன்றுவிட்டான். நான் குதிரையைப் பலி கொடுத்திருக்கா விட்டால் என்னையும் கொன்றிருப்பான். காலையிலிருந்து அவன் குணம் நிமிஷத்துக்கு நிமிஷம் மாறி வருகிறது. காலையில் பெண்ணுக்குக் காதலனாயிருந்தான்; இரவில்

எனக்கு எமனாகப் பார்த்தான். இவனை இன்னும் விட்டு வைத்தால் என்னென்ன நடக்குமோ தெரியாது" என்றான்.

அவன் பதிலிலிருந்த மற்ற அம்சங்களைத் சித்ராதேவி விட்டுவிட்டு உபாத்தியாயன் குற்றத்தை மட்டும் ஆராய்வதில் இறங்கினாள்.

"நீங்கள் வில்லவருக்கு என்ன உத்தரவிட்டீர்கள்? எதை எதிர்த்து நிற்கும்படி உபாத்தியாயர் தூண்டினார்?" என்று கேட்டாள்.

அந்தக் கேள்வியால் அடிலன் அதிர்ச்சியடைந்தான். 'இன்னொருவன் மனைவியைத் தூக்கிவரப் பார்த்தேன். அஜித் எதிர்த்தான்' என்று சொந்தப் பெண்ணிடம் எந்தத் தகப்பன்தான் ஒப்புக்கொள்ள முடியும்? அடிலன் ஒரு நிமிஷம் குழம்பிப் போய் நின்றான். பிறகு சிரிப்பால் அதை மழுப்பி விடுவதற்காகப் பெரிதாகச் சிரித்து, "சித்ரா! குரு விசுவாசத்தால் குறுக்கு விசாரணை பலமாக நடத்துகிறாயே. காரணம் எதுவாயிருந்தால் என்ன? புரட்சிக்காரனை ஒழிக்க வேண்டியது ஆள்பவன் தர்மந்தானே?" என்றான்.

அதுவரை மௌனமாக நின்ற தோரமானாவும் சித்ராவுடன் சேர்ந்து கொண்டான். "புரட்சி செய்தவனாயிருந்தால் அவனைத் தூக்கில் போட்டுக் கொன்றிருக்க வேண்டும். இவனைப் போன்ற வீரனைச் சித்ரவதை செய்வதற்கு எந்த நியாயமுமில்லை. வீரன் செய்யக்கூடிய காரியமுமில்லை" என்றான் தோரமானா.

அடிலன், சித்ராதேவியையும் தோரமானாவையும் மாறி மாறிப் பார்த்தான். உபாத்தியாயன் கட்சி விநாடிக்கு விநாடி பலப்பட்டு வருவது அவனுக்குப் பெரும் சங்கடத்தை அளித்தது. அதற்குள் கோதண்டத்துக்கு அருகிலிருந்த இரு வேலையாட்கள், "எசமான்! எசமான்!" என்று கூச்சலிட்டு ஓடி வந்தார்கள்.



"என்ன?" என்று சீறித் திரும்பினான் அடிலன்.

"உபாத்தியாயன் உயிர் போய்விட்டது. அதோ பாருங்கள். தலை தொங்கிவிட்டது!" என்றான் வேலைக்காரன்.

சித்ராதேவியின் இருதயம்கூட ஒரு விநாடி நின்று விட்டது. அடிலன் ஒருமுறை உபாத்தியாயனை நோக்கிக் கண்களை உயர்த்தினான். அஜித் சந்திரன் தலை துவண்டு தொங்கிக் கொண்டிருந்தது.

"நல்லவேளை! ஒழிந்தான். இவன் இன்னும் அரை விநாடி இருந்தால் நம்மைக் கைகலக்க விட்டிருப்பான். வாருங்கள், போகலாம்" என்று தோரமானாவிடம் கூறிவிட்டு, "சித்ரா! உபாத்தியாயனை இனிமேல் நீ விடுதலை செய்துவிடு" என்று அவளைப் பார்த்து நகைத்துக்கொண்டே வெளி முற்றத்திலிருந்து வெளியேறினான். தோரமானாவும் இதர ஹூணர்களும் அவனைப் பின்தொடர்ந்து சென்றனர்.

சித்ரா உள்ளே எழுந்த துக்கத்தை வெளிக்குக் காட்டாமல் மறைப்பதற்காகப் பல்லைக் கடித்துக் கொண்டு அஜித் சந்திரன் அருகில் சென்றாள். முகத்தில் பிரதிபலித்த அவள் மனவேதனையை ஓரளவு உணர்ந்துகொண்ட வேலையாட்கள் அஜித் சந்திரன் கால் தளைகளை முதலில் அவிழ்த்துவிட்டுப் பிறகு மேலே இருந்தவைகளை விடுவித்து வெகு ஜாக்கிரதையாக உடலைத் தரையில் படுக்க வைத்தார்கள்.

சித்ரா, உபாத்தியாயன் அருகில் மண்டியிட்டு உட்கார்ந்து அவன் அழகிய நெற்றியில் கையை வைத்தாள். அஜித் சந்திரன் மெள்ள கண்களை விழித்தான்.

அதைக் கண்டு கூச்சலிடப் போன வேலைக்காரர்களை விழியால் எச்சரித்து நிறுத்தினாள் சித்ரா. மரண மூர்ச்சையை மரணமே என்று நம்பிய வேலைக்காரர்

களின் முட்டாள்தனத்தால் அஜித் சந்திரன் பிழைத்துக் கொண்டான். அந்தச் சமயத்தில் ஹூண ஸ்திரீயான சித்ரா தேவி கூடக் கடவுளை மனமார வாழ்த்தினாள். மெல்ல வேலைக்காரர்களை அழைத்து, "இவர் உயிருடன் இருப்பது யாருக்கும் தெரிய வேண்டாம். ஜாக்கிரதையாகக் கொண்டு போய் உதயன் வீட்டில் சேர்த்து விடுங்கள். ஆளுக்கு ஆயிரம் பொன் தருகிறேன்" என்றாள்.

"அம்மா! எஜமானுக்கு இது தெரிந்தால் எங்கள் உயிர் போய்விடுமே! உபாத்தியாயரின் ஓர் உயிருக்காக இரண்டு உயிர்களை பலி கொடுக்கிறீர்களே" என்று வேலைக்காரர் களில் ஒருவன் கெஞ்சினான்.

"உபாத்தியாயரின் ஓர் உயிருக்கு உங்களைப் போல் ஆயிரம் பேர் உயிரை பலி கொடுக்கலாம்" என்றாள் சித்ரா.

அந்த கணக்கை அவர்கள் ஒப்புக்கொண்டதாகத் தெரிய வில்லை. ஒவ்வொரு மனிதனுக்கும் தன் உயிரைப் பற்றிய மதிப்பு அதிகமல்லவா? ஆகையால் சித்ராதேவியின் உத்தரவை நிறைவேற்ற இஷ்டமில்லாதவர்களாய்த் திருதிரு வென்று விழித்துக்கொண்டு நின்றார்கள். அவர்கள் சஞ்சலத் துக்கும் சித்ராவின் உறுதிக்கும் இடையில் உபாத்தியாயன் உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தது.

## 6. சித்ராவின் சாகசம்

இட்ட உத்தரவை யாரும் எதிர்த்து அறியாத சித்ரா தேவிக்கு, வேலைக்காரர்கள் தன் ஆணையை நிறைவேற்ற இஷ்டப்படாமல் நின்றதைக் கண்டதும் எல்லையற்ற கோபம் பொங்கி எழுந்தது. ஆயிரம் பொன் லஞ்ச ஆசையைக் காட்டியுங்கூட அவர்கள் சண்டித்தனம் செய்ததை நினைத்த அவள் உள்ளம் பெரிய எரிமலையாகி எதிரே நின்ற அந்த இரு அடிமைகளையும் பொசுக்கிவிடக் கூடிய நிலைமைக்கு வந்துவிட்டது. இவ்வளவு உணர்ச்சி வெள்ளம் பெருகியும் உபாத்தியாயன் ஆபத்தை நினைத்து சித்ராதேவி தன்னை அடக்கிக் கொண்டாள். சிறிது நேரம் உபாத்தியாயன் முகத்தைப் பார்ப்பது போல் பாசாங்கு செய்துகொண்டே வேலைக்காரர்களை எப்படி வழிக்குக் கொண்டு வரலாம் என்று யோசித்தாள். அவகாசம் அதிகமில்லை. அபாயமோ அதிகம். உள்ளே சென்றுவிட்ட தகப்பனார் எந்த நிமிஷத் திலும் திரும்பி வரலாம். ஆகவே வெகு துரிதமாக சித்ரா தேவி நிலைமையை ஆராய்ந்தாள். புத்திசாலிப் பெண் ணாகையால் விநாடி நேரத்தில் ஒரு முடிவுக்கு வந்து விட்டாள்.

கூர்மையான புத்தியில் யோசனை வித்துக்கள் வெகு சீக்கிரம் முளைவிட்டு வளர்ந்து பலனளிக்கின்றன. களிமண் மண்டைகளில் அந்த வித்துக்களை ஊன்றுவதே கஷ்டம். சிரமப்பட்டு யாராவது ஊன்றினாலும் இறுகிய அந்த மண்ணில் வித்துக்கள் பிழைப்பதுமில்லை. பலன் அளிப்பது மில்லை. ஆகையால் எதிரே மரம் போல் நின்று கொண் டிருந்த வேலைக்காரர்கள் இருவருக்கும் அடுத்த விநாடி

சித்ராதேவியிடம் ஏற்பட்ட திடீர் மாறுதலுக்கு என்ன காரணம் என்பது புலப்படவில்லை.

சித்ராதேவி மீண்டும் அவர்கள் மீது தன் கண்களை ஓட்டியபோது அந்தக் கண்களில் கோபம் சிறிதும் இல்லை. இதழ்களிலும் சிரிப்புப் படர்ந்திருந்தது. வேலைக்காரர்கள் மட்டும் சூடிக்கையானவர்களாயிருந்திருந்தால் அவள் கண்களில் கோபம் இல்லையானாலும் வஞ்சகம் ஆழ்ந்திருந்ததைக் கவனித்திருப்பார்கள். இதழ்களில் சிரிப்பிருந்தாலும் அதில் இகழ்ச்சி கலந்திருப்பதைப் பார்த்திருப்பார்கள். ஆனால் அவ்வளவு தூரம் சித்ராவின் எண்ணங்களைப் பாகுபாடு செய்துகொள்ளும் அறிவு அவர்களுக்கில்லாததால் எஜமானியம்மாள் ஏன் இப்படித் திடீரென மாறிவிட்டாள் என்று வியப்போடு நின்றார்கள். அவள் வாயிலிருந்து வந்த வார்த்தைகள் அவர்களுக்கு இன்னும் அதிக ஆச்சரியத்தை அளித்தன.

“ஆம்! நீங்கள் சொல்வதுதான் சரி. உபாத்தியாயரை நாம் எதற்காகக் காப்பாற்ற வேண்டும்? அவர் உயிருடன் இருக்கும் விஷயத்தை அப்பாவிடம் நானே சொல்லி விடுகிறேன்” என்று சொல்லிக்கொண்டே சித்ராதேவி உபாத்தியாயனுக்கு அருகிலிருந்து எழுந்திருந்தாள்.

உபாத்தியாயர் உயிருக்காகத் தங்களுக்கு லஞ்சம் கூடக் கொடுக்கத் தயாராயிருந்த சித்ராதேவி இப்படிப் பேசுகிறாளே என்று வேலைக்காரர்கள் பிரமித்துப் பதிலேதும் சொல்லாமல் வாயடைத்து நின்றார்கள்.

“ஏன் பேசாமலிருக்கிறீர்கள்? ஆயிரம் பொன்னை இழந்துவிட்டோமே என்ற வருத்தமா?” என்று சித்ரா கேட்டாள்.

“தேவி! ஆயிரம் பொன் போனதில் எங்களுக்கு எப்படி வருத்தம் இருக்க முடியும்? அந்த ஆயிரம் பொன்னுக்கு



ஆசைப்பட்டு உபாத்தியாயரைத் தூக்கிச் சென்றிருந்தால் எங்கள் உயிரே போயிருக்குமே! நீங்கள் பெரிய மனது பண்ணி உங்கள் உத்தேசத்தை மாற்றிக் கொண்டதால் எங்கள் தலை தப்பிவிட்டதே. அதற்கு நாங்கள் சந்தோஷப் படாமலிருக்க முடியுமா?” என்றான் வேலைக்காரர்களில் ஒருவன்.

இந்த பதிலைக் கேட்ட சித்ராதேவியின் இதழ்களில் கோபங்கலந்த புன்முறுவல் அரும்பியது. அவள் கண்கள் உஷ்ணத்தைக் கக்கின. விஷமாத்திரைக்குச் சர்க்கரை மூடியிடும் வைத்தியனைப்போல் குரூரமான வார்த்தைகளை வெகு இனிப்பாகச் சொன்னாள் சித்ராதேவி. “தலை தப்பியதற்காக சந்தோஷப்படுகிறீர்களா? தலை தப்பியதாக யார் சொன்னது?” என்று கேட்டாள்.

வேலைக்காரர்கள் முகத்தில் கிலி பரவிற்று. “தேவி! தலை போக நாங்கள் என்ன குற்றம் செய்தோம்?” என்று கேட்டான் இருவரில் ஒருவன்.

சித்ராதேவியின் முகம் கோபத்தணலாக மாறியது. அதுவரை அவள் உணர்ச்சிகளை மூடி நின்ற வஞ்சகத் திரை விலகியது. “என்ன குற்றமா! எஜமானை ஏமாற்றியது குற்றமல்லவா? அதைவிட என்ன பெரிய குற்றத்தை நீங்கள் செய்ய முடியும்?” என்று சீறினாள்.

“எஜமானை ஏமாற்றினோமா? எப்பொழுது தேவி?”

“முழுப் பூசணிக்காயைச் சோற்றிலா மறைக்கப் பார்க்கிறீர்கள்? உபாத்தியாயர் உயிருடன் இருக்கும்போதே இறந்து விட்டதாக இப்பொழுதுதான் சொன்னீர்கள்.”

“தேவி! தேவி! அவர் உயிருடனிருப்பது எங்களுக்குத் தெரியாதே.”

“தெரியாது என்பதற்கு என்ன அத்தாட்சி?”

வேலைக்காரர்கள் இருவரும் விழித்தார்கள்.

"உபாத்தியாயர் உயிருடன் இருக்கும்போதே, அவர் இறந்துவிட்டதாகச் சொல்லி அவரைத் தப்புவிக்க நீங்கள் செய்திருக்கும் சூழ்ச்சியைத் தகப்பனாரிடம் சொல்வது என் கடமையல்லவா?" என்று கேட்டாள் சித்ராதேவி.

வேலைக்காரர்கள் மண்டையிலும் சித்ராதேவியின் சூழ்ச்சி மெள்ள மெள்ள உதயமாகத் தொடங்கியது. விஷயத்தை அவள் திரித்து தங்கள்மேல் குற்றத்தைப் போட்டால் தங்கள் கதி அதோகதிதான் என்பது அவர்களுக்குத் தெரியும். அவள் தங்கள் கழுத்துக்கு என்ன சாமர்த்தியமாகத் தூக்குக் கயிற்றை மாட்டுகிறாள் என்பதை நினைத்த அவர்கள் உள்ளத்தில் விவரிக்கவொண்ணாத பயம் சூழ்ந்துகொண்டது.

"தேவி! தாங்கள் இத்தகைய அபாண்டமான பொய்யைச் சொல்லலாமா?" என்று ஒருவன் கெஞ்சினான்.

"அடிலன் மகள் பொய் சொல்கிறாள் என்பதை யாரிடமாவது சொல்லிப் பார்" என்று கூறிவிட்டு, ஓரடி எடுத்து வைத்து வாசற்படியை நோக்கி நடப்பது போல் பாசாங்கு செய்தாள்.

ஏழைகள் சொல்லும் உண்மையை விடப் பெரிய இடத்துப் பொய்யைத்தான் எல்லோரும் நம்புவார்கள் என்பது வேலைக்காரர்களுக்குத் தெரியாதா என்ன? இரண்டு எட்டில் தாண்டிச் சென்று சித்ராதேவியை மறித்துக் கொண்டு அவள் காலில் விழுந்தார்கள்.

"தேவி! தேவி! வேண்டாம்; எங்களைக் கொல்லாதீர்கள், உபாத்தியாயரை நாங்கள் காப்பாற்றி விடுகிறோம். உங்கள் உத்தரவு எதுவானாலும் நிறைவேற்றுகிறோம்" என்று கெஞ்சினார்கள்.

தான் ஜெயித்துவிட்டதைச் சித்ரா அறிந்தாள். உள்ளே எழுந்த உவகையை மேலுக்குக் காட்டாமலே "உங்களை நான் எப்படி நம்பமுடியும்? ஒருமுறை என் கட்டளையை மீறிய நீங்கள் மீண்டும் என் கட்டளையைக் காற்றில் பறக்க விட மாட்டீர்கள் என்பது என்ன நிச்சயம்?" என்று கேட்டாள்.



"கடவுளின் மேல் ஆணை, உங்கள் வார்த்தையில் இருந்து இம்மி பிசகாமல் எதைச் சொன்னாலும் செய்கிறோம்" என்றான் வேலைக்காரர்களில் ஒருவன். அவன் சொன்னதை ஆமோதிப்பதற்கு அடையாளமாக அவன் தோழனும் தலையை ஆட்டினான்.

"அப்படியானால் உபாத்தியாயரை மெள்ளத் தூக்கிக் கொண்டு போய் உதயன் வீட்டில் விட்டு அவருக்கு உடனே சிகிச்சை அளிக்கச் சொல்லுங்கள். நீங்கள் காரியத்தை முடித்துவிட்டுத் திரும்பியதும் பொற்காசுகள் உங்களுக்காகக் காத்திருக்கும். சீக்கிரம் செல்லுங்கள். இந்த வாயிற்படியைத் தாண்டியதும் வெளிக் கதவுக்காகச் செல்ல வேண்டாம். தோட்டப் பக்கமாகச் சென்று மரங்களின் நிழலிலேயே மறைந்து சென்றால் யாரும் பார்க்க மாட்டார்கள்" என்றாள் சித்ராதேவி.

"யாராவது பார்த்தால்...?"

"உபாத்தியாயர் உயிர் போய்விட்டதாகவும், அவரை நான் செண்பகத் தோட்டத்தில் புதைக்கச் சொன்னதாகவும் சொல்லிவிடுங்கள். உபாத்தியாயர் உடலை உங்கள் மேல் வஸ்திரத்தால் மூடிச் சென்றால் சந்தேகத்துக்கு இடம் ஏற்படாது. புரிந்ததா?"

"புரிந்தது தேவி. இதோ புறப்பட்டு விட்டோம்" என்று ஒரு வேலைக்காரன் சொல்ல, இன்னொருவன் உபாத்தியாயனைத் தூக்க ஏற்பாடுகளைச் செய்தான். உபாத்தியாயன் உயிருடன் இருந்ததால் உடல் லேசாகத்தான் இருந்தது. பீமன்களைப் போல் இருந்த இரண்டு வேலைக்காரர்களும் அவனை மெள்ளத் தூக்கிக் கொண்டனர். சித்ரா அவர்களுக்

கருகில் வந்து உபாத்தியாயன் முகத்தைத் தன் கைகளால் தடவிக் கொடுத்தாள். உபாத்தியாயன் கண்கள் திறந்தன. ஆனால், பார்வை மயக்கமாயிருந்தது. அக்கம் பக்கத்தில் இருப்பவர்களைப் புரிந்து கொள்ளக்கூடிய சக்தி அந்தப் பார்வையில் இல்லை. கண்ணை விழித்ததோடு உபாத்தியாயன் நிற்கவில்லை. தேகக் காயங்களின் வலியைத் தாங்க முடியாமல் ஒருமுறை "ஹா...ம்" என்று பரிதாபமாக முனகினான். வேலைக்காரர்கள் பயத்தால் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

"உபாத்தியாயரே! நீர் இறந்துவிட்டீரையா. கொஞ்சம் தயவுசெய்து வாயை மூடிக்கொண்டிரும்" என்று எச்சரித்தான் வேலைக்காரர்களில் ஒருவன்.

யார் சொல்வதையும் கேட்கக்கூடிய ஸ்திதியில் உபாத்தியாயன் இல்லாமல் இருந்தாலும், உடம்பில் இருந்த பலஹீனத்தால் அவன் முனகல் நின்றதோடு கண்களும் மூடிக்கொண்டன. அவனை அணைத்தபடி தூக்கிக் கொண்டே வேலைக்காரர்கள் மாளிகைத் தோட்டத்தை அடைந்து மலைவாசல் குடிகளின் வாசஸ்தலத்தை நோக்கிப் பதுங்கிப் பதுங்கி நடந்தார்கள்.

கண்ணுக்கு மறையும் வரையில் சித்ராதேவி அவர்களைப் பார்த்துக்கொண்டே நின்றாள். அவள் கண்களில் நீர் நிறைந்துவிடவே தூரத்தில் சென்று கொண்டிருந்த உருவங்கள் மிக மங்கலாகத் தெரிந்தன. உபாத்தியாயனைத் தூக்கிச் சென்ற வேலைக்காரர்களை சித்ராதேவி மட்டுமல்ல, மற்றொரு உருவமும் பார்த்துக்கொண்டே நின்றது. மேல் மாடியில் தன்னந்தனியே நின்று, இரண்டு வேலைக்காரர்கள் எதையோ சிரமப்பட்டுத் தூக்கிச் செல்வதை மிகுந்த சந்தேகத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான் கபீசத்திலிருந்து வந்திருந்த ஹூணர்களின் உபசேனாதிபதி தோரமானா.



தோரமானாவின் சூக்ஷ்ம புத்திக்கு நடக்கும் காரியம் நொடிப்பொழுதில் புலனாகிவிட்டது. தூரத்தில் நின்றிருந்தாலும் வேலைக்காரர்கள் கையில் தாங்கியிருப்பது மனித உருவம் என்பது நன்றாகத் தெரிந்தது. 'அந்த மனித உருவம் சற்றுமுன் சாட்டையாலடிக்கப்பட்ட உபாத்தியாயன் உருவமானால் வேலைக்காரர்கள் அதை ஏன் புதைக்க எடுத்துச் செல்லவேண்டும். புதைக்க எடுத்துச் செல்வதானால் அதற்கு இவ்வளவு ஒளிவு மறைவு ஏன்? வேலைக்காரர்கள் ஏன் பதுங்கிச் செல்கிறார்கள்?' என்று தோரமானா சர்ச்சை செய்தான். 'சித்ராதேவி இத்தனை நேரம் வெளி முற்றத்தில் என்ன செய்கிறாள்?' என்ற கேள்வியை அத்துடன் இணைத்துக் கொண்டான்.

தோரமானாவின் கூரிய புத்திக்கு முடிவு ஒரு பிரமாத காரியமில்லை. மாடிப்படிகளில் வேகமாக இறங்கி விருந்தினர்கள் இருந்த கூடத்துக்கு வந்தான். வந்ததும் அவன் கண்கள் சித்ராதேவியைத் தேடின. பெண்கள் கூட்டத்தில் அப்பொழுதுதான் சித்ராதேவியும் கலந்து கொண்டாள். அவள் முகத்தில் இருந்த அமைதி தோரமானாவின் சம்சயத்தை அடியோடு தீர்த்துவிட்டது. யாருக்கும் தெரியாமல் வெளியே நழுவிய தோரமானா தோட்டப் பக்கமாக வந்து வேலைக்காரர்கள் சென்ற திக்கை நோக்கித் துரிதமாக நடந்தான்.

# 7. 'நத்தையின் வயிற்றில் முத்து பிறந்தது'

சித்ராதேவியின் உத்தரவுப்படி வேலைக்காரர்கள் உபாத்தியாயனை வெகு ஜாக்கிரதையாக உதயன் வீட்டுக்குக் கொண்டு வந்து சேர்த்தார்கள். அவர்கள் வந்த சமயம் உதயன் வீட்டு வாசலில் இரண்டு குதிரைகள் பூட்டிய வண்டி ஒன்று பிரயாணத்துக்குத் தயாராய் நின்று கொண்டிருந்தது. வண்டி ராஜமாளிகை வண்டியைப் போல் சிற்ப வேலைகளுடன் இருந்தாலும் ராஜ முத்திரைகள் ஏதுமில்லாதிருந்ததால் யாரோ வெளியூரிலிருந்து பெரிய மனிதர்கள் வந்திருக்க வேண்டும் என்று வேலைக்காரர்கள் தீர்மானித்துக் கொண்டார்கள். வந்திருக்கும் விருந்தாளிக்கு விஷயம் தெரிந்துவிட்டால் என்ன செய்வதென்று ஒரு வேலைக்காரன் சற்று நிதானித்தான். "தலைக்குமேல் போன வெள்ளம் சாணாயிருந்தால் என்ன, முழமாயிருந்தால் என்ன? தைரியமாய் வா" என்று மற்றொருவன் தூண்டவே, இருவருமாக உதயன் வீட்டுக் கதவைத் தட்டினார்கள்.

கதவு உடனே திறக்கப்படவில்லை. "யாரது?" என்று உதயன் குரல் மட்டும் கேட்டது. "சீக்கிரம் திறவுங்கள்" என்றான் வேலைக்காரர்களில் ஒருவன் ஆத்திரத்துடன். உள்ளே உதயன் குரலுடன் மற்றொரு ஸ்திரீயின் குரலும் கேட்டது. "பாதகமில்லை, கதவைத் திற" என்றாள் அவள். உதயன் கதவைத் திறக்கவே வேலைக்காரர்கள் உபாத்தியாயனை உள்ளே தூக்கி வந்தார்கள். உபாத்தியாயன் நிலையைக் கண்டதும் பிரமிப்பால் வாயடைத்துவிட்ட உதயன்



உள்ளேயிருந்த மஞ்சத்தில் உடலை வளர்த்தும்படி சைகை காட்டினான். வேலைக்காரர்கள் மெள்ள உபாத்தியாயனைப் படுக்கவிட்டு உடலை மூடியிருந்த துணியை நீக்கினார்கள். உபாத்தியாயன் பெருமூச்சு விட்டான்.

உதயன் கண்களில் பிரமை மாறி ஆச்சரியம் குடி கொண்டது. வேலைக்காரர்களை ஏதும் கேட்காமல் ஓடிச் சென்று சிறிது ஜலம் கொண்டுவந்து துணியைப் பிழிந்து கண்களைத் துடைத்து வாயிலும் ஒரு குவளையால் ஜலத்தை மெள்ள ஊற்றினான். உபாத்தியாயன் ஒரு வாய்த் தண்ணீரை விழுங்கியதும் மெள்ளக் கண் விழித்தான். அப்பொழுதும் அவனுக்குச் சுரணை பூராவும் வரவில்லை. ஏதோ சொப்பனத்தில் பார்ப்பதுபோல் சுற்றுமுற்றுமிருந்தவர்களைப் பார்த்தான்.

"இதென்ன ஆச்சரியமாக இருக்கிறது! உபாத்தியாயனை உயிருடன் விட்டுவிட்டார்களே. அடிலனுக்குமா கருணை பிறந்துவிட்டது?" என்று உதயன் வேலைக்காரர்களைப் பார்த்துக் கேட்டான்.

"எஜமானருக்குக் கருணை பிறக்கவில்லை. சின்ன எஜமானியின் கருணையால்தான் உபாத்தியாயர் இன்னும் உயிரோடிருக்கிறார்" என்று வேலைக்காரர்களில் ஒருவன் சொன்னான்.

"இவர் உயிருடன் இருக்கும் தகவல்கூட எஜமானுக்குத் தெரியாது" என்றான் மற்றவன்.

"எஜமானுக்குத் தெரியாதா?"

"தெரியாது. உபாத்தியாயர் கசையடியால் இறந்துவிட்டதாக நினைத்து எஜமான் உள்ளே போய்விட்டார். உபாத்தியாயரைக் கோதண்டத்திலிருந்து இறக்கியபோதுதான் அவர் உயிரோடிருக்கும் ரகசியம் எங்களுக்குத் தெரிந்தது.

அதை எஜமானிடம் சொல்லப்போன எங்களை சித்ரா தேவிதான் நிறுத்தினார். இவரைக் காப்பாற்றி உங்களிடம் சேர்ப்பதற்காக ஆளுக்கு ஆயிரம் பொன் இனாம்கூடத் தரப்போகிறார்கள். ஆனால், உபாத்தியாயர் உயிருடன் இருப்பது எஜமானுக்குத் தெரிந்தால் எங்கள் உயிர் அரைக் காசுகூடப் பெறாது."

உதயன் சித்ராதேவியை மனமார வாழ்த்தியதோடு "நத்தையின் வயிற்றில் ஒரு முத்து பிறந்திருக்கிறது" என்று வாய்விட்டும் சொன்னான்.

"ஆனால் நத்தை நகருகிற வேகத்தில் உபாத்தியாயர் நகரக் கூடாது. இன்றிரவிற்குள் அவர் இந்த மலைவாசலை விட்டுத் தொலை தூரம் போய்விட வேண்டும்" என்று எச்சரித்தான் ஒரு வேலைக்காரன்.

"அதெப்படி முடியும்? அதோ நீங்களே பாருங்கள். உபாத்தியாயர் உடல் சின்னாபின்னப்பட்டிருக்கிறது. சில நாள் இங்கு மறைவில் வைத்திருந்து சிகிச்சை செய்து குணமானதும் அனுப்பிவிடுகிறேன்" என்று உதயன் கேட்டுக் கொண்டான்.

"சிகிச்சையை வெளியூரில் வைத்துக்கொள்ளுங்கள்."

"வெளியூருக்கு உடனே எப்படிக் கொண்டு போவது?"

"அது எங்களுக்கு எப்படித் தெரியும்? ஒன்று உபாத்தி யாயர் இன்றிரவே வெளியூருக்குப் பயணமாக வேண்டும்; இல்லாவிட்டால் இவரை மீண்டும் தூக்கிக்கொண்டு போய் எஜமானிடம் ஒப்புவித்து மேல் உலகப் பிரயாணத்துக்கு அனுப்பிவிடுகிறோம்."

உதயன் என்ன செய்வதென்று தெரியாமல் விழித்தான். வேலைக்காரர்களில் ஒருவன் மீண்டும் சொன்னான்: 'பெரியவரே! எங்கள்மீது கோபப்பட்டுப் பயனில்லை.



இங்கே உபாத்தியாயரை வைத்துக் கொண்டால் ரகசியம் எப்படியாவது வெளியாகிவிடும். அப்புறம் எங்கள் உயிர் எங்கள் உடலுக்குள் ரகசியமாய்ப் பதுங்கி இருக்காது. உபாத்தியாயர் உயிரோடு அவற்றுக்கும் எஜமான் விடுதலை யளித்து விடுவார். இதற்கு நாங்கள் தயாரில்லை" என்றான் பட்டவர்த்தனமாக.

அவர்கள் கஷ்டத்தை உதயன் நன்றாகப் புரிந்து கொண் டான்; இருந்தாலும் அவன் என்ன செய்ய முடியும்? எதுவும் தெரியாமல் கலங்கிய சமயத்தில்தான் அதுவரை இந்த நாடகத்தை மௌனமாகப் பார்த்துக்கொண்டிருந்த ஸ்திரீ மெல்ல எழுந்து அவர்களை நோக்கி வந்து, "இது யார் உதயா?" என்று கேட்டாள்.

"உங்களிடம் இத்தனை நேரம் சொல்லிக்கொண் டிருந்தேனே, அந்த அஜித் சந்திரன்தான்."

"குப்த சைன்னியத்தில் சிறிது காலம் உபசேனாதிபதி யாக இருந்ததாகக் கூறினாயே அவனா?"

"அவரேதான் மகா..." என்று சொல்லப்போன உதயன் பாதியில் வார்த்தையை நிறுத்திக்கொண்டான்.

அந்த ஸ்திரீ சிறிது நேரம் ஏதோ யோசித்தாள். பிறகு "உதயா! வேண்டுமானால் இவரை நான் என்னுடன் அழைத்துச் செல்கிறேன். இவ்வளவு நல்ல வீரனை இந்த வாலிப வயதில் மாளவிடுவது நியாயமில்லை" என்றாள்.

உதயன் அவளை மிகுந்த நன்றியறிதலுடன் பார்த்தான். "தேவி! உபாத்தியாயர் மலைவாசல் வில்லவருக்குத் தெய்வம் போன்றவர். அவரைக் காப்பாற்றினால் உங்களிடம் அவர்களுக்கு இணையற்ற பக்தி உண்டாகிவிடும்" என்றான்.

"அப்படியானால் கண்டிப்பாய் என் வண்டியில் இன்றிரவே அழைத்துப்போய் விடுகிறேன். குடிகளுக்கு

இதமான காரியத்தைச் செய்வது நமது கடமையல்லவா?" என்றாள்.

"நீங்கள் தற்சமயம் இங்கு வந்திருப்பது உபாத்தியாயர் அதிருஷ்டம்" என்று சொல்லிய உதயன் வேலைக்காரர்களை நோக்கித் திரும்பி, "உங்கள் எண்ணமும் ஈடேறிவிட்டது. நாளைக் காலையில் உபாத்தியாயர் மலைவாசலிலிருந்து குறைந்தபக்ஷம் இரண்டு காத தூரத்திலிருப்பார். சென்று வாருங்கள். சித்ராதேவிக்கு என் வணக்கத்தைத் தெரிவி யுங்கள்" என்றான். வேலைக்காரர்கள் வெளியே சென்றார் கள். உதயன் உள்ளேயிருந்த ஸ்திரீயை நோக்கித் திரும்பி னான். அவளுக்குச் சுமார் ஐம்பது வயதிருக்கும். உபாத்தி யாயனைப் பார்த்துக் கொண்டு அவள் நின்ற தோரணையில் ஒரு கம்பீரம் இருந்தது. ஏதோ ஓரிரண்டு நகைகளைத்தான் அணிந்திருந்தாள். ஆனால் அவற்றில் பதிந்திருந்த கற்கள் விளக்கொளியில் பிரகாசித்ததிலிருந்து அவற்றின் விலை ஏராளமாயிருக்க வேண்டும் என்பது திட்டமாகத் தெரிந்தது. வயது அவ்வளவு ஆகியும் அந்த முகத்தில் அழகு குறைய வில்லை. படாடோபமில்லாதிருந்தாலும் ஏதோ பெரிய குடும்பத்தில் பிறந்தவள் என்பது தெரிந்தது. பார்வையில் அதிகப் பிரகாசமில்லாவிட்டாலும் அதிகாரம் மட்டும் தேங்கிக் கிடந்தது.

அஜித் சந்திரன் பக்கத்தில் வெகுநேரம் நின்றிருந்த அவள் அவன் உடலிலிருந்த காயத்தைப் பார்த்து, "மிருகத் தனமாக அடித்திருக்கிறார்கள்" என்றாள்.

"இது எங்களுக்குச் சர்வ சகஜம்" என்றான் உதயன்.

"இந்த நிலையை வெகு சீக்கிரம் மாற்றிவிடுகிறேன் உதயா. ஆனால் மலைவாசல் வில்லவர் உதவிதான் தேவை!" என்றாள் அந்த ஸ்திரீ.



"தேவி, நான்தான் முன்னமே சொல்லிவிட்டேனே, வருஷக்கணக்கான கொடுமையால் வில்லவர் உள்ளம் அடிமைப்பட்டுக் கிடக்கிறது. அவர்களைப் புரட்சிக்கு எழுப்புவது கஷ்டம்."

"நான் ஆயிரம் வீரர்களைத்தானே கேட்கிறேன்."

"வீரர்கள் எங்கிருக்கிறார்கள் தேவி? இங்கிருப்பவர்கள் அடிமைகள், பழைய வில்லவர்கள் இல்லை. இவர்களை பலி கொடுக்கலாமே தவிர சண்டை போட வைப்பது முடியாத காரியம். சொந்த உயிர், பெண்கள் மானம் இரண்டையும் காப்பாற்றத்தான் ஜனங்கள் சண்டை போடுவது வழக்கம். அடிலன் அடிக்கடி வில்லவரில் பலரைத் தூக்கில் போடுகிறான். அன்று எல்லோர் கண்ணெதிரிலும் காமினியைக் கொண்டு போனான். புரட்சியா நடந்தது? இனி இவர்களை எழுப்ப முடியவே முடியாது!"

உதயன் மனவருத்தத்தால் பேசுகிறான் என்பதை வந்திருந்த ஸ்திரீ தெரிந்துகொண்டாள். ஆகையால் மீண்டும் அன்பாகச் சொன்னாள்: "உதயா! ஓடுகிற மாட்டைக்கூட எப்பொழுதும் விரட்ட முடியாது. மேலும் ஓட முடியாதபடி மூலையில் முடக்கினால் மாடுகூடத் திரும்பி எதிர்த்து வரும். ஆயிரம் வீரர்களைத் தயார் செய்து பத்துப் பத்துப் பேராக பாடலிபுரத்துக்கு அனுப்பு. மலைவாசல் விடுதலைக்கு நான் வழி செய்கிறேன்."

"சரி தேவி! உங்களிஷ்டம்" என்று உதயன் ஆமோதித்து விட்டு, வெளியே சென்று சில பச்சிலைகளைக் கொண்டு வந்து உபாத்தியாயரின் ரணங்களில் வைத்துக் கட்டினான். அத்துடன் வந்திருந்த தேவி புறப்படுவதற்கான ஏற்பாடு களையும் செய்தான்.

புறப்படும் சமயத்தில் அந்த வயோதிக ஸ்திரீ எதையோ யோசித்தாள். "என்ன யோசிக்கிறீர்கள்?" என்று உதயன் கேட்டான்.

"ஒன்றுமில்லை. ஹூணர்கள் எல்லைக்குள் வரும் போது நான் திரும்புவதற்கு மட்டுமே ஏற்பாடுகளைச் செய்து வந்திருக்கிறேன். இன்னொருவரைக் கூட்டிச் சென்றால் ஸிந்து நதிக் கரையிலிருக்கும் ஹூணப் படைகளுக்கு என்ன பதில் சொல்வது? எப்படி இந்த உபாத்தியாயனை நமது ராஜீய எல்லைக்குள் அழைத்துச் செல்வது என்று யோசிக்கிறேன்" என்று தயங்கினாள்.

"அதற்கு நான் வழி சொல்கிறேன்" என்றது ஒரு குரல். சட்டென்று திரும்பிய உதயனும் அந்த ஸ்திரீயும் இடையில் நீண்ட வாளணிந்த ஒரு ஹூணன் வாயிற்படியில் நிற்பதைக் கண்டார்கள். தோரமானா நின்றுகொண்டிருந்தான்.

அவனைக் கண்டதும் உதயன் முகத்தில்தான் பீதி தெரிந்தது. வந்திருந்த ஸ்திரீயின் முகத்தில் எந்தவித அச்சமுமில்லை. அவள் கம்பீரமாகத் தன்னை நோக்குவதைக் கண்ட தோரமானா அவள் தைரியத்தை உள்ளூர மெச்சிக்கொண்டான். புன்முறுவலுடன் உள்ளே நுழைந்து, "தேவி! நீங்கள் யாரென்பது எனக்குத் தெரியும்" என்றான்.

"யார்?" என்று உதயன் கேட்டான்.

"ஆனந்ததேவி" என்று சொல்லிய தோரமானா லேசாகச் சிரித்தான்.

அந்த பதிலைக் கேட்ட உதயன் தன் தலையில் பேரிடி விழுந்ததைப் போல் நிலை கலங்கி நின்றுவிட்டான்.

# 8. ஆனந்ததேவியின் அந்தரங்கம்

ஆனந்ததேவி ஹூணர்களின் பிராந்தியத்திலிருப்பது அடிலனைச் சேர்ந்தவர்களுக்குத் தெரிந்தால் பேராபத்து நேர்ந்துவிடுமே என்று உதயன் அஞ்சினான். அதுவும் வில்லவர் வீட்டில் அவள் தங்கினாள் என்பதை அடிலன் அறிந்தால் அவர்கள் வீடுகளை எரித்துவிடுவானே என்றும் பயந்தான். ஆனந்ததேவி மட்டும் எவ்விதமான அச்சமும் கொள்ளவில்லை. தோரமானாவை நன்றாக ஒருமுறை கூர்ந்து கவனித்தாள். அவனை எப்பொழுதும் பார்த்திருப்பதாக அவளுக்கு ஞாபகமில்லை. தன்னை எப்படித் தெரிந்து கொண்டான் என்ற சந்தேகம் மட்டுமே அவள் முகத்தில் பிரதிபலித்தது. தவிர தன் பெயர் மட்டுந்தான் அவனுக்குத் தெரியுமா வேறு விவரங்களும் தெரியுமா என்று யோசித்தாள்.

அவள் மனத்தில் ஓடிய எண்ணங்களைத் தோரமானா சுலபத்தில் புரிந்துகொண்டான். "சாதாரண மனிதன் மகாராணியைத் தெரிந்துகொள்வது சுலபம். ஆனால், மகாராணிக்கு எல்லா ஏழைகளையும் தெரிந்துகொள்வது சாத்தியமல்ல. முடியவும் முடியாது. என்னை உங்களுக்குத் தெரியாது. உங்களை எனக்கு நன்றாகத் தெரியும்" என்று சொல்லிச் சிறிது தன் பேச்சை நிறுத்தினான். ஆனந்ததேவி பதில் ஏதும் சொல்லாமல் அவனையே பேச விட்டாள்.

"உங்களுக்குக் கொஞ்ச நஞ்சமிருக்கும் சந்தேகத்தையும் போக்கிவிடுகிறேன். நீங்கள் சக்கரவர்த்தி குமரகுப்தனின் இரண்டாவது ராணி, ஆனந்ததேவி. மகாராஜா ஸ்கந்த குப்தனின் இளைய தாயார்" என்று வம்சப் பரம்பரையை வெகு தெளிவாகத் தோரமானா சொன்னான்.

அவன் சொன்ன இந்தச் சில வார்த்தைகளால் அது வரை உணர்ச்சிகளை வெளிக்காட்டாத மகாராணியின் முகத்தில்கூட சிற்சில உணர்ச்சிகள் உலாவத் தொடங்கின. தோரமானா பேசிய நாலைந்து வரிகளில் குப்த சாம்ராஜ்ய விவகாரங்கள் வெகு விஷமமாகப் புனையப்பட்டிருப்பதை அறிந்தாள். தன் கணவன் குமாரகுப்தனின் காலத்திலிருந்த ஆரிய ஏகாதிபத்தியம் ஸ்கந்தகுப்தன் காலத்தில் அதிகாரமிழந்து, ஹூணர்களிடம் பிரதேசமிழந்து, சாதாரண ராஜ்யமாகி விட்டதைக் குறிக்கவே ஒருவரைச் சக்கரவர்த்தியென்றும், இன்னொருவரை மகாராஜாவென்றும் அழைக்கிறான் என்பதை ஆனந்ததேவி அறிந்து கொண்டாள். இருந்த போதிலும் இவனுக்கு எவ்வளவு தூரம் தன்னுடைய ராஜிய ரகசியங்கள் தெரியும் என்பதை திட்டமாகத் தெரிந்து கொள்ள அவளும் தோரமானாவுக்கு சாமர்த்தியமாகவே பதில் சொன்னாள்: "சரியான ராஜா வந்தால் சாதாரண ராஜ்யம் மீண்டும் சாம்ராஜ்யமாக நாளாகாது" என்றாள்.

தோரமானாவின் இதழ்களில் விஷமமான புன்முறுவல் காணப்பட்டது. ஆனந்ததேவி தன்னை ஆழம் பார்க்கிறாள் என்பதைத் தெரிந்துகொண்டான். மகாராணியின் மனத்தில் புதைந்து கிடந்த ஆசைகள் அவனுக்கு நன்றாகத் தெரியும்; ஸ்கந்தகுப்தனுக்குப் பதில் தன் மகன் பூரகுப்தனைச் சிம்மாசனத்துக்குக் கொண்டுவர ஆனந்ததேவி ஏதோ ஏற்பாடுகள் செய்கிறாள் என்பதைத் தோரமானா அறிந்திருந்தான். ஆகவே குறிப்பாக ஏதும் சொல்லாமல், "சரியான ராஜா வரவேண்டுமானால் தங்கள் பிரயத்தனங்கள் பலிக்க வேண்டும். கடவுள் தங்களுக்கு அருள் புரியட்டும்" என்றான் தோரமானா.

ஆனந்ததேவிக்குக் கொஞ்சநஞ்சமிருந்த சந்தேகமும் நீங்கி விட்டது. வந்திருப்பவன் லேசான ஆசாமி அல்ல என்பதையும், ஆழ்ந்த அறிவுள்ளவனிடம் தான் சிக்கிக் கொண்டிருப்ப



தையும், அறிந்தாள். 'இவன் யார்? இந்த மனிதனுக்குக் குப்த ராஜ்ய ரகசியங்கள் இவ்வளவு தூரம் எப்படித் தெரிந்தன?' என்று ஆனந்ததேவி வியந்தாள்.

அவள் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்த தோரமானா அவள் எண்ணங்களை எடை போட்டு, "தேவி! என் பெயர் தோரமானா. ஹூணர்கள் சைன்னியத்தில் ஒரு சேனாதிபதி. ஹூணர்களுக்குச் சில நாட்கள் குப்த ராஜ்யத்தில் வேவு பார்த்தும் இருக்கிறேன். என்னைப் பற்றி வேறு ஏதாவது தெரிந்துகொள்ள இஷ்டமிருந்தால் கேளுங்கள்; அடிமை பதில் சொல்லத் தயாராயிருக்கிறேன்" என்றான்.

அவன் குரலில் பணிவு தொனித்தாலும் அவன் பணியக்கூடிய ஆளல்ல என்பதை அறிந்துகொண்ட ஆனந்த தேவி மேலும் அநாவசியமாகப் பேச்சை ஓட்டாமல், "நான் இங்கிருப்பது உனக்கு எப்படித் தெரியும்?" என்று நேரடியாகக் கேள்வியை வீசினாள்.

தோரமானா இந்தக் கட்டத்தை முன்கூட்டியே எதிர் பார்த்திருந்தான். ஆகவே ஒளிவுமறைவு ஏதுமில்லாமல் சொன்னான்: "மகாராணி இங்கு வந்திருப்பது எனக்குத் தெரியாது. அதோ மஞ்சத்தில் கிடக்கும் உபாத்தியாயனை வேலைக்காரர்கள் தூக்கிச் செல்வதை அடிலன் மாளிகையின் மேல்தளத்திலிருந்து பார்த்தேன். வேலைக்காரர்கள் போக்கு எனக்குச் சந்தேகமாயிருந்ததால் அவர்களைப் பின் தொடர்ந்தேன். உபாத்தியாயனை உள்ளே விட்டுச் சென்ற வேலைக்காரர்கள் வெளிக்கதவைச் சாத்தாமல் சென்று விடவே உள்ளே நுழைந்தேன். மகாராணியைப் பார்த்ததும் எனக்கே தூக்கிவாரிப் போட்டது. இருந்தாலும் மகாராணியைப் பார்த்தும் பாராதது போல் போவது நியாயமல்லவென்று நிதானித்தேன். உபாத்தியாயனை அழைத்துச் செல்ல மகாராணிக்கு உள்ள கஷ்டத்தை அறிந்ததும் நாம்

உதவாமல் செல்வது சரியல்ல என்றுதான் குரல் கொடுத்தேன்'' என்று, தான் வந்த காரணத்தை விவரித்தான் தோரமானா.

தோரமானாவுக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் ஆனந்ததேவியே திகைத்தாள். ஒளிவு மறைவு எதுவுமின்றி வெட்ட வெளிச்சமாகத்தான் தோரமானா பேசினான். ஆனால், உள்ளூர என்ன யோசிக்கிறான், என்ன பலனை உத்தேசித்துத் தனக்கு உதவுவதாகச் சொல்கிறான் என்பதை ஆனந்ததேவியால் கூட ஊகிக்க முடியவில்லை. அந்தச் சங்கடத்திலிருந்து அவளைத் தப்புவிக்கத் தோரமானா தானாகவே முன்வந்து, "தேவி! உதயனைச் சற்று வெளியே போகச் சொன்னால் நாம் மனம்விட்டுப் பேசிக் கொள்ளலாம்'' என்றான்.

இரண்டு பெரிய மலைகளுக்கிடையில் அகப்பட்ட துருப்பு போல ராஜ்ய விவகாரங்களை அலசும் அந்த இரண்டு சூழ்ச்சிக்காரர்கள் பேச்சு வார்த்தைகளைக் கேட்டு என்ன செய்வதென்று புரியாமல் நின்றுகொண்டிருந்த உதயன் தன்னை விட்டால் போதுமென்று வெளியே சவாரி விட்டான். அவன் சென்றதும் வெகு ஜாக்கிரதையாகக் கதவைச் சாத்திக்கொண்டான் தோரமானா. பிறகு ஆனந்த தேவியை மஞ்சத்தில் உட்காரும்படி கேட்டுக் கொண்டான். உபாத்தியாயனை அணுகி அவனுக்கு நினைவு வந்து விட்டதா என்பதையும் பரிசோதித்தான். இத்தனை முன்னேற்பாடுகளுக்குப் பிறகு ஆனந்ததேவியை நோக்கினான். "தேவி, ஸ்கந்தகுப்தன் சிம்மாசனத்திலிருப்பது தங்களுக்கு மாத்திரமல்ல, எனக்கும் பிடிக்கவில்லை'' என்று சம்பாஷணையைத் துவக்கினான் தோரமானா.

"எனக்குப் பிடிக்கவில்லை என்பது உனக்கு எப்படித் தெரியும்?'' என்று ஆனந்ததேவி கேட்டாள்.



"சக்களத்தி பிள்ளையைப் பிடிக்காதது இயற்கை. தன் மகன் சிம்மாசனத்தில் உட்கார வேண்டுமென்று ஒரு தாய் விரும்புவது மிகவும் இயற்கை. இவற்றைத் தவிர சக்களத்தி மகன் வயோதிகனாய், வியாதியஸ்தனாய் ராஜ்யத்தை நேராக ஆள வலுவிழந்துள்ளபோது அடுத்த அரசன் யார் என்ற கேள்வி ராஜகுடும்பங்களில் எழுவது எல்லாவற்றையும் விட இயற்கை. தாங்கள் மலைவாசலுக்கு வந்து வில்லவர் ஆதரவைத் தேடுவது மேற்சொன்ன இயற்கையின் கேள்விகளுக்கு மிகப் பொருத்தமான பதிலை அளிக்கிறது.''

"அது கிடக்கட்டும். ஸ்கந்தகுப்தன் சிம்மாசனத்திலிருப்பதால் உனக்கென்ன சங்கடம்?''

"பல சங்கடங்கள் இருக்கின்றன. ஸ்கந்தகுப்தன் ஹூணர்கள் எல்லோரையும் வெறுக்கிறான். யாரிடமும் அவனுக்கு நம்பிக்கையில்லை. இன்னும் சில நாட்களில் நான் ஹூணர்கள் கொண்ட ஒரு பெரும் படையுடன் மாளவத்தின் எல்லைக்குச் செல்கிறேன். ஆனால், மாளவத்தை நான் தாக்கப் போவதில்லை.''

தோரமானாவின் இந்தப் பேச்சு ஆனந்ததேவிக்குப் பெரிய ஆச்சரியத்தை விளைவித்தது. "ஏன் தாக்கப் போவதில்லை?'' என்று கேட்டாள்.

"ஹூணர்கள் தற்சமயம் இருக்கும் நிலையில் அவர்கள் எந்த ராஜ்யத்தையும் ஸ்திரமாக ஸ்தாபிக்க முடியாது. கொடுமை அதிகமானால் ஜனங்களை ஒரு கட்டாக அதிக நாள் நிறுத்திவைக்க முடியாது. ஆகையால் ஹூணர்கள் தற்போது இருக்கும் பிராந்தியத்தில் அமைதியைப் பரப்புவதே என் நோக்கம். அப்படிச் சட்டமும் அமைதியும் பரவினால்தான் ஜனங்கள் அடங்குவார்கள். ஹூணர்கள் தற்போது கைக்குள் போட்டுக்கொண்டிருக்கும் ஸிந்து நதிப் பிரதேசமும் ஓர் அமைதியான ராஜ்யமாகும். அந்த மாதிரி ஒரு ராஜ்யத்தை ஸ்தாபித்து...''

"நீ ஆளப் பார்க்கிறாய்?" என்று இடைமறித்துச் சொன்னாள் ஆனந்ததேவி.

"ஆம்! ஆகையால்தான் பக்கத்திலிருக்கும் குப்த ராஜ்யத்தோடு விரோதங் கொள்ள நான் இஷ்டப்படவில்லை. ஹூணர்களைக் கட்டுப்படுத்தி சரியான நிர்வாகத்திற்குள் கொண்டுவர எனக்கு ஐந்து வருஷ நிம்மதி தேவை. அதை ஸ்கந்தகுப்தன் அளிக்கமாட்டான்" என்றான் தோரமானா.

"என் பிள்ளை அளிப்பானென்பது என்ன நிச்சயம்?"

"மகாராணியின் சொல்படிதான் பிள்ளை நடப்பாரென்பது எனக்குக் கேள்வி. இதோ பாருங்கள், குப்த சைன்னியத்தால் இப்பொழுது ஹூணர்களை ஜெயிக்க முடியாது. ஸ்கந்தகுப்தன் வியாதியடைந்த பிறகு அதன் கட்டுப்பாடு பெரிதும் குலைந்திருக்கிறது. இது மகாராணிக்குத் தெரியும். இப்பொழுது குப்த ராஜ்யத்துக்கு வேண்டுவது ராஜ்ய விஸ்தரிப்பல்ல. உள்நாட்டு அமைதி, சைன்னியத்தை வலுப்படுத்தல்– இவைதான் தேவை. இவற்றை அளிக்கப் பூர குப்தனால்தான் முடியும்" என்றான் தோரமானா.

"குப்த ராஜ்ய அமைதியில் உனக்கு ஏன் இவ்வளவு அக்கறை?" என்று ஆனந்ததேவி வினவினாள்.

"சுயநலம்தான் காரணம். காரணங்களைத்தான் முன்னமே சொல்லிவிட்டேனே. இதைப்பற்றி இனிமேல் நாம் தர்க்கிக்க வேண்டாம். நீங்கள் உபாத்தியாயனை எடுத்துச் செல்லுங்கள். ஹூணப் படையில் யார் உங்களைத் தடுத்தாலும் இதோ இந்த மோதிரத்தைக் காட்டுங்கள்" என்று தன் விரலிலிருந்த மோதிரத்தைக் கழற்றி ஆனந்ததேவியிடம் கொடுத்தான்.

அவளுக்கு அப்பொழுதும் சந்தேகம் விடவில்லை. மோதிரத்தை வாங்கிக்கொள்ளாமலே, "இதில் ஏதோ சூது இருக்கிறது" என்றாள்.



"தேவி! உங்களுக்குத் தீங்கிழைக்க வேண்டுமென்றால் இப்பொழுதே உங்களை அடிலன் வீட்டுக்குக் கொண்டு போக என்னால் முடியும். உங்களுக்கு நான் பரோபகார சிந்தையால் உதவவில்லை, ஆகையால் சந்தேகம் வேண்டாம். வாங்கிக் கொள்ளுங்கள்" என்றான்.

ஆனந்ததேவி தயக்கத்துடன் மோதிரத்தை வாங்கிக் கொண்டு உதயனைக் கூப்பிட்டாள். உதயன் பச்சிலையுடன் உள்ளே வந்து உபாத்தியாயன் ரணங்களில் அவற்றை வாட்டி வைத்துக் கட்டுக்கள் போட்டான். அவன் கட்டுப் போட்ட பிறகும் உபாத்தியாயன் கண் திறக்கவில்லை. "இன்னும் மயக்கத்திலிருக்கிறான். வண்டியில் தூக்கி வையுங்கள்" என்றாள் ஆனந்ததேவி. உதயனும் தோரமானாவும் உபாத்தியாயனைப் பிடித்துத் தூக்கி வண்டியில் வைத்தார்கள்.

வண்டி புறப்படுகையில், "தேவி, நாம் பேசியது நம் இருவரைத் தவிர வேறு யாருக்கும் தெரிய வேண்டாம். தங்கள் அந்தரங்க ஆசையை நான் வெளியிடமாட்டேன்" என்றான் தோரமானா ஆனந்ததேவியைப் பார்த்து.

ஆனால், மிகக் கூர்மையான புத்தியை உடைய தோரமானாகூட ஒரு பெரிய தவற்றைச் செய்துவிட்டான். உபாத்தியாயன் அவன் நினைத்ததுபோல் அதிக மயக்கத்தில் இல்லை. மகாராணியும் தோரமானாவும் பேசிய எல்லாவற்றையும் வெகு ஜாக்கிரதையாகக் கேட்டுக் கொண்டிருந்தான். அவன் கண்கள் மூடியிருந்தனவேயொழிய, 'மாளவ எல்லைக்குத் தோரமானா ஏன் போகிறான்? தேச அமைதி ஒன்றுதான் இவன் நோக்கமா?' என்ற கேள்விகள் அவன் மூளைக்குள் ஓடிக்கொண்டிருந்தன. மகாராணி ஆனந்ததேவியும் தன்னுடன் ஒரு பெரிய விரோதியை அழைத்துச் செல்கிறோம் என்பதை அறியாமலே உபாத்தியாயனை வெகு ஜாக்கிரதையாக வண்டியின் மஞ்சத்திலிருந்து பாதுகாத்துக் கொண்டு சென்றாள்.

# 9. மகாராணிக்கு வரவேற்பு

ஆசை மனிதனுக்கு அபாரத் துணிச்சலைக் கொடுக்கிறது. பின்னால் வரக்கூடிய லாபத்தை உத்தேசித்து எத்தகைய அபாயத்தையும் சமாளிக்க முன் வருகிறான். மனித சரித்திரத்தில் இதற்கு உதாரணங்கள் ஏராளமாயிருக்கின்றன. திக்குத் தெரியாத தீவுகளில் பெயர் தெரியாத திருடர்கள் விட்டுப்போன பொக்கிஷத்தை எடுத்து வரக் கடலோடி, பிராணனை விட்ட பேராசைக்காரர்கள் எவ்வளவு பேர்? அரசு பெறும் ஆசையால் ஆளும் மன்னர்களைக் கொல்ல அக்கம்பக்கத்திலுள்ளவர்கள் கையாண்ட சூழ்ச்சிகள் எத்தனை? தாம்பூல மாத்திரைகளிலும், பாலிலும், அன்னத்திலும் விஷத்தைக் கலந்தவர்கள் எத்தனை பேர்? அகப்பட்டுக் கொண்டால் தலை போய்விடும் என்று தெரிந்திருந்தும் உயிரைக்கூடப் பணயம் வைத்து இத்தகைய துணிகரச் செயல்களில் ஏன் இறங்கினார்கள்? ஆசை! அந்த ஆசை உந்தியிருக்காவிடில் ஒரு மகாராணி தன்னந்தனியாக எங்கோ இருக்கும் எதிரிகள் பிராந்தியத்துக்குள் நுழையத் துணிவாளா?

பாடலிபுத்ரம் எங்கே? மலை வாசலிருக்கும் புருஷபுரம் எங்கே? இந்தியாவின் ஒரு கோடியிலிருந்து மற்றொரு கோடி. வேறொரு சாதாரண ஸ்திரீயாயிருந்தால் பிரயாண தூரத்தை நினைத்தாலே நடுநடுங்கியிருப்பாள். ஆனால், ராஜமாதாவான ஆனந்ததேவி இதையெல்லாம் லக்ஷியம் செய்யும் வர்க்கத்தில் சேர்ந்தவளல்ல. அபாயங்களைத் துரும்பென நினைக்கும் குப்த வம்சத்தில் தோன்றியவள். அத்துடன் பிள்ளையை எப்படியாவது சிம்மாசனத்தில் உட்கார



வைத்துக் கண்ணால் பார்க்க வேண்டும் என்ற ஆசை நிரம்பப் பெற்றவள். அவள் ஆசை அபாயத்தைப் புறக்கணித்தது. ஊக்கம் அவள் நெஞ்சுக்கு உறுதியளித்தது.

பூரகுப்தனை சிம்மாசனத்தில் ஏற்ற வேண்டுமென்றால் ஏற்கெனவே திடமாக அதில் உட்கார்ந்திருக்கும் ஸ்கந்தகுப்தனை அதிலிருந்து நீக்க வேண்டும். ஆனால் அது அவ்வளவு எளிய காரியமல்ல என்பது ஆனந்ததேவிக்கு நன்றாகத் தெரியும். ஸ்கந்தகுப்தன் மக்களுக்குத் தெய்வம் போலிருந்தான். புஷ்யமித்ரர்கள் படையெடுப்பிலிருந்தும் ஹூணர்கள் குரூரத்திலிருந்தும் ஜனங்களை யுவராஜாவாக இருக்கும்போதே காப்பாற்றிய ஸ்கந்தகுப்தனுக்கு ஏதாவது நேரிட்டு, அதற்குத் தான் காரணம் என்பது ஜனங்கள் மனத்தில் பட்டுவிட்டால் அப்புறம் தனக்கோ தன் மகன் பூரகுப்தனுக்கோ இந்த உலகத்தில் எந்த வேலையும் இருக்காது என்பதையும், மகனுக்கு அடுத்தபடி ஏதாவது சிம்மாசனம் தேடுவதென்றால் இதுவரை யாரும் பார்த்தறியாத மேல் உலகத்தில்தான் தேடவேண்டுமென்பதையும் ஆனந்ததேவி நன்கு உணர்ந்திருந்தாள்.

அபாயத்தின் தன்மையை உணர்ந்து கொண்ட ஆனந்ததேவி அதற்குப் பரிகாரத்தையும் புத்திசாலித்தனமாகத் தேடினாள். சாவிலும் வாழ்விலும் தன் மகனுக்குத் துணையாக நிற்கக்கூடிய வீரர்கள் ஆயிரம் பேரைச் சம்பாதிக்க வேண்டும் என்பது ஒரு யோசனை. அடுத்தபடியாக ஸ்கந்தகுப்தனின் தலைநகரிலிருந்து விலகி, யாரும் சந்தேகிக்க முடியாத இடத்திலிருந்து சதியைக் கிளப்ப வேண்டும் என்பது இன்னொரு யோசனை. இந்த இரண்டு யோசனைகளையும் சரியாக உருவாக்க இரண்டு முறைகளை மேற்கொண்டாள். ஆயிரம் வீரரைச் சம்பாதிக்க அரசனிடம் அதிருப்தி உள்ள பிராந்தியத்தை நாடினாள். இந்தியாவில் குறிவைத்து அம்பு எய்வதில் நிகரற்ற வில்லவர்கள் ஹூணர்

களிடம் படும் கொடுமையால் ஸ்கந்தகுப்தனிடம் பெரிதும் அதிருப்தி அடைந்திருக்கிறார்கள் என்பதை அறிந்து கொண்டாள். ஆகையால் அந்த ஸ்தலத்திலிருந்து வீரர்களைத் திரட்டலாம் என்று தீர்மானித்தாள். இரண்டாவதாக சதியைச் சந்தேகத்துக்கு இடமின்றி உருவாக்கப் பாடலிபுத்ரமே சிறந்ததென்று முடிவு செய்து தன் வாசஸ்தலத்தையும் அங்கு மாற்றிக்கொண்டு விட்டாள்.

மௌரியர்கள் காலத்தில் அஷ்டைசுவரியத்துடன் விளங்கி உலகத்தின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் ராஜ தூதர்களையும், சிற்பிகளையும், சைத்ரிகர்களையும், கலாரசிகர்களையும் வசீகரித்து வரவேற்று, கீழ்க்கோடிக்கே ஒரு தீபம் போல் விளங்கி வந்த பாடலிபுத்ரம், ஸ்கந்தகுப்தன் காலத்தில் கேட்பாரற்றுக் கிடந்தது. பெரிதாகப் படர்ந்து கிடந்த தங்கள் சாம்ராஜ்யத்தின் தலைநகராக இருக்கப் பாடலிபுத்ரத்தைவிட அயோத்தியே சிறந்ததென்று கருதிய குப்தமன்னர்கள் அயோத்தியைப் பிரதான நகரமாக்கி, அழகிய பாடலிபுத்ரத்தை ஏறெடுத்தும் பார்க்காமலிருந்து விட்டார்கள்.

ஆனால், பாடலிபுத்ரத்தைப் போன்ற இன்னொரு நகரத்தைச் சிருஷ்டிக்கப் புதிதாக மயன் அவதாரம் எடுத்தால் தான் முடியும். இப்பொழுது சோணா நதியென்று அழைக்கப்படும் சுவர்ணா நதியின் வடகரையிலே, சோணாவும் கங்கையும் கலக்கும் முக்கூட்டுத் தலத்தில் நிறுவப்பட்ட பாடலிபுத்ரத்தின் மதில்கள் தேக்கு மரத்தால் அமைக்கப்பட்டவை. நகரத்தைச் சுற்றி வளைத்து நின்ற மர அரணைத் துளைத்து நின்றன, அறுபத்து நான்கு வாசல்கள். வாசல்கள் மீதும், நகரத்துக்குள்ளிருந்த மாளிகைகள் மீதும் நிர்மாணிக்கப்பட்ட ஐநூற்று எழுபது கோபுரங்கள், உயரமாக எழுந்து நின்ற மர மதிலுக்குப் புறம்பே கிடந்த மூன்று அகழிகளில் பிரதிபலித்து, அங்கிருந்த முதலைகளோடும் பெரிய மீன்களோடும் போட்டியிட்டு விளையாடிக் கொண்



டிருந்தன. இத்தகைய நகரத்தில் வீடுகளும் மரங்களாலேயே கட்டப்பட்டிருந்தன. மர வீடுகளாகையால் தீப்பற்றிக் கொண்டால் அணைப்பதற்குத் தெரு நெடுக அண்டாக்களில் ஜலம் வைத்திருக்க வேண்டும் என்பது மௌரிய அரசர்கள் ஆக்ஞை. தண்ணீர் வைக்காத வீட்டுக்காரனுக்கு அபராதம் உண்டு. வீட்டுக்குத் தீ வைத்தவனை தீயில் எறிந்து கொன்றார்கள். இப்படிப் பாதுகாக்கப்பட்ட மர வீடுகளி லெல்லாம் சித்ர வேலைப்பாடுகள் நிரம்ப இருந்தன. நகர மத்தியிலிருந்த அரசர் அரண்மனையும் சேர்ந்து பாடலி புத்ரம் எத்தகைய கடின மனத்தையும் பிடித்திழுத்துப் பரவசப்படுத்தும் பெரியதோர் சித்திரச்சாலையாகத் தோன்றியது.

இத்தகைய பாடலிபுத்ரத்தை ஒரு சதிக் களஞ்சியமாக்க
ஆனந்ததேவி தீர்மானித்ததில் எத்தகைய ஆச்சரியமுமில்லை
ஏனென்றால் பாடலிபுத்ரத்தின் கோட்டைக் கதவுகளை
மூடிவிட்டால் சேனை உட்புகுவதுகூட அசாத்தியம். தவி
வஞ்சகத்தால் காரியத்தை நிறைவேற்ற வசதிகளும் அரச
அரண்மனையில் உண்டு. மன்னன் துயிலும் அறைகள் ப
ஒவ்வோர் அறையின் கீழும் நிலவறை ஒன்று உண்
நிலவறை மூலம் யார் வந்து எப்பொழுது அரசரை
கொன்று விடுவார்களோ என்ற பயத்தால் பல பள்
அறைகளை அரசன் கட்டி வைத்திருந்தான். எந்த அறையி
அரசர் எந்த இரவில் படுப்பாரென்று படுக்கை விரிக்கு
தாதிக்குத் தவிர வேறு யாருக்கும் தெரியாது. மகுடம் தரி
தலை பிரதி தினமும் நிம்மதியின்றித் திருடனைப் போல
படுத்தும் உறக்கம் வந்ததோ என்னவோ யார் அறிவார்

ஆனந்ததேவி ஒன்றை மட்டும் அறிந்திருந்தா
ஸ்கந்தகுப்தனை அழிப்பதாயிருந்தால் இந்த நிலவறை
தனக்கு உதவியாயிருக்கும் என்றும், அவற்றில் வில்லவா

சிலரைத் தங்கவைத்தால் அரசன் தலை துறக்காவிட்டாலும் முடி துறக்க ஒப்புக்கொள்ளும்படி செய்யலாமென்றும் எண்ணினாள். இத்தனை சாமர்த்தியமாகத் திட்டம் போட்டு இல்லாத கஷ்டங்களைச் சமாளித்து மலைவாசலுக்கு வந்த ஆனந்ததேவிக்கு எதிர்பாராதவிதமாகத் தோரமானாவின் உதவியும் கிடைத்தது.

ஆனந்ததேவி தோரமானாவை நம்பவில்லை. தோரமானாவும் ஆனந்ததேவியை நம்பவில்லை. இருவர் அபிலாஷைகளும் நேர் எதிரானவை. பூரகுப்தனை மன்னனாக்கி ஹூணர்களை ஜெயித்து அவனைப் பெரிய சக்கரவர்த்தியாக்கிவிட வேண்டும் என்பது ஆனந்ததேவியின் கனவு. மாளவத்தின் முன்பு ஹூணர்கள் படைகளைக் கொண்டு போய் நிறுத்தி மெள்ள மாளவத்தை வெல்லுவதோடு, ஹூணர்களை ஓர் ஒழுங்குபடுத்திக் கட்டுப்பாடு செய்து ஹூண சாம்ராஜ்யத்தைப் பாரத நாட்டில் அமைக்க வேண்டும் என்பது தோரமானாவின் கனவு. இந்த இரண்டு சாம்ராஜ்யக்காரர்களுக்கும் பொதுவில் இருந்த இடைஞ்சல் ஸ்கந்தகுப்தன். அவனை விலக்குவதில் இருவரும் ஒத்துழைக்க முற்பட்டார்கள். இல்லாவிட்டால் தோரமானா தன் மோதிரத்தை ஆனந்ததேவிக்குக் கொடுத்தே இருக்க மாட்டான்.

இவ்வளவு சிக்கலில் ஆரம்பமான அஜித் சந்திரன் பயணம் முடிய இரண்டு மாத காலமாயிற்று. சாதாரணமாக அந்தக் காலத்தில் புருஷபுரத்திலிருந்து பாடலிபுத்ரத்துக்கு வரவேண்டுமானால் இருபது நாட்களில் வந்துவிடலாம். ஆனந்ததேவி மறைமுகமாக மாறு பெயரில் பிரயாணம் செய்ய நேர்ந்தபடியாலும், யமுனையைக் கடந்து வழியில் அயோத்தியில் அகப்பட்டுக்கொள்ள இஷ்டப்படாதபடியாலும் சுற்று வழியாகப் பிரயாணம் செய்தாள். பஞ்ச நதிகளையும் தாண்டி யமுனையின் மேல் கரையோடு நெடுகப் பயணம் செய்து பாடலிபுத்ரத்துக்கு வந்து சேர்ந்தாள். வியாதியஸ்தனுக்கு ஆங்காங்கு வைத்தியம் செய்ய வேண்டி வந்ததால் அதிலும் சிறிது தாமதமேற்பட்டது. இத்தனை தாமதத்திலும் அவள் பயணம் இன்பகரமாகவே இருந்தது. தோரமானாவின் மோதிரத்தில் ஏதோ மந்திரந்தான் இருந்திருக்க வேண்டும். அதைப் பார்த்த ஹூணர்கள் அவளுக்கு ராஜமரியாதை செய்து வழியனுப்பினார்கள். உபாத்தியாயனுக்குக் கசையடி பலமாயிருந்தும் இரண்டு மூன்று நாள் சிகிச்சையிலேயே பெரிதும் குணப்பட்டுவிட்டான். குப்த ராஜ்யத்தில் வைத்தியத்துக்குக் கஷ்டமே இல்லை. வழிநெடுக வைத்தியசாலைகள் மௌரியர் கால முதலே இருந்து வந்தன. இலவச வைத்தியத்துக்காகப் பச்சிலைகள் வளர்க்க அரசர்கள் மான்யங்கள் விட்டிருந்தார்கள். அந்தக் காலத்தில் நாட்டுக்குள் வந்த யாருக்கும் உணவுக்கோ, வைத்தியத்துக்கோ வேறெந்த உதவிக்கோ எத்தகைய குறைச்சலும் இல்லை.

இவ்வளவு உபசாரமுள்ள நாட்டில் நுழையும் எவன்தான் அதிகநாள் வியாதிகளுடன் இருக்கமுடியும்? உபாத்தியாயன் காயங்கள் வெகு சீக்கிரத்தில் ஆறிவிட்டன. பதினைந்தாவது நாள் முதற்கொண்டு ஆனந்ததேவியின் இரட்டைக் குதிரை வண்டியை அவனே ஓட்ட ஆரம்பித்தான். வழியில் ஆங்காங்கு தங்கி அவர்கள் பிரயாணம் செய்ய நேர்ந்தது. அடுத்த ஒரு மாத காலத்தில் உபாத்தியாயன் எவ்வளவு புத்தி கூர்மையுள்ளவன் என்பதை ஆனந்ததேவி அறிந்து கொண்டாள். அவன் கல்வி அறிவைக் கண்டு வியந்தாள். அவன் பேச்சில் தொடர்ச்சியாகத் தொனித்த ஹாஸ்யத்தைக் கண்டு ஆச்சரியப்பட்டாள். பிரயாண காலத்திற்குள் ஆனந்ததேவி உபாத்தியாயனிடம் பெருமதிப்புக் கொண்டதோடு இவனையும் தன் சக்திக்கு ஒரு கருவியாக உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டும்

என்ற முடிவுக்கு வந்தாள். உபாத்தியாயன் அவளிடம் பேச்சுக் கொடுக்கும்போதெல்லாம் வெளியில் தமாஷாக உள்ளூர ஓடிக்கொண்டிருந்த எண்ணங்களை அறிவதில் சிரத்தையுடன் எவ்வளவோ முறை தூண்டிலை வீசினான். ஆனால், ஆழமான பெண் மனத்திலிருந்து எந்த எண்ண மீனும் அந்தத் தூண்டிலில் சிக்கவில்லை. ஸ்கந்தகுப்தன் நன்மையில் நேர் விரோதமான அபிப்பிராயம் கொண்ட அந்த இருவரும் ஒருவரையொருவர் ஆழம் பார்ப்பதிலேயே கருத்துள்ளவர்களாக வெளிச்சிரிப்பும் உள் விஷமுமாய்ப் பேசிப் பேசிப் பயணத்தை முடித்துக்கொண்டு பாடலிபுத்ரத்துக்கு வந்து சேர்ந்தார்கள்.

சோணாநதி ஜலத்தால் பளபளவென மின்னிக்கொண்டிருந்த பாடலிபுத்ரத்தின் முதல் அகழிக்கெதிரில் ராணியின் வாகனத்தை நிறுத்திய அஜித் சந்திரன் ஒருமுறை பாடலிபுத்ரத்தின் கம்பீரக் காட்சியைப் பார்த்துப் பெருமூச்செறிந்தான்.

“என்ன யோசிக்கிறாய் அஜித்? நடுவாசல் வழியாக அரண்மனைக்கு ஓட்டு” என்று துரிதப்படுத்தினாள் ஆனந்ததேவி.

“ஒன்றுமில்லை மகாராணி! நாகரிகத்தின் இருப்பிடமாயிருந்த நகரம் இப்படிக் கேட்பாரற்றுக் கிடக்கிறதே என்று பார்க்கிறேன்” என்றான் அஜித் சந்திரன்.

“மீண்டும் இதே நாகரிகத்தின் சிகரமாகலாம். யார் கண்டார்கள்? ஒரு அரசன் காலத்தில் இருக்கும் தலைநகரம் இன்னொரு அரசன் காலத்திலும் தலைநகராக இருக்கவா முடிகிறது? மீண்டும் யோகம் வந்தால் இது மீண்டும் தலைநகரமாகுமல்லவா?” என்று கேள்வியை வீசினாள் ஆனந்ததேவி.





“இந்த நகரத்திற்கு யோகம் தேவையில்லை மகாராணி! இதில் வசிக்கவே ஓர் அதிர்ஷ்டம் வேண்டும்” என்று சொல்லிவிட்டு நடுவாசலுக்காக வண்டியை அஜித் சந்திரன் ஓட்டினான். நடுவாசலை நெருங்கியதும் இரண்டு வீரர்கள் ஈட்டியால் வண்டியைத் தடுத்தார்கள்.

“வண்டி அரண்மனைக்குச் செல்கிறது” என்று அஜித் சந்திரன் சற்று அதட்டலாகச் சொன்னான், உள்ளே மகாராணி இருக்கும் தைரியத்தால்.

“அரண்மனைக்கு எந்த வண்டியும் செல்வதற்கில்லை” என்று இன்னும் சற்று அதட்டலான குரலில் சொன்னான் வண்டியைத் தடை செய்த வீரர்களில் ஒருவன்.

வண்டியின் திரைமறைவிலிருந்த ஆனந்ததேவி, “ஏன்?” என்று கேட்டாள்.

இந்தக் கேள்வியையும் அதில் தொனித்த அதிகாரத்தையும் கேட்ட காவலாளிகள் கொல்லென்று சிரித்தார்கள். அவர்கள் சிரிப்பதைக் கண்ட உபாத்தியாயனும் புன்முறுவல் செய்தான். ஆனந்ததேவியின் உக்கிரம் எல்லை கடந்துவிட்டது.

“அஜித்! அரண்மனைக்கு வண்டிகள் ஏன் போகக்கூடாதென்று அந்த மடையர்களைக் கேள்” என்றாள்.

இந்த வேடிக்கையை இன்னும் சற்று நீட்ட இஷ்டப்பட்ட அஜித் சந்திரனும், “என்னடா சிரிக்கிறீர்கள்? வண்டிக்குள்ளிருப்பது யார் தெரியுமா?” என்று மிரட்டினான்.

“ஏன், பெரிய மகாராணியை ஏற்றிக்கொண்டு வந்திருக்கிறாயோ? போய்யா, வண்டி அரண்மனைக்குப் போகாதென்றால் போய்விடு. வீணாகக் கலவரம் செய்தால் தலை போய்விடும்.”

“தலை போய்விடுமா?”

"உன் தலை மாத்திரமல்ல, எங்கள் தலைகளும் போய் விடும். அரண்மனையில் இப்பொழுது அந்தக் கிழட்டு மகாராணியில்லை; சக்கரவர்த்தி இருக்கிறார்."

இந்த பதிலைக் கேட்ட அஜித் சந்திரன் ஆச்சரியத்தால் ஸ்தம்பித்தான். ஆனந்ததேவி திகைப்பால், "ஸ்கந்த குப்தனா?" என்று வாய்விட்டுப் பெரிதாகச் சொல்லிவிட்டாள்.

அடுத்த விநாடி வண்டித் திரையை ஈட்டி தாங்கிய வீரர்கள் கிழித்தார்கள். "சக்கரவர்த்தியின் பெயரை அவமரியாதையாக உச்சரித்தது யார்?" என்று மிரட்டலுடன் வண்டியின் உள்ளே எட்டிப் பார்த்த வீரர்கள் இருவர் முகத்திலும் அடுத்த விநாடி பிணக் களை சொட்டியது. "மகாராணி, மன்னிக்க வேண்டும்" என்று ஈட்டிகளைத் தாழ்த்தி மரியாதை செய்தார்கள். ஆனந்ததேவிக்கோ அஜித் சந்திரனுக்கோ எதுவும் பேச அதற்குமேல் அவகாசமில்லை. "மகாராணி ஆனந்ததேவி பராக்" என்று ஒரு வீரன் கூச்சலிட்டான். கூச்சலை அடுத்து கோட்டைக் கதவுகள் பெரிய சத்தத்துடன் திறக்கப்பட்டன. மகாராணியின் வரவை அறிவிக்க டமாரங்கள் முழங்கின. கோட்டை வாயிற் குதிரைப் படை அணிவகுத்து நின்றது. ரகசியமாகப் பாடலிபுத்ரத்துக்குள் நுழைய நினைத்த ஆனந்ததேவியின் வண்டியை ராஜமரியாதையுடன் அஜித் சந்திரன் ஓட்டிச் சென்றான். இத்தனை சத்தமும் ஆனந்ததேவியின் காதுகளில் விழவில்லை. அந்தக் கிழட்டு மகாராணி என்று காவலன் இகழ்ந்ததைக்கூட அவள் பொருட்படுத்தவில்லை. 'ஸ்கந்த குப்தன் ஏன் பாடலிபுத்ரத்துக்கு வந்திருக்கிறான்?' என்ற கேள்வியே திரும்பத் திரும்ப எழுந்து அவள் மனத்தைச் சம்மட்டி கொண்டு அடித்தது.

# 10. தங்க நாணயம்

நகர மத்தியிலிருந்த சக்கரவர்த்தியின் அரண்மனை, கிரேக்கர்களைப் பாரத நாட்டை விட்டு விரட்டிய சந்திர குப்த மௌரியன் காலத்தில் கட்டப்பட்டது. அரண்மனைக் கட்டடத்தை நெருங்கு முன்பாக பல வாயில்களைக் கடந்தாக வேண்டும். வாயில்களுக்கு இடையிடையே நிறுவப்பட்டிருந்த நந்தவனங்கள் அரண்மனையின் அடிப்பாகத்தை மறைத்திருந்தன. நாலைந்து வாயில்களைக் கடந்த பின்புதான் அரண்மனையைப் பார்க்க முடியும். ஒவ்வொரு வாயிலிலும் நால்வகைப் படைகளும் இருந்தன. ஸ்கந்தகுப்தன் காலத்தில் தலைநகரம் மாறிவிட்டதன் காரணமாகப் பாடலிபுத்ர அரண்மனை வழியில் வாயிலுக்கு வாயில் படைகள் வரிசையாக நிறுத்தப்படாவிட்டாலும் சாஸ்திரத்துக்கு ஓரிரண்டு யானைகளும் ஐந்தாறு குதிரைகளும் இருந்து கொண்டிருக்கும். இந்த வாயில்களைக் கடந்து சென்றால் அரண்மனையை நெருங்கலாம். அரண்மனை பூராவும் தேக்குமரக் கட்டடந்தான். ஆனால், வானளாவும் மரத்தூண்கள், வெள்ளி, தங்கக் கவசங்களால் மூடப்பட்டிருந்தன. அதிலிருந்த தங்கப் பதுமைகளின் கண்கள், நெற்றி, இதர அவயவங்களை அழகுபடுத்த கோமேதகம், வைரம், வைடூரியம் முதலிய உயர்தரக் கற்கள் உபயோகப்படுத்தப்பட்டிருந்தன. சந்திரகுப்த மௌரியன் காலத்தில் கீழ்த்திசைக் கலைக்கும் செல்வச் செழிப்புக்கும் இந்த அரண்மனை ஓர் அத்தாட்சியாக விளங்கி வந்தது. ஐரோப்பாவிலிருந்த எந்தச் சக்கரவர்த்தியின் அரண்மனையும் இதற்கு ஈடில்லையென சரித்திர ஆசிரியர்கள் எல்லோருமே ஒப்புக்கொள்கிறார்கள்.

குப்த அரசர்களால் புறக்கணிக்கப்பட்டும் அரண்மனை அதன் முழு அழகையும் இழக்கவில்லை. தூண்களில் வெள்ளிக் கவசங்கள், தங்கக் கவசங்கள் குறைந்திருந்தன. ஆனால், கடைந்தெடுக்கப்பட்ட அழகிய பதுமைகளை யாரும் பின்னப்படுத்தவில்லை. மரச் சுவர்களிலும் மற்ற எல்லா இடங்களிலும் உலோகம் குறைந்திருந்ததே ஒழிய, உலகம் புகழும் அதன் அழகு சற்றும் குறையவில்லை.

அரண்மனை வழிகளெல்லாம் அஜித் சந்திரனுக்கு நன்றாகத் தெரியுமாதலால் ராணியின் வண்டியை வெகு வேகமாக ஓட்டி ராஜ ஸ்திரீகள் வசிக்கும் அந்தப்புர வாசலுக்கெதிரில் நிறுத்தினான். ஆனந்ததேவிக்கு இருந்த யோசனையில் அவனிடம் எதுவும் பேசாமலேயே இறங்கி உள்ளே சென்றுவிட்டாள். அஜித் சந்திரனும் வண்டியை வாகன சாலையில் விட்டுவிட்டு, வீரர்கள் இருக்கும் இடங்களை நாடினான். வீரர்களில் பலர் அவனுக்குப் புதிதாக இருந்தாலும், தெரிந்தவர்களும் ஓரிருவர் இருந்த படியால், அடிமை உடைகளை மாற்றவும் அந்தஸ்துக்கு ஏற்ற அலங்காரத்தை முடித்துக் கொள்ளவும் அவனுக்கு வசதி கிடைத்தது.

இளைப்பாற அவனுக்கு அவகாசமில்லை. குப்த சாம் ராஜ்யத்தை எதிர்நோக்கியிருக்கும் பெரிய ஆபத்தை அறிந்தவன் எப்படி இளைப்பாற முடியும்? சக்கரவர்த்தியை அவன் உடனே பார்க்க விரும்பினான். ஆனால், சக்கர வர்த்தியைப் பார்ப்பது சாதாரண உப சேனாதிபதிக்கு அவ்வளவு எளிதல்ல. ஆனந்ததேவியின் உதவியால் பார்க் கலாம். 'ஏன் சக்கரவர்த்தியைப் பார்க்க அவசரப்படு கிறாய்?' என்று ஆனந்ததேவி கேட்டால் என்ன பதில் சொல்வது? அவளுக்கு ஒருமுறை தன்மீது சந்தேகம் ஏற்பட்டு விட்டால் தனக்குச் சிறை நிச்சயம் என்பதையும், அப்புறம் இந்த ஜன்மத்தில் சக்கரவர்த்தியைப் பார்க்க முடியா தென்பதையும் அறிந்திருந்தான். ஆகவே சக்கரவர்த்தியைப் பார்க்கச் சற்று நிதானமாகவே ஏற்பாடுகளைச் செய்தான். உடனிருந்த வீரர்களை முதலில் விசாரித்தபோது சக்கர வர்த்தியின் வியாதி கடுமையாயிருக்கிறதென்றும் வைத்தியத் துக்காகவே அவர் பாடலிபுத்ரத்திற்கு வந்திருப்பதாகவும் சொன்னார்கள். வெகு நாளாக அவர் வியாதியுற்றிருந்த விஷயம் அஜித் சந்திரனுக்குத் தெரியுமாதலால், வாழ்க்கை யில் எதையும் லக்ஷியம் செய்யாத சக்கரவர்த்தி வியாதியை லக்ஷியம் செய்யமாட்டாரென்பதும் அஜித் சந்திரனுக்குத் தெரியும். வியாதியைப் பற்றிய தகவல் வீரர்களுக்காகச் சொல்லப்பட்ட வெளிச் சாக்கே தவிர, இதில் உள் மர்மம் ஏதோ இருக்கிறதென்று தீர்மானித்தான். இப்படி யோசித்து யோசித்து முடிவில் ராஜத்வாரத்தையும் அடைந்தான்.



ஏராளமான வெளிநாட்டுத் தூதர்கள் ராஜத்வாரத்தை அடுத்த மஹாலில் உலாவிக் கொண்டிருந்தார்கள். ஒவ்வொருவரும் சக்கரவர்த்தி பேட்டிக்காக மாதக் கணக்கில் காத்துக் கொண்டிருப்பவர்கள். குறுக்கும் நெடுக்கும் மஹாலில் சென்று கொண்டிருந்த மந்திரிகள் முக்கியமான பேர்வழிகளை மட்டும் சக்கரவர்த்தியிடம் அழைத்துச் சென்று கொண்டிருந்தார்கள். அஜித் சந்திரனும் இந்தக் கும்பலில் மெள்ளக் கலந்து கொண்டான். பிறகு, மஹாலில் நடுவில் பேட்டி கேட்பவர்களின் பட்டியலைக் கையில் வைத்து நின்றுகொண்டிருந்த ஸ்தானீகனிடம் தன் பெயரை யும் எழுதிக்கொள்ள மனுச் செய்தான்.

ராஜஸ்தானீகன் தன் ஸ்தானத்திற்குரிய கேள்விகளை வீசினான்.

"உன் பெயரென்ன?"

"அஜித் சந்திரன்!"

"எங்கிருந்து வருகிறாய்?"

"புருஷபுரத்திலிருந்து."

ஸ்தானீகன் கையிலிருந்த எழுத்தாணி சட்டென்று நின்று விட்டது. "அடிலனிடம் அடிமையாயிருந்தவன் நீதானா?" என்று மிகுந்த கோபத்துடன் கேட்டான். அஜித் சந்திரனால் அவன் கோபத்துக்கான காரணத்தை ஊகிக்க முடியவில்லை. இருந்தாலும் 'ஆம்' என்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தான்.

"இத்தனை நேரம் எங்கு சென்றுவிட்டாய்? ஆனந்த தேவி வந்தது முதல் சக்கரவர்த்தி உன்னைப் பற்றித்தான் விசாரித்துக் கொண்டிருக்கிறார்" என்றான் ஸ்தானீகன்.

அஜித் சந்திரனால் ஸ்தானீகன் பேச்சை நம்பவே முடியவில்லை. "சரி. இப்படி வா" என்று ஸ்தானீகன் அஜித் சந்திரனை அழைத்துக் கொண்டு பக்கத்திலிருந்த அறைகளின் வழியாகச் சென்றுவிட்டான். கேவலம் ஓர் உப சேனாதிபதிக்கு அடித்த அதிர்ஷ்டத்தைப் பார்த்து மஹாலிலிருந்த ராஜதூதர்கள் ஆச்சரியப்பட்டார்கள். பல அறைகளைக் கடந்து சென்ற ஸ்தானீகன் சக்கரவர்த்தியின் அறையை நெருங்கியதும் உபாத்தியாயனை வெளியில் நிற்க வைத்துத் தான் மாத்திரம் உள்ளே சென்றான். சற்று நேரம் பொறுத்து வெளியே வந்து உபாத்தியாயனை உள்ளே அனுப்பிவிட்டுக் கதவைச் சாத்திக்கொண்டான். அறை மூலையிலிருந்த பஞ்சணையில் சக்கரவர்த்தி ஸ்கந்தகுப்தன் சாய்ந்துகொண்டிருந்தான். வயோதிக தசையை அடைந்து விட்டாலும் அவன் கண்களில் மட்டும் வீர ஒளி பிரகாசித்தது. கன்னத்திலும், கைகளிலும் ஆடை மறைக்காத இடங்களில் இருந்து ஏராளமான வடுக்கள் அவன் வீரனாகவே பிறந்து வீரனாகவே வளர்ந்தவன் என்பதை நிரூபித்தன. அஜித் சந்திரன் சக்கரவர்த்தியை அணுகிக் கைகூப்பினான்.



கிட்டே வரும்படி சக்கரவர்த்தி சைகை காட்டவே அருகில் சென்று ஸ்கந்தகுப்தன் பாதங்களைக் கண்ணில் ஒத்திக் கொண்டான்.

"அஜித்!" என்று ஸ்கந்தகுப்தன் மெல்ல அழைத்ததும் உபாத்தியாயனுக்கு மெய்சிலிர்த்தது. "இந்த அடிமையை நினைவு வைத்துக் கொண்டிருக்கிறீர்களா!" என்று கேட்டான்.

"வீரன் வீரனை மறக்க மாட்டான் அஜித். உன்னையும் என்னையும் தொலைவில் பிரித்து நிறுத்துவது மகுடம். அரண்மனையில்தான் நாம் தொலைவில் நிற்போம். யுத்த அரங்கத்தில் நம் தோள்கள் உராய்ந்திருக்கின்றன அல்லவா?" என்றான் ஸ்கந்தகுப்தன். யுத்த களத்திலேயே வாழ்க்கையைச் செலவிட்ட ஸ்கந்தகுப்தனுக்குப் படுக்கை வேம்பாயிருப்பதை அஜித் சந்திரன் உணர்ந்து கொண்டான். ஆகையால் பேச்சை மாற்றி "வியாதி மட்டும் சக்கரவர்த்தியை வாட்டாதிருந்தால்..." என்று ஆரம்பித்த அஜித் சந்திரனை கையால் சைகை செய்து நிறுத்தினான் ஸ்கந்தகுப்தன்.

"அதைப் பற்றிப் பேசாதே அஜித். என் வியாதி சாம்ராஜ்யத்தின் வியாதியால் ஏற்பட்டது. அதற்குப் பரிகாரம் கிடைத்தால்தான் இந்த வியாதி போகும். இதற்கு வேறு மருந்தில்லை."

சக்கரவர்த்தியின் வார்த்தைகள் அஜித் சந்திரன் மனத்தை உருக்கின. அவன் வருந்துவதை அறிந்த ஸ்கந்தகுப்தன் சிரித்துப் பேச்சை முக்கிய மார்க்கத்தில் திருப்பினான்.

"அஜித்! நீ ஹூணர்களோடு சில வருஷங்கள் வசித்திருக்கிறாயே, தோரமானா என்பவனைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறாயா?" என்ற ஸ்கந்தகுப்தன் கேள்வி, அஜித் சந்திரனை அதிரச் செய்துவிட்டது.

"சக்கரவர்த்தியவர்களிடம் அதைப்பற்றிப் பேசத்தான் பேட்டி கேட்டேன். அடிலனிடம் கசையடிபட்டு மலைவாசலில் உதயன் வீட்டுப் படுக்கையில் கிடந்தபோது ஒருமுறை பார்த்தேன். ஆனால் சரியாகப் பார்க்க முடியவில்லை. கண்ணைத் திறந்திருந்தால் இங்கு உயிரோடு வந்திருக்கமாட்டேன். அவனைப் பார்க்கவில்லையே தவிர அவன் பேசியவற்றைக் கேட்டேன்."

"அஜித்! குப்த சாம்ராஜ்யத்தின் முக்கிய எதிரி அவன்தான். அவன் மாளவத்தைப் பிடித்துக் கொண்டால் குப்த சாம்ராஜ்யம் அழிந்து போகும்."

"மாளவத்தை அவன் உடனே பிடிக்கப் போவதில்லை."

சக்கரவர்த்தியின் புருவங்கள் ஆச்சரியத்தால் சிறிதே உயர்ந்தன. "சக்கரவர்த்தியவர்களும் நானும் சற்றுத் தனிமையாக இருக்க வேண்டும்" என்று அஜித் சந்திரன் கேட்டுக் கொண்டான்.

சக்கரவர்த்தி திரும்பி அண்டையில் நின்று கவரி வீசிக் கொண்டிருந்த ஸ்திரீகளைப் பார்த்தார். அவர்கள் அறையை விட்டுப் பறந்தனர். அஜித் சந்திரன் மிகத் தாழ்ந்த குரலில் பேச ஆரம்பித்தான். அதற்கு முன்பே ஸ்கந்தகுப்தன் அவனிடம், "ஆனந்ததேவி மலைவாசல் சென்றது எனக்குத் தெரியும். காரணத்தையும் அறிவேன். வேறு ஏதாவது விசேஷமுண்டா?" என்று கேட்டார்.

"ஆனந்ததேவி தோரமானாவைச் சந்தித்தாள்" என்ற பெரிய வெடியை வீசினான் அஜித். ஸ்கந்தகுப்தன் ஒரு விநாடி அசந்துபோனான். பிறகு மேலே விஷயங்களைச் சொல்லும்படி சைகை செய்தான். ஆனந்ததேவி அகஸ்மாத்தாகத் தோரமானாவைச் சந்தித்த விவரங்களை அஜித் விவரமாக எடுத்துச் சொன்னான். அவர்கள் பேச்சிலிருந்த சதியாலோசனைகளையும் தெளிவுபடுத்தினான்.



கதையைக் கேட்டபின் ஸ்கந்தகுப்தன் வெகுநேரம் மௌனமாக யோசித்தான். "இதற்குப் பரிகாரம் ஏதாவது யோசித்தாயா!" என்றான் இறுதியில்.

"தோரமானா எக்காரணத்தைக் கொண்டும், மாளவத்தைப் பிடிக்க முடியாமல் செய்ய வேண்டும். மாளவ எல்லையில் தோரமானாவின் சைனியத்துக்கு நிகரான சைனியத்தை நிரந்தரமாக நிறுத்தி வைக்க வேண்டும்."

சக்கரவர்த்தி பதில் சொல்லவில்லை. அஜித்தே பேசினான்: "தோரமானா மாளவ எல்லையில் நிறுத்தும் சைனியத்துக்குச் சமமான சைனியத்தை நிறுத்த வேண்டும். அந்த சைனியத்தைத் தனியாகத் திரட்டி அதற்கு ஹூணர்களின் போர் முறைகளில் பயிற்சி அளிக்க வேண்டும். அந்தப் பணியை என்னிடம் ஒப்படைத்து விடுங்கள். ஹூணர்களை நான் நன்றாக அறிவேன். தங்கள் ஆதரவும் உத்தரவும் கிடைத்தால் தோரமானா மாளவத்தில் கால் வைக்க முடியாதபடி செய்துவிடுகிறேன்" என்றான்.

"என் ஆதரவு எந்த முறையில் தேவை?" என்று ஸ்கந்தகுப்தன் கேட்டான்.

"இரண்டு லக்ஷம் ஸ்வர்ணங்களைக் கொடுத்து உதவுங்கள். ஒரு லக்ஷத்தில் சைன்னியத்தைத் திரட்டுகிறேன். இன்னும் ஒரு லக்ஷத்தை ஹூணர்களை வேவு பார்ப்பதில் செலவழிக்கிறேன்."

இதைக் கேட்டதும் ஸ்கந்தகுப்தன் வியாதியையும் மறந்து உறக்கச் சிரித்துவிட்டான். வெகு நாளாகச் சிரிக்காத சக்கரவர்த்தி சிரிக்கவே, வெளியிலிருந்த ஸ்தானீகன் பயந்து உள்ளே ஓடிவந்தான். ஸ்கந்தகுப்தன் அவனைக் கூப்பிட்டு, "நான்கு ஸ்வர்ணங்களைக் கொண்டு வா" என்றான். ஸ்தானீகன் கொண்டுவந்த ஸ்வர்ணங்களில் ஒன்றை

வாங்கிப் பார்த்த அஜித் சந்திரன் திடுக்கிட்டு, "இது என்ன இப்படி இருக்கிறதே!" என்றான்.

"இதற்குப் பெயர்தான் ஸ்கந்தகுப்தன் ஸ்வர்ணம். தங்க நாணயத்தின் மாற்றை 107லிருந்து 73ஆகக் குறைத்து விட்டேன். இந்தத் தங்க நாணயம் வெளியூரில் செல்லாது" என்று சொல்லி, மீண்டும் பலமாகச் சிரித்தான் ஸ்கந்த குப்தன். "சக்கரவர்த்தியின் கஜானாவில் பணமில்லை! அஜித், இதோ இந்தத் தூண்களின் தங்கக் கவசங்களைக் கூட உருக்கிவிட்டேன். பணம் கேட்காதே; வேறு வழியைச் சொல்" என்று வலியுறுத்தினான்.

"அவ்வளவு பணப் பஞ்சமா?"

"ஆம்; இல்லாவிட்டால் தங்க மதிப்பைக் குறைப்பேனா? எவ்வளவு யுத்தங்கள், எவ்வளவு படையெடுப்பு? நான் ஜன்மமெடுத்த நாளாய் யுத்தந்தானே. யுத்தமென்றால் பணம்! தொடர்ச்சியான யுத்தமென்றால் எந்த நாடும் ஏழை யாகிவிடும். நீ கேட்கும் பணம் இன்று என்னிடமிருந்தால் ஹூணர்கள் ஸிந்து நதிப் பிராந்தியத்தில் மூன்று மாதங்கள் இருக்க மாட்டார்கள். பணமில்லை அஜித்! பாரதத்தின் சக்கரவர்த்தி இன்று ஒரு பரதேசி."

அஜித் வெகுநேரம் யோசித்து ஒரு முடிவுக்கு வந்தான். "இன்னும் ஒரு வழி இருக்கிறது" என்றான்.

"என்ன வழி!"

"சாணக்கியன் காட்டிய வழி."

"விவரமாகச் சொல்."

"தயவுசெய்து தங்கள் பிரதம மந்திரியை வரவழை யுங்கள்."

பிரதம மந்திரி அழைக்கப்பட்டார். அந்த மூவரும் அந்த அறையில் என்ன பேசினார்கள் என்பது யாருக்கும்



தெரியாது. முடிவில் அஜித் சந்திரன் வெளியே வந்து வேகமாக மஹாலைக் கடந்து சென்று விட்டான்.

அவனைத் தொடர்ந்து மிகுந்த கோபத்துடன் வெளியே வந்த பிரதம மந்திரி ஸ்தானீகனைப் பார்த்து, குப்த வீரர்கள் வரவர லக்ஷணமாகிக் கொண்டு வருகிறார்கள். யாரோ ஹூணன் மகளாம், சித்ராதேவியாம், அவளை மணப்பதற் காக ஹூணர்களோடு சேர்ந்துவிட அனுமதி கேட்கிறான் ஒரு மடையன்; சக்கரவர்த்தியும் அனுமதி கொடுக்கிறார். இந்த மாதிரி சந்தேகப் பிராணிகள் இங்கிருந்து நம்மைக் காட்டிக் கொடுப்பதை விட ஒழிவதே நல்லது" என்றார்.

அடுத்த விநாடி இந்த ரகசியம் அரண்மனை எங்கும் பரவிவிட்டது. ஒரு பெண்ணுக்காகக் குப்த சேனாதிபதி ராஜ சேவையையும், கடமையையும், தேச பக்தியையும் துறந்து எதிரிகள் கையாளாகி விட்டான் என்ற செய்தி நகர மக்களுக்குக்கூடத் தெரிந்துவிட்டது. அஜித் சந்திரன் என்ற பெயரையே ஜனங்கள் சபித்தார்கள்.

உபாத்தியாயன் போன இடம் தெரியவில்லை. காலச் சக்கரத்தின் வேகம் அஜித் சந்திரன் ஒருவன் இருந்தான் என்ற நினைப்பையே மக்களிடமிருந்து அழித்துவிட்டது.

# 11. மணநாளுக்கு முதல் நாள்

வஸந்த ருது நான்கு முறை வந்து போய்விட்டது. ஆனால், சித்ராதேவியின் வாழ்க்கையில் மட்டும் வஸந்தம் சிறிதும் புகவே இல்லை. அந்த நான்கு வருடங்களில் இயற்கையின் கைகள் அவள் உடல்வாசியைப் பலவிதமாகச் செப்பனிட்டு அவளை ஒரு சித்திரப் பதுமையைப் போல் ஆக்கியிருந்தன. மண்ணை வழிக்க வேண்டிய இடத்தில் வழித்து, சேர்க்க வேண்டிய இடத்தில் சேர்த்து, மனோகரமான பிம்பத்தைச் சிருஷ்டிக்கும் சிற்பியைப் போல இயற்கையும் தன் வேலைப்பாட்டைக் காட்டியிருந்தபடியால், சித்ராதேவி சுமக்க முடியாத பல புஷ்பங்களைச் சுமந்து நிற்கும் குருக்கத்திக் கொடிபோல அபார எழிலுடன் விளங்கினாள். அத்தனை அழகிருந்தும் அந்த அழகு ஸிந்துநதிப் பிரதேசம் பூராவும் பிரசித்தி பெற்றிருந்தும், அவளைப் புகழும் நாக்குகள் ஆயிரக்கணக்கில் இருந்தும், அவள் முகத்தில் பூரண சந்தோஷத்தின் சாயை என்றுமே தென்படவில்லை. அவள் புன்சிரிப்பில் சதா ஓர் ஏக்கம் இருந்து கொண்டிருந்தது. அவள் பார்வையில் ஓர் ஏமாற்றம் காணப்பட்டது. அஜித் சந்திரனை உலகம் மறந்து விட்டதென்னவோ உண்மை. ஆனால் சித்ராதேவி மட்டும் மறக்கவில்லை. அந்த நான்கு வருடங்களில் அவள் உடல் வளர்ச்சியுடன் அஜித் சந்திரனும் அவள் மனத்தில் வளர்ந்து மனப் பிரதேசம் பூராவையும் ஆக்கிரமித்துக் கொண்டான்.

நான்கு வருடங்களுக்கு முன்பு சண்பகத் தோட்டத்தில் உபாத்தியாயன் தன்னைத் தொட்டு அழைத்ததை சித்ராதேவி மறக்கச் சக்தியற்றவளானாள். சூரிய ரச்மியினால் தொடப்பட்ட புஷ்பமொட்டுப் போல் உபாத்தியாயன் ஸ்பரிசத்தால் வெட்கம் மலர்ந்த அந்த ஹூண மகளின் உள்ளம் அவனை நினைத்தே ஏங்கிக்கொண்டிருந்தது. முதல் முதலாகத் தங்களுக்கு ஏற்படும் புருஷ ஸ்பரிசத்தைப் பெண்கள் ஆயுள் உள்ளவரை மறப்பதே இல்லை. இயற்கையின் உணர்ச்சிகள் அலைகள்போல் துள்ளி நிற்கும் பருவ காலத்தில் பெண்களுக்கு நாணம் பெரிய ஏரிக்கரைபோல் நின்று அலைகளைத் தேக்கி நிறுத்துகின்றது. எவன் முதலில் அந்தக் கரையை உடைக்கிறானோ அவன் நிலத்தின் பக்கமாகவே பிரவாகம் செல்லும். கரை உடைந்த பின்னும் மண்ணைப் போட்டு ஜலத்தைக் காபந்து செய்யலாம். ஆனால், முதலில் போன ஜலம் போனதுதான். தவிர முதன் முதலாக உடைக்கப்பட்ட கரைப் பக்கம் என்றும் பலவீனமாக நிற்கிறது. நீர் மட்டம் சற்று அதிகமானாலும் உடைப்பு அதே இடத்தில் ஏற்பட்டு அந்தப் பக்கமாகவே பிரவாகம் செல்கிறது. இயற்கையின் இந்த நியதியை அடிலன் உணர்ந்திருந்தால் சித்ராவின் ஏக்கத்துக்குக் காரணத்தை உணர்ந்து கொண்டிருப்பான். பெண் மனத்தை ஆண்பிள்ளை அவ்வளவு சுலபமாக உணர முடிந்தால், உலகத்தின் சிக்கல்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது எப்பொழுதுமே ஏற்பட்டிருக்காது.

அவள் ஏக்கத்துக்குக் காரணம் பருவம் என்பதை மட்டும் ஓரளவு அடிலன் தெரிந்துகொண்டு அவளுக்கு மணம் செய்விக்கவும் தீர்மானித்தான். அதற்கான ஏற்பாடுகளும் பலமாக நடந்து கொண்டிருந்தன. கபீசத்திலிருந்த ஹூணர்கள் தலைவனே சித்ராவுக்கு ஒரு புருஷனைத் தேர்ந்தெடுத்து அனுப்பியிருந்தான். சுமார் ஒரு மாத காலமாக அடிலன் மாளிகையிலேயே தங்கியிருந்த அந்த மணமகனை சித்ரா ஏறெடுத்துப் பார்க்கவே இல்லை. அவனை முதல் தடவை சந்தித்தபோதே அவனிடத்தில்

அவளுக்குச் சொல்லவொண்ணாத வெறுப்பு ஏற்பட்டது. அவளுக்குக் கணவனாக வரவிருந்த ராகுலன் பிறப்பில் கூர்ஜரனாயிருந்தாலும் குணங்களில் ஹூணர்களை வென்றவன். தன்னுடனிருந்த பெருங் கூர்ஜரப் படையுடன் ஹூணர்களோடு சேர்ந்து பாரதத்தை நாசமாக்க ஏற்பட்டவர்களில் ராகுலன் ஒருவன் என்ற காரணத்தால் கபிசத்திலிருந்த தலைவன் அவனுக்குச் சித்ராதேவியைக் கொடுக்கும்படி அடிலனுக்குச் சிபாரிசு செய்தான்.

ராகுலன் நல்ல உயரமாக ஒற்றை நாடியாயிருந்தான். இயற்கையாகக் கோழையாயிருந்தாலும் வஞ்சகம் நிறைந்தவன். தன்னை எதிர்த்தவர்களை வஞ்சகத்தாலேயே அழித்து வந்தானாகையால் அவனைக் கண்டு ஹூணர்களில் கூடப் பலர் பயந்தனர். ராகுலன் பார்வையோ அவன் நடந்து கொண்ட முறையோ சித்ராதேவிக்குச் சிறிதும் பிடிக்கவே இல்லை. 'அடிமையாயிருந்தாலும் அடிலனை நேருக்கு நேர் எதிர்த்து நின்ற உபாத்தியாயன் எங்கே? கபடம் நிறைந்தவனும் நேருக்கு நேர் போர் செய்ய ஆண்மையற்றவனுமான இந்த ராகுலன் எங்கே?' என்று நினைத்தாள். இவள் என்ன நினைத்து என்ன? மணநாள் மெள்ள மெள்ள நெருங்கிக் கொண்டே வந்தது. மனிதன் எண்ணப்படி உலகத்தில் காரியங்கள் நடப்பதானால், அவள் திருமணமும் நடந்தேயிருக்கும். ஆனால் திருமணத்திற்கு முன்பாக மலைவாசல் பிராந்தியத்தில் கிளம்பிய புரட்சிச் சூறாவளியால் அவள் திருமணம் தவிடுபொடியாகும் நிலைமை எழுந்தது.

அநேக நாட்களாக அடிலன் கொடுமையில் அடங்கிக் கிடந்த வில்லவர், ஹூணர்களை எதிர்க்க எழுந்தனர். அவர்கள் திடீரெனப் புரட்சிக்குக் கிளம்பியதைக் கண்ட அடிலனே அசந்துவிட்டான். வில்லவரைத் தான் வைத்திருந்த நிலையில், அவர்கள் மனத்தில் தான் விதைத்துப் பயிராக்கியிருந்த பயத்தில், அவர்கள் துணிந்து எழுந்து வருவார்கள் என்று அடிலன் நம்பவே இல்லை. அவர்கள் பயத்தை அறுத்துத் துணிவூட்டவும், அவர்களுக்கு வேண்டிய ஆயுதங்களைக் கொடுத்து உதவவும், பின்னால் ஒரு சக்தி இருக்கிறது என்பதை அடிலன் நிச்சயமாக அறிந்திருந்தான். ஆனால், அந்தச் சக்தி எது, அவர்களைத் தூண்டுபவன் யார் என்பதை மட்டும் அடிலன் தெரிந்து கொள்ள முடியவில்லை. எங்கோ இருக்கும் பாடலிபுத்ரத்திலிருந்து குப்த சக்கரவர்த்தி அவர்களுக்கு உதவியளிக்க முடியாது என்பதை அடிலன் அறிவான். ஆகவே, புரட்சிக்குப் பின்னாலிருப்பவன் யார் என்பதைப் பற்றி யோசித்து அடிலன் ஒன்றும் புரியாமல் ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்தான். இந்த ஆச்சரியம் அடிலனுக்கு மட்டுமல்ல, ஆனந்ததேவிக்கும் இருந்தது. ஏனென்றால் ஆனந்ததேவியிடம் வாக்கு கொடுத்தபடி வில்லவர் தலைவனான உதயன் பல வில்லவர்களைப் பாடலிபுத்ரத்துக்கு அனுப்பினான். ஆனால், ஒருவன்கூட பாடலிபுத்ரத்திற்குப் போய்ச் சேரவில்லை. எங்கு சென்றார்கள் என்பது மர்மமாகவே இருந்தது. வீரர்கள் வந்து சேர்ந்ததைப் பற்றித் தகவல் கிடைக்காத உதயன் அனுப்பிய தூதன் மட்டும் ஆனந்ததேவியிடம் போய்ச் சேர்ந்தான். உதயனிடமிருந்து வந்த கடிதத்தைப் பார்த்த ஆனந்ததேவி பயந்துவிட்டாள். ஐநூறு வீரர்களை உதயன் அனுப்பியு அவர்கள் வந்து சேராததிலிருந்து விஷயத்தை ஒருவா ஊகித்தாள். வீரர்களை அனுப்பும்படி தான் உதயனிட சொன்னது தோரமானா ஒருவனுக்குத்தான் தெரியும். அவ தான் வீரர்களை மடக்கியிருக்க வேண்டும் என்று தீர்மானி தாள். ஆனால், பாடலிபுத்ரத்தில் இருக்கும் அவள் என் செய்யமுடியும்? ஆகவே ஒற்றர்களைக் கொண்டு ம வாசல் நிலையைக் கவனிக்கத் தொடங்கினாள். ஐநூ வீரர்களை இழந்தும் மலைவாசல் வில்லவர் புரட்சி செ கிறார்கள் என்ற செய்தி அவளை ஆச்சரியத்தில் ஆழ்

விட்டது. அத்தனை ஆச்சரியத்திலும் இத்தனைக்கும் காரணம் தோரமானாதான் என்பதில் ஆனந்ததேவிக்குச் சிறிதும் சந்தேகம் இல்லை. மலைவாசல் புரட்சியை ஆனந்ததேவியைத் தவிர வேறு யாரும் முன்கூட்டி எதிர்பார்க்கவே இல்லை. தன் சொந்தக் காரியத்தை உத்தேசித்து ஒற்றர்களை வைத்துக் கவனித்ததால்தான் அவளுக்கு ஓரளவு உண்மை தெரிந்தது. மற்றபடி புயலுக்கு முன்னிருக்கும் வானநிலை போல புரட்சிக்கு முன்னிருந்த மலைவாசல் நிலை மிக அமைதியாகவே தென்பட்டது.

மலைவாசல் புரட்சிக்கு முன்னதாக, புரட்சி ஏற்படும் என்பதற்கு அறிகுறி ஏதும் இல்லை. வில்லவர்கள் நடத்தை சந்தேகத்துக்குரியதாகவோ, அவர்கள், அடிலன் வீரர்களை எதிர்த்து தாக்குதலில் இறங்கும் மனப்பான்மையுடையவர்களாகவோ இல்லை. தவிர, மலைவாசலிலிருந்து மாளவம் வரை அமைதியையும், ஒழுங்கையும் ஸ்தாபிக்க தோரமானாவின் படைப் பிரிவுகள் அடிக்கடி நடமாடிக் கொண்டிருந்தன என்பதும் பிரசித்தமாயிருந்தது. அப்பேர்ப்பட்ட காலத்தில் எந்தவித முன்னெச்சரிக்கையுமின்றித் திடீரென வில்லவர் எழுந்தார்களென்றால் அதை எப்படி அடிலன் எதிர்பார்த்திருக்க முடியும்? ஆகவே, புரட்சியைச் சமாளிக்க எந்தவித ஏற்பாடும் செய்யவில்லை. சித்ராதேவியின் திருமணத் தேதிக்கு முதல் நாள் மாளிகை அரணுக்கு முன்னால் திடீரென ஏற்பட்ட பேரிரைச்சலுக்குப் பிறகுதான் அவனுக்கு விஷயம் ஒருவாறாகப் புரிந்தது.

விளக்கு வைத்து நான்கு நாழிகைகள்தான் ஆகியிருக்கும். வில்லவர், தங்கள் வீடுகளிலிருந்து ஆயுதபாணிகளாகச் சாரிசாரியாகக் கிளம்பினார்கள். பல வருஷங்களாகக் கேட்காத அவர்கள் போர் முரசு பலமாகக் கேட்டது. அடிலன் மாளிகை வெளி அரணை அடைந்தும் முரசொலி நிற்கவில்லை. முரசொலியோடு அவர்கள் தீ வைத்த காட்டு



விறகுகள் படீர்படீரென வெடிக்கும் சப்தமும் சேர்ந்து கொண்டு இரவை வெகு பயங்கரமாக்கின. மாளிகை அரணைச் சுற்றிலும் தீ பலமாக எரிந்தது. காட்டு மரத் துண்டுகளிலிருந்து கிளம்பிய ஜ்வாலை பெரிய ராக்ஷசனின் நாக்கைப்போல் செந்நிறமாக நின்று ஆகாயத்தை ருசி பார்க்கத் துடித்தது. வில்லவர் போர்க்களத்தில் பாடும் பாட்டுகளைப் பாடினார்கள். சிலர் கூச்சலிட்டார்கள். அடிலனை அழிக்கும் உற்சாகத்தில் அவர்கள் வெறி உச்ச நிலையை அடைந்தது.

மாளிகைக்குள்ளே குதூகலம் நிரம்பி நின்றது. ஹூண பிரபுக்கள் நன்றாகக் குடித்திருந்தார்கள். அலங்காரத்துடன் நின்ற சித்ராதேவியைச் சுற்றி இருபது இருபத்திரண்டு கூர்ஜர ஸ்திரீகள் கூடிப் பரிகாசம் செய்துகொண்டிருந்தார்கள். மாளிகை முழுவதும் ஒரே சிரிப்பு. சில பெண்கள் பாடினார்கள்; சிலர் ஆடினார்கள். நாடோடி ஜாதியாரான ஹூணர்கள் சம்பந்தத்தால் கூர்ஜர ஸ்திரீகளும் ஆண்பிள்ளைகளுக்குச் சமமாகக் கலந்து அந்தக் காட்டுமிராண்டி ஆட்டங்களில் தீராத களிவெறி கொண்டிருந்தார்கள். மாளிகைக்குள் சத்தம் பலமாயிருந்தது. ஆனால் வெளிச் சத்தம் பொறுக்க முடியாததாகவே, உள்ளேயிருந்த ஆர்ப்பாட்டம் சிறிது நின்றது. வாயிலில் காவலிருந்த இருவீரர்கள் கதவுகளைப் படேரென்று திறந்துகொண்டு உள்ளே ஓடி வந்தார்கள்.

"என்ன இது? உங்களை யார் இங்கு வரச் சொன்னது?" என்று அடிலன் கோபத்தோடு கேட்டான்.

"வில்லவர்கள் மாளிகையைச் சூழ்ந்து கொண்டிருக்கிறார்கள்."

"வெளி அரணுக்கு நெருப்பு வைத்திருக்கிறார்கள்."

"இன்னும் சிறிது நேரத்தில் அரண்மனைக் கதவு விழுந்துவிடும்."

இப்படி வேலைக்காரர் மாறிமாறிச் சொன்னதைக் கேட்ட அடிலன், கோபம் தலைக்கேறினவனாய், “சமயம் சந்தர்ப்பம் தெரியாமல் இந்தச் செய்தியைக் கொண்டு உள்ளே ஓடிவர உங்களுக்கு எவ்வளவு துணிச்சல்?” என்று இரைந்தான்.

“அதற்கு நாங்கள் என்ன செய்யட்டும் எஜமான். வெளியே வந்து நீங்களே நிலைமையைப் பாருங்கள்” என்றான் ஒரு காவலன்.

“இன்னும் இரண்டு விநாடிகளுக்குள் கலையாவிட்டால் அவர்களில் பத்துப் பேரை என் தோட்டத்திலிருக்கும் மரங்களில் தூக்குப் போட்டுக் கொல்லுவேன் என்று அந்த நாய்களிடம் சொல்லுங்கள்” என்று அடிலன் உத்தர விட்டான். ஆனால், அவன் உத்தரவோடு கிளம்பிய வெளிச் சத்தத்திலிருந்து நாய்கள் ஓநாய்களாக மாறிவிட்டதை அவன் தெரிந்துகொண்டான். அந்தச் சத்தம் குடியால் மயங்கியிருந்த இதர ஹூணர்களுடைய புத்தியையும் சிறிது நிதானத்துக்குக் கொண்டு வந்தது. கூர்ஜர ஸ்திரீகளின் முகங்களில் சிரிப்பு மாறிப் பயக்களை சுடர்விட்டது. அடிலன் சுற்றிலுமிருந்த ஹூணர்களையும் பயத்தால் நடுங்கி நின்ற அந்த ஸ்திரீ களையும் வெறுப்புடன் பார்த்துவிட்டு மாடிப்படிகளில் ஏறிச் சென்றான். மாடிக் கைப்பிடிச் சுவரிலிருந்து வெளியே நின்ற வில்லவரைப் பார்த்த பின்புதான் நிலைமையின் முழு வேகம் அவன் புத்தியில் உராய்ந்து உஷ்ணத்தை உண்டாக்கிக் கண்களில் தீப்பொறி பறக்கும் நிலைக்கு அவனைக் கொண்டு வந்தது.

அதிவேகமாக மீண்டும் கேளிக்கைக் கூடத்தில் நுழைந்த அடிலனை ஹூணப் பிரபுக்கள் சூழ்ந்து கொள்ள, கோபத்தை வெளிக்குக் காட்டாமலே, “வில்லவர் மாளிகைக்கு நெருப்பு வைக்கிறார்கள். நிலைமை ஆபத்தானதுதான்” என்றான் அடிலன்.



கூர்ஜர ஸ்திரீகள் உடல் மட்டுமின்றி மாப்பிள்ளையாக வரப்போகும் ராகுலன் உடலும் சிறிது நடுங்கியது. இதே வில்லவர் விருந்துக்கு வருவதாயிருந்தால் அத்தனை பேரை யும் விஷம் வைத்துக் கொல்ல ராகுலனுக்குத் தெரியும். ஆனால், ஆயுதம் தாங்கிப் போரிடுவது அவனுக்கு அவ்வள வாகப் பழக்கமில்லை. ஸ்திரீகள் ‘சளசள’வென்று ஏதோ பேசினார்கள். வயதான ஓரிரண்டு ஸ்திரீகள் அழவும் ஆரம்பித்தார்கள். அவர்கள் அனைவரிடமும் பிரதிபலித்த பயத்தைப் பார்த்த அடிலன் கோபம் எல்லை கடந்து விட்டது.

அடிலன் பெண்களைப் பார்த்து ஒரே இரைச்சலாக இரைந்தான். “உங்கள் கூச்சலைக் கொஞ்சம் அடக்கிக் கொள்ளுங்கள். சாவதாயிருந்தால் அதற்கு வழிகள் பல இருக்கின்றன. பயத்தால் சாகவேண்டாம்” என்றான்.

வருங்கால மாப்பிள்ளை ராகுலன் இந்த வார்த்தை களைப் பொறுக்காமல், “இங்கிருப்பவர்கள் உங்கள் விருந்தினர்கள் என்பது நினைவிருக்கட்டும்” என்றான்.

அடிலன் இதழ்களில் கோபச் சிரிப்புத் தோன்றியது. மாப்பிள்ளைக்கு வெகு சமீபத்தில் வந்தான். பெண்ணைக் கொடுக்கும் நோக்கமில்லாதிருந்தால் ஓங்கி ஓர் அறைகூடக் கொடுத்திருப்பான். பெண்ணைக் கொடுக்கும் உத்தேசத்தால் அடிக்காமல் அடிக்குச் சமமான வார்த்தைகளைக் கொட்டி னான்.

“விருந்தினரா! வாசலில் சென்றால் விருந்து இப் பொழுது யதேஷ்டமாகக் கிடைக்கும். இந்தப் பெண்கள் பயந்து, கூச்சலிடுவது புரட்சிக்காரர்களுக்குத் தெரிந்தால் அவர்கள் துணிச்சல் பன்மடங்காகிவிடும். ஆகையால், இந்த அம்மணிகள் சாகவேண்டுமானால் வீரப் பெண்களாகச் சாகட்டும். கழுத்து திருகப்படும் சமையலறைக் கோழிகளைப்

போல் கத்தி என் காதைத் துளைக்க வேண்டாம்'' என்று சொல்லிவிட்டு இடிஇடி என்று சிரித்தான்.

அவன் பேச்சும் சிரிப்பும் மற்ற ஹூணர்களுக்கு அதிகக் கொந்தளிப்பை உண்டாக்கவே, சிலர் பக்கத்து அறைகளுக்குச் சென்று கத்திகளை எடுத்து வந்தார்கள். அடிலன், அவர்களைச் சிறிதும் லக்ஷ்யம் செய்யாமலே, "உங்கள் வீரத்தனத்தைப் பரீக்ஷிக்கச் சில விநாடிகள்தானிருக்கின்றன. ஆகவே, நமக்குள்ளேயே சண்டை வேண்டாம். வெளியே சுமார் ஆயிரம் வில்லவர்கள் இருக்கிறார்கள். நம்மிடம் நூறு ஆட்களுக்கு மேல் இல்லை. ஆகவே, நாம் பயத்தை விட்டுத் துணிச்சலைக் காட்டினால்தான் தப்பலாம். இப்பொழுது தேவை நமக்குள் சச்சரவல்ல. கோபமான பார்வை, அதட்டலான வார்த்தை, இவைதான் தேவை! இவற்றைக் கொண்டுதான் அடிமைகளை அடக்க முடியும்'' என்றான்.

ராகுலன் இடைமறித்து, "புரட்சிக்காரர்களிடமிருந்து எங்களைக் காப்பாற்ற அதட்டலான வார்த்தையையும் கோபமான பார்வையையும் தவிர வேறு ஏதாவது ஏற்பாடுகளையும் செய்தால் சௌகரியமாயிருக்கும்'' என்று கேட்டுக் கொண்டான்.

"அதற்கும் ஏற்பாடு செய்கிறேன். பெண்கள் பந்தோபஸ்தாக இந்தக் கூடத்திலே இருக்கட்டும். புருஷர்கள் கத்திகளை எடுத்துக் கொள்ளுங்கள்'' என்று அடிலன் உத்தரவிட்டான்.

விருந்தினர்களான ஹூணப் பிரபுக்கள் ஆயுதம் தரிக்கச் சென்றார்கள். ராகுலன் மட்டும் இருந்த இடத்தை விட்டு அசையவில்லை. அடிலன் தங்களைச் சண்டை போடச் சொல்லுவான் என்பதை அவன் எதிர்பார்க்கவில்லை. அவன் திக்பிரமை பிடித்து நின்றதைப் பார்த்த சித்ரா வெட்கத்தால் குன்றிப்போனாள். பக்கத்திலிருந்த ஒரு கூர்ஜர ஸ்திரீ, "சித்ரா! உன் கணவனும் புருஷன்தானே'' என்று



இடித்துக் காட்டியபோது அவளுக்குப் பிராணனையே விட்டுவிடலாம் போலிருந்தது.

ராகுலன் மீண்டும் அடிலனை நோக்கி, "இது நியாயமல்ல'' என்று ஆரம்பித்தான். மாளிகையைக் காக்கத் தன் வீரர்களுக்கு உத்தரவுகளைப் போட்டு இரைந்து கொண்டிருந்த அடிலன் திரும்பிப் பார்த்து, "எது?'' என்றான்.

"விருந்தினர்களைச் சண்டைபோடச் சொல்வது?''

"பிராணனை விடுவது நியாயமா?''

இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லத் தெரியாமல் ராகுலன் திகைத்தான். அடிலன் அவனைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. தன் பிள்ளையைக் கூப்பிட்டு, "வாசற் கதவுக்கருகில் பத்து வீரர்களை நிறுத்து, பின்கட்டுக் கதவில் பத்துப்பேர் காவலிருக்கட்டும்'' என்று கூறிவிட்டு மெத்தையில் சரசரவென்று ஓடிக் கைப்பிடிச் சுவரில் சாய்ந்து, "டேய் யாரங்கே?'' என்று கூவினான்.

வில்லவர் அவனைப் பார்த்து விட்டனர். அடிலனை நோக்கி ஓர் அம்பு பறந்தது. அடிலன் ஓர் ஓரமாக ஒதுங்கித் தப்பித்துக் கொண்டான். தன் வில்லையும் எடுத்து அம்பு பூட்டிக் குறிவைத்து எய்தான். முதலில் அம்பு எய்த வீரன் துடித்துக் கீழே விழுந்தான். இந்த முதல் கொலையால் வில்லவர் வெறி எல்லை கடந்தது. அரணைத் தகர்த்து உள்ளே நுழைந்து விட்டார்கள். மீண்டும் கூடத்துக்கு வந்த அடிலன் அங்கிருந்த ஹூணர்களை அணிவகுத்து அவர்கள் எல்லோருக்கும் முன்பாகத் தன் கத்தியை உருவிக் கொண்டு வாசலுக்குக் கிளம்பினான். கிளம்புமுன் பெண்ணை மாத்திரம் பார்த்து ஒரு வார்த்தை சொன்னான்: "சித்ரா! நான் இறந்துவிட்டால் நீ கத்தியை எடுத்துக்கொள். உனக்குத்தான் வாட்போர் பழக்கமாயிற்றே. அடிமைகள் கையில் சிக்காதே.''

இத்துடன் அடிலன் ஹூணர்கள் தொடர வெளியே சென்றான். ராகுலனை யாரும் கவனிக்கவே இல்லை. மரணத்தை எதிர்நோக்கித் துணிந்து இறங்கிவிட்ட அவர் களுக்கு மண வரனைப்பற்றி என்ன கவலை? ஸ்திரீகள் கூடத்தில் ஒடுங்கி நின்றார்கள். வெளியே சண்டை பலமாக நடந்து கொண்டிருந்தது. அடிலனும் மற்ற ஹூணர்களும் அரண்களை ஒவ்வொன்றாக விட்டுக் கடைசியில் கூடத் துக்குள் நுழைந்து கதவுக்கருகில் போரிட்டுக் கொண்டிருந் தார்கள். வில்லவர் வெற்றி இரைச்சல் பலமாகக் கேட்டது. முடிவு வந்துவிட்டது என்று தீர்மானித்துக் கொண்டான் அடிலன். ஆனால் முடிவு வேறுவிதமாக மாறியது. வில்லவர் வெற்றி இரைச்சலுக்கு மேல் இன்னொரு ரணபேரிகை கேட்டது. அது தோரமானாவின் படை முரசு என்பதை அறிந்த வில்லவர் திகிலால் பிரமை பிடித்து நின்று விட்டார்கள். அடுத்த விநாடி குதிரை வீரர்கள் பலர் மடமட வென அடிலன் மாளிகைத் தோட்டத்தில் நுழைந்தார்கள். அந்தப் படையின் தலைவன் குதிரை வீரர்களை அணி வகுத்து நிறுத்திவிட்டு வில்லவர்களை நோக்கிப் பின் வருமாறு உத்தரவிட்டான். "உடனே கலைந்து உங்கள் இருப்பிடம் சென்று விடுங்கள். அப்படிச் சென்றால் உங்களுக்கு மன்னிப்பு அளிக்கப்படும்."

"இல்லாவிட்டால்...!" என்றான் கூட்டத்திலிருந்த உதயன்.

"இன்னும் சில விநாடிகளில் அழிக்கப்படுவீர்கள்."

வில்லவர் சற்றுத் தயங்கினார்கள். படைத்தலைவன் சைகை செய்தான். குதிரை வீரர்களிடமிருந்து இருநூறு அம்புகள் வேகமாக ஆகாயத்தில் பறந்தன. "அடுத்த தடவை இந்த அம்புகள் உங்கள் கழுத்துகளில் பாயும்" என்று எச்சரித்தான் படைத்தலைவன். எதிர்ப்பு பிரயோசனமற்ற



தென்பதை அறிந்த வில்லவர் மெள்ளப் பின்வாங்கி னார்கள். சற்று நேரத்தில் அமளி அடங்கியது.

படைத்தலைவன் தன் வீரர்களை வாசலில் காவல் வைத்துவிட்டு கேளிக்கைக் கூடத்துக்கு வந்தான். அடிலன் அவனை வரவேற்று, "இது தோரமானாவின் படைதானே" என்று உபசாரமாக விசாரித்தான்.

"ஆம்! எங்கள் உபசேனாதிபதி ஸிந்து நதியைத் தாண்டுகையில் இங்கு வில்லவர் புரட்சி செய்யப் போவ தாகத் தகவல் கிடைத்தது. ஆகவே இச்சிறு படையுடன் என்னை முன்னதாக அனுப்பினார்."

"அவர் எங்கே?"

"இன்னும் சற்று நேரத்தில் வருவார்?" என்று சொல்லி விட்டுப் படைத்தலைவன் வெளியே சென்றான்.

மீண்டும் கேளிக்கையை ஆரம்பிக்க அவர்கள் யாருக்கும் குதூகலமில்லை. அடிலனும் ஏதோ யோசித்துக் கொண் டிருந்தான். சற்று நேரத்தில் மறுபடியும் குதிரைக் காலடிச் சப்தம் கேட்டது. யாரோ பத்துப் பேர் வாசலில் இறங்கி னார்கள். உபசேனாதிபதியின் வருகைக்கு அடையாளமாக டங்கா சப்தித்தது. படைத்தலைவன் சரசரவென்று உள்ளே நுழைந்து கூடத்தின் வாயிலில் அரண்டு நின்ற வேலைக் காரர்களை ஒழுங்காக நிற்கக் கட்டளையிட்டு, "உட சேனாதிபதி வந்துவிட்டார்கள் பராக்!" என்று எச்சரித்தான் வீரர்கள் கத்திகளை உருவி உபசேனாதிபதிக்கு அஞ்ச செய்தார்கள். 'உபசேனாதிபதி யாராயிருப்பான்' என வாயிற்படிப் பக்கம் அடிலனும் சித்ராவும் இதர ஹூண களைப் போல் கண்களைச் செலுத்திய போது, பூர ராணுவ உடையில் அஜித் சந்திரன் உள்ளே பிரவேசித்தா

## 12. கோபத் தணல்; குளிர் விழிகள்!

அடிலன் எல்லை மீறிய ஆச்சரியத்தால் கல்லாய்ச் சமைந்து நின்றான். இறந்துவிட்டதாகத் தான் நினைத்திருந்த உபாத்தியாயன் உயிரோடு தன்னெதிரே வந்ததுமல்லாமல் ஹூண சைன்யங்களுக்கு ஓர் உபசேனாதிபதியாகவும் காட்சியளிப்பதைக் கண்ட அடிலனுக்கு என்ன பேசுவதென்று புரியவே இல்லை. சித்ராவுக்கு உபாத்தியாயன் வருகை ஆச்சரியமாகத்தானிருந்தது. ஆனால் அவள் மனத்தில் அந்த ஆச்சரியத்தோடு மகிழ்ச்சியும் கலந்திருந்தது. உபாத்தியாயனை நன்றாக ஏறெடுத்துப் பார்த்தாள்.

நான்கு வருஷ காலச்சுழல் உபாத்தியாயனுடைய உருவத்தில் பல மாறுதல்களைச் செய்திருந்தது. முன்னைவிடச் சற்று உயர்ந்திருந்தான். முகத்தில் முன்பு சதா குடிகொண்டிருந்த துயரக் களை இல்லை. ஆனால், நெஞ்சில் ஏதோ ஓர் உறுதி குடிகொண்டிருப்பதற்கு அடையாளமாக அவன் முகத்தில் சற்றுக் கடுமை தென்பட்டது. இதழ்கள் கம்பீரமாக மடிந்து அதிகார இச்சையைக் காட்டின. ஆனால், கண்கள் மட்டும் மாறவில்லை. விஷமத்தைக் கக்கும் அந்தக் கண்கள் நான்கு வருடங்களுக்கு முன்னால் எப்படியிருந்தனவோ அதே மாதிரி இன்னுமிருப்பதைச் சித்ராதேவி கவனித்தாள்.

தன்னை இப்படி அங்கம் அங்கமாகக் கூர்ந்து சித்ரா அலசிப் பார்ப்பதை அஜித் சந்திரன் கவனிக்கவில்லை. முதன் முதலில் அவன் பார்வை ஸ்திரீகள் இருந்த பக்கத்தில் திரும்பவேயில்லை. அடிலனையே கூர்ந்து நோக்கினான். அடிலனைத் தவிர வேறொருவனாயிருந்தால் அந்தப் பார்வையிலேயே பாதிப் பிராணனை விட்டிருப்பான். ஆனால் அச்சம் என்பதை ஆயுளில் அறியாத அடிலன் சிறிதும் மசியாததோடு மட்டுமல்ல, உபாத்தியாயன் அதிகார தோரணையில் தன்னெதிரில் நிற்பதால் அவன் ஆத்திரமும் அதிகமாயிற்று. உள்ளே எழுந்திருந்த ஆத்திரத்தின் அறிகுறிகள் அவன் முகத்தில் நன்றாகத் தெரிந்ததை அஜித் சந்திரன் கவனித்தான். ஆகவே மேலும் மௌனத்தை நீடிக்கவிடாமல், "அடிலா! நான் இங்கு எதற்காக வந்து உன்னைக் காப்பாற்றினேன் என்று தெரிகிறதா?" என்று பேச்சை ஆரம்பித்தான்.

"என் பொறுமை எல்லை மீறுமுன் சொல்லிவிடு" என்று அடிலன் பதில் சொன்னான்.

அஜித் சந்திரன் ஒருமுறை தன் நெற்றியில் இடது கை விரல்களை ஓட்டினான். முகத்தின் அந்தப் பக்கத்தில் தான் கொடுத்த சாட்டையடி வடு லேசாக இன்னும் இருப்பதைப் பார்த்த அடிலன் குரூரமான சந்தோஷத்தோடு, "நான் கொடுத்த பழைய மரியாதை உபாத்தியாயருக்கு ஞாபகமிருக்கிறதா?" என்றான்.

"ஞாபகமிருக்கிறது. அதற்குப் பதில் மரியாதை செய்யத்தான் வந்திருக்கிறேன்."

இந்த பதிலைக் கேட்ட அடிலன் தன் நிலையை அடியோடு மறந்துவிட்டான். பழைய அடிமை தன் விருந்தினர்களுக்கெதிரில் தன்னை மிரட்டுகிறானேயென்ற கோபத்தில் என்ன பேசுகிறோம் என்பதை அறியாமலேயே, "டேய் அஜித்! நீ இந்த சேனாதிபதி வேஷத்தில் வந்திருக்கும் தைரியத்தில் ஏதாவது உளறினாயானால் என் ஆட்களை விட்டு உன் தோலை உரித்துவிடுவேன். இந்த மாளிகைப் பிராந்தியத்தில் வந்தால் உயிர் போகும் வரையில் உன்னை அடிப்பதாகச் சொல்லியிருக்கிறேன். அடிலன் வார்த்தையை மீறமாட்டான் என்பது உனக்குத் தெரியும். ஒருமுறை எப்படியோ தப்பித்துக்கொண்டாய். இன்னொரு முறை

தப்பிக்கலாமென்று நினைக்காதே. என் கண்முன்னாலிருந்து சீக்கிரம் ஓடிவிடு" என்று அடிலன் இடிபோல் இரைந்தான்.

அஜித் சந்திரன் முகத்தில் எந்தவித மாறுதலும் இல்லை. ராணுவத் தலைவன் தன் வீரர்களுக்குக் கட்டளை இடும் போது எப்படி உணர்ச்சியில்லாமல் பேசுவானோ அந்த மாதிரியே பேசினான்: "அடிலா! உனக்கு வயது முற்றி விட்டதே தவிர புத்தி முற்றவில்லை. நீ இருக்கும் நிலைமையை அறியாமல் பேசுகிறாய். நீ ஹூணர்கள் தலைவனாயிருப்பதால் நான் உன்னைக் கொல்லத் துணிய மாட்டேன் என்று நினைத்து உளறுகிறாய். நான் இங்கு வந்திருப்பதே உன்னைக் கொல்லத்தான். ஆனால், ஹூணர்கள் கொல்லும் முறையிலல்ல. தர்மயுத்தத்தின் பலனை உனக்குக் கொடுக்கிறேன். அன்று நீ அளித்த சாட்டையடி வடு இன்னும் என் முகத்திலிருக்கிறது. அதற்குப் பழி வாங்கவே வந்திருக்கிறேன். நீயோ உன் மகனோ இருவரில் ஒருவரைச் சமாளிக்க என் வாள் தயாராயிருக்கிறது. நான்கு வருடங்களுக்கு முன்பு அளித்த அதே சந்தர்ப்பத்தை உனக்கு இப்போது அளிக்கிறேன். என்ன சொல்லுகிறாய்?" என்றான்.

"நான்கு வருஷங்கள் உன்னை உபாத்தியாயன் தொழிலிலிருந்து உபசேனாதிபதி தொழிலுக்குக் கொண்டு வந்திருக்கலாம். உனக்குத் தொழிலில் மாறுதலேயொழிய அந்தஸ்தில் நீ ஹூணர்களின் அடிமைதான். அடிமையுடன் எந்த ஹூணப் பிரபு வாளெடுத்துப் போரிடுவான்? அந்த ஆசையை விட்டுவிடு."

"இதுதான் உன் முடிவா?"

"ஆம்."

அஜித் சந்திரனின் அடுத்த சொற்கள் மிகுந்த அதிகாரத்துடன் வெளிப்பட்டன. "டேய் யாரங்கே?" என்று கூப்பிட்



டான். படைத்தலைவன் உள்ளே வந்தான். "என் குதிரைச் சவுக்கை எடுத்து வா" என்ற உத்தரவு அங்கிருந்த ஹூணர்களை ஒரு கலக்கு கலக்கியது. ஆனால் அஜித் சந்திரன் நின்றிருந்த தோரணையைப் பார்த்த ஹூணர்கள் ஓர் அடிகூட முன் எடுத்து வைக்கத் துணியவில்லை. படைத்தலைவன் கொடுத்த சாட்டையைப் பிரித்து வாரை உருவிக்கொண்டே அஜித் சந்திரன் அடிலனை நோக்கி முன்னேறினான். "அடிலா! அடிமையுடன் வாட்போர் செய்வது உனக்குக் கௌரவக் குறைவாயிருந்தால் சாட்டையடியையே தருகிறேன். உன் முகம் பூராவும் சூடு போட்டுவிடுகிறேன்! இந்தா" என்று சாட்டையை ஓங்கினான்.

அடிலன் பயத்தால் பின்வாங்கினான். "ஏன் அடிலா! உன் துணிச்சலெல்லாம் பறந்துவிட்டதா? சாட்டையால் ஆயுள் முழுவதும் மனிதர்களை அடித்திருக்கும் உனக்குமா இந்தச் சாட்டை இவ்வளவு பயத்தைக் கொடுக்கிறது? உன்னிடம் அடிபட்டவர்கள் என்ன பாடுபட்டிருப்பார்கள் என்பது உனக்குத் தெரியட்டும், வா" என்று ஒருமுறை சாட்டையைச் சொடுக்கினான்.

அடிலன் மகன், முன்னால் வந்த அஜித் சந்திரனை மறித்தான். "உபாத்தியாயரே! வேண்டாம். அவரைச் சாட்டையால் அடிக்க வேண்டாம். நான் உங்களுடன் போரிடத் தயாராயிருக்கிறேன். உங்கள் பழியை என்மேல் தீர்த்துக் கொள்ளுங்கள்" என்று கெஞ்சினான். தன்னிடம் வாட்போர் பயின்ற மாணவனைப் பார்த்த உபாத்தியாயன் கண்களில் ஒரு விநாடி பரிதாபம் தெரிந்தது. அடுத்த விநாடி கண்கள் இரும்பாக மாறின. "நான் தோட்டத்தில் இருக்கிறேன். இன்னும் சிறிது நேரத்தில் உன்னை அங்கு எதிர்பார்க்கிறேன்," என்று சொல்லிவிட்டு உபாத்தியாயன் தன் படைத்தலைவன் பின்தொடர வெளியே நடந்தான். அவன் தலை மறைந்ததும் ராகுலன் "இந்தப் பயலுக்கு என்ன கர்வம் நல்லவேளை, என் கோபம் தலைக்கேறுமுன் ஓடிவிட்டான்

இன்னும் ஒரு விநாடி அவன் இங்கிருந்தால் என்ன செய் திருப்பேனோ தெரியாது" என்றான். அவன் என்ன செய் திருப்பான் என்பது எல்லோருக்கும் தெரிந்திருந்தபடியால் அத்தனை பேர் கண்களும் அவனை வெறுப்புடன் பார்த்தன. ஆனால் சித்ராவின் பார்வையிலிருந்த வெறுப்பு யார் பார்வையிலும் இல்லை.

அஜித் சந்திரன் வெகு நேரம் தோட்டத்தில் நின்றிருந்தும் யாரும் வரவில்லை. உடன் இருந்த படைத்தலைவன் கூடப் பொறுமையிழந்து, "நான் உள்ளே போய் யாராவது வரு கிறார்களா இல்லையா என்று பார்க்கட்டுமா?" என்று கேட்டான். அஜித் சந்திரன் பதில் சொல்லுமுன் மாளிகை யின் பின்வாசலிலிருந்து ஓர் உருவம் வெளிவந்தது. "அதோ வந்துவிட்டான்" என்று சொல்லிக்கொண்டே அஜித் சந்திரன் தன் வாளை உருவி அதன் கூர்மையைப் பரிசோதித்தான். ஆனால் கிட்ட வந்த உருவத்தின் கூர் விழிகளைக் கண்டதும், உபசேனாதிபதியும், அவன் படைத்தலைவனும் வெலவெலத் துப் போனார்கள். அஜித் சந்திரன் கண்களிலிருந்த வீரம் சித்ராதேவியின் விழிகளின் பார்வையில் தவிடுபொடியாகி விட்டது. அவள் குளிர் விழிகளின் வீச்சில் அஜித் சந்திரன் கோபத் தணல் அடியோடு அணைந்து கரைந்துவிட்டது.

படைத்தலைவன் என்ன செய்வதென்றறியாமல் சங்கடப் பட்டான். "சற்று நீ தூரத்திலிரு. கூப்பிடுகிறேன்" என்று அஜித் சந்திரன் சொல்லியது அவன் காதில் தேவாமிர்தம் போல் விழுந்தது. படைத்தலைவன் கண்ணுக்கு மறைந்ததும் அஜித் சந்திரன், "சித்ரா, உன் தம்பியைத்தான் நான் எதிர் பார்த்தேன்" என்றான்.

"உபாத்தியாயருக்கு என்னைப் பார்க்கப் பிடிக்க வில்லையா?"

அவள் வார்த்தையிலிருந்த குழைவு அவன் மனக் கோட்டையின் பலஹீனமான பாகத்தைத் தொட்டுவிடவே, அஜித் சந்திரன் நான்கு வருடங்களுக்கு முன்பிருந்த



நிலைமையை மீண்டும் அடைந்தான். அவனிடமிருந்து பெருமூச்சொன்று வெளிவந்தது, அதைத் தொடர்ந்து. பழைய நாட்கள்போல விஷமமான பேச்சும் வெளிவந்தது.

"உபாத்தியாயருக்குப் பயமா?"

"ஆம்; நீ தனியாக வந்திருக்கிறாயோ அல்லது எங்காவது மரத்தின் மறைவில் உன் தகப்பனாரைச் சாட்டையுடன் நிறுத்தி வைத்திருக்கிறாயோ? எனக்கெப்படித் தெரியும்!"

சண்பகத் தோட்டத்தில் அன்று நடந்த சம்பவம். அந்தச் சம்பவத்தை அவர்கள் இருவரும் இம்மிகூட மறக்கவில்லை. சித்ரா எதிரில் நின்றதாலும் பழைய நாட்களின் நினைப்பா லும் உபாத்தியாயன் தன் தற்கால நிலையை மறந்து எங்கோ கனவுலகுக்குச் சென்றான். அவளை அணுகி இடது கையால் அவளைப் பிடித்துக்கொண்டு வலது கையால் அவள் முகத்தை உயர்த்தி அவள் கண்களைக் கூர்ந்து பார்த்தான். எதற்கும் அசங்காத அந்த ஹூணமகளின் பலமான இதயம் உடைந்து உணர்ச்சிகள் பெருவேகத்தில் உடல் பூராவும் பிரவாகித்தன. ஒருமுறை உடைக்கப்பட்ட அதே கரை, பலவீனத்தை உண்டாக்கும் அதே புருஷ ஸ்பரிசம்— அவள் தன்னிலை மறந்தாள்.

"சித்ரா! இப்படியே என்னுடன் வந்துவிடுகிறாயா! பழைய நாட்களை மறந்து சந்துஷ்டியான புது உலகத்தை ஸ்தாபித்துக் கொள்வோம்" என்றான் அஜித் உணர்ச்சிப் பெருக்கால். அவளால் பதில் சொல்ல முடியவில்லை. அவள் கை விரல்கள் அவன் விரல்களுடன் பின்னிக் கொண்டன. நீண்ட பிரயாணம் செய்த வழிப்போக்கன் சொந்த வீட்டை நெருங்கியதும் அடையும் நிம்மதியை அவன் ஸ்பரிசத்தில் அவள் மனம் அடைந்து துயிலும் ஸ்திதிக்கு வந்தது. அவள் உடல் லேசாகத் துவண்டு அவன் கரங்களில் சுழன்றது.

## 13. பழைய கடன்

பரஸ்பர ஸ்பரிசத்தால் இன்ப நிலையில் ஆழ்த்தப்பட்ட அவ்விருவரும் சற்று நேரம் எதுவுமே பேசவில்லை. இடையே குறுக்கிட்ட நான்கு வருஷங்கள், இருவரிடமும் அச்சமயம் உச்ச நிலையடைந்த உணர்ச்சி வெள்ளத்தில் கரைந்தே போய்விட்டன போல் தோன்றின. தூரத்திலிருந்து எழுந்த நெருப்பணைக்கும் வேலைக்காரர்கள் கூச்சலும் என்ன அணைத்தாலும் அணையாது வெடித்துக் கொண்டிருந்த ஓரிரு காட்டு விறகுகளின் சப்தமும், மாளிகைக்குள்ளிருந்த ஹூணர்களின் குழப்பமான பேச்சொலியும் அந்த இரவின் மற்றப் பகுதிகளில் பரவினவேயொழிய தோட்டத்தில் தனித்தனியே நின்றிருந்த அவ்விருவரின் பிராந்தியத்தில் நுழையவே இல்லை. இத்தனை நிம்மதியாயிருந்த அவர்கள் நிலையை அவ்விருவரில் ஒருவர்தான் கலைக்க முடியும்; சித்ராவின் பெருமூச்சு அதைக் கலைத்தது. உபாத்தியாயன் அணைப்பிலிருந்து மெள்ள விலகிச் சுற்றும் முற்றும் மிரண்டு நோக்கினாள்.

"இங்கு யாரும் இல்லை சித்ரா! உன் தம்பியைத் தவிர இங்கு யாரையும் விடவேண்டாமென உத்தரவிட்டிருக் கிறேன். இப்பொழுது நீ வந்திருப்பதால் படைத்தலைவன் உன் தம்பியைக்கூட இங்கு வரவிடமாட்டான்" என்றான் அஜித் சந்திரன் அவளை உற்று நோக்கிக் கொண்டே.

அவன் அப்படி உற்றுப் பார்ப்பதைக் கண்ட சித்ரா வெட்கத்தால் முகத்தை வேறு புறமாகத் திருப்பிக் கொண்டு, "படைத்தலைவனை நன்றாகத்தான் பழக்கி வைத்திருக் கிறீர்கள்" என்றாள்.



அஜித் சந்திரன் சிரித்தான். அவன் சிரிப்பில் வெகு நாட்களாகக் காணப்படாதிருந்த மகிழ்ச்சியை சித்ரா கவனித்தாள். அடிமையாயிருந்த காலத்தில் சோகமான புன்முறுவலைத் தவிர வேறொன்றையும் அவனிடம் அவள் கண்டதில்லை. அவன் கண்களில் சதா துயரமே குடிகொண் டிருக்கும். ஆனால், இப்பொழுது சந்தோஷத்தால் மலர்ந்த கண்கள், உள்ளே இருந்த மகிழ்ச்சியால் தடைபடாமல் வெளி வந்த 'கலீ'ரென்ற சிரிப்பு, இரண்டையும் கண்டாள். உள்ளம் மலர்ந்த அந்தப் புருஷன் முகம் முன்னைவிட எவ்வளவு பொலிவு பெற்றுவிட்டது என்பதை சித்ரா கவனித்தாள். தான்தான் அதற்குக் காரணம் என்பதை நினைக்க அந்தப் பெண் உள்ளத்தில் பெருமை எழுந்து நின்றது. ஆனால் ஒரு விநாடிக்குத்தான்!

தன் சுதந்திரம் பறிபோய் விட்டதை சித்ரா உணர்ந்தாள். இன்னொருவனுக்குத் தான் மனைவியாக வேண்டியவள் என்ற எண்ணம் அவள் உள்ளத்திலிருந்த உவகையையும் அதுவரை ஏற்பட்ட இன்பக் கனவையும் உடைத்தெறிந்தது. அவள் முகத்தில் துக்க மேகம் மெள்ளப் படர்ந்தது. அதைக் கவனித்த அஜித் சந்திரன் அவள் கையை எடுத்துத் தன் கையில் வைத்துக் கொண்டு, "சித்ரா! நான் முதலில் கேட்ட கேள்விக்கு இன்னும் நீ பதில் சொல்லவில்லையே; என்னுடன் வந்துவிடுகிறாயா என்று கேட்டேன்" என்றான். பதிலுக்கு அவள் தன் கண்களால் அவனை ஏறிட்டுப் பார்த்து, "அது எப்படி முடியும்?" என்றாள் மெதுவாக.

"ஏன் முடியாது? நம்மைத் தடை செய்ய யாரால் முடியும்? இப்பொழுது இங்கு நான் வைத்ததுதான் சட்டம். சரி என்று ஒரு வார்த்தை சொல். உபசேனாதிபதி உன்னைத் தூக்கிச் சென்றுவிடுவான். ஹூணர்களிடம் இத்தனை நாள் பழகிய எனக்கு இதுகூடவா தெரியவில்லை என்று நினைக் கிறாய்?" என்றான் அஜித் சந்திரன்.

தன் இனத்தைப் பற்றி அவன் அப்படிப் பேசியது அவளுக்குச் சற்று வருத்தமாகவே இருந்தது. ஆனால் தன் ஜனங்களிடம் அவன் எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கிறான் என்பதை நினைத்துப் பதிலொன்றும் சொல்லவில்லை. ஏதோ யோசனை செய்தாள்.

"என்ன யோசிக்கிறாய் சித்ரா?"

"ஒன்றுமில்லை. இரண்டு பேரும் நமது நிலையை மறந்து விட்டோமே என்று யோசிக்கிறேன்."

இந்த பதிலைக் கேட்ட அஜித் சந்திரன் மனம் மீண்டும் கோபத்தால் லேசாகச் சூடேறத் தொடங்கியது. "சொல்லுவதை விளக்கமாகச் சொல் சித்ரா" என்றான்.

அவன் வார்த்தையில் தொனித்த கடுமையை சித்ரா கவனித்தாள். உபாத்தியாயன் அன்பு மனத்தைச் சுற்றி மீண்டும் கடினமான இரும்புக் கதவு மூட ஆரம்பித்து விட்டதை அவள் உணர்ந்தாள். சோகத்தால் பெருமூச் செறிந்து கொண்டே பதில் சொன்னாள்: "உபாத்தியாயரே! நாளைக்கு என் திருமண நாள் என்பது தங்களுக்குத் தெரியாது போலிருக்கிறது."

"தெரியும். இங்கு நடக்கும் விஷயங்களை நான் அவ்வப் பொழுது கவனிக்காவிட்டால் வில்லவர் புரட்சி செய்யும் விஷயம் மட்டும் எனக்கெப்படித் தெரியும்?"

"அப்படியானால் பிறன் மனைவியாகப் போகும் என் நிலையும் தங்களுக்குத் தெரிந்துதானே இருக்கும்" என்று சொல்லித் துக்கம் நெஞ்சடைக்கத் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டாள்.

அவள் பதில் உபாத்தியாயன் மனத்தில் பரிதாபத்தை எழுப்புவதற்குப் பதில் கோபத்தையே அதிகமாக எழுப்பியது. "உன் நிலை இங்கு வருவதற்கு முன்பே உனக்குத் தெரியுமல்லவா?" என்று வினவினான்.



"தெரியும்!"

"தெரிந்தும் ஏன் வந்தாய்? நான் பரபுருஷன் என்று தெரிந்து எதற்காக என்னிடம் தனிமையில் பேச வந்தாய்? பேசியதோடு நில்லாமல்..."

அஜித் சந்திரன் வார்த்தை மேலே ஓடவில்லை.

குனிந்திருந்த சித்ராவின் முகத்திலிருந்து இரண்டொரு நீர்த்துளிகள் கீழே விழுந்தன. சீலைத் தலைப்பால் கண்களைத் துடைத்துக்கொண்டாள். சித்ரா அழுதே அவன் பார்த்ததில்லை. அவன் மனம் மீண்டும் கரைந்தது.

"அழாதே சித்ரா! நீ வந்த காரியம் எனக்குத் தெரியும். உன் வாயாலேயே அதைச் சொல்லிவிடு" என்றான் அஜித் சந்திரன்.

அவன் பேச்சில் கண்ட பரிதாபம் அவளைச் சாட்டை கொண்டு அடிப்பது போலிருந்தது. கேவலம் காரியத்தைச் சாதிக்க தான் சாகசம் செய்ததாக அவன் நினைத்ததை நினைக்க நெஞ்சத்தில் கத்தியைச் செருகிவிட்டது போன்று உணர்ச்சி ஏற்பட்டது அவளுக்கு. ஆனால், தான் என்ன வாதாடினாலும் அந்தச் சமயத்தில் செல்லாதென்பதை அறிந்த சித்ரா வந்த காரியத்தையே எடுத்துச் சொன்னாள்:

"என் தம்பிக்கு உயிர்ப்பிச்சை கேட்கவே வந்தேன்" என்றாள்.

"மானத்தைவிட உயிர் அவ்வளவு பெரிதா?"

"இதில் மானம் என்ன இருக்கிறது? அவன் உங்களுக்கு எவ்வளவோ சின்னவன். நீங்களே அவனுக்கு வாட்போர் சொல்லிக் கொடுத்தாலும் உங்கள் திறமையில் நூற்றிலொரு பங்கு அவனுக்கு வரவில்லை. அது உபாத்தியாயர் பிசகோ, மாணவன் பிசகோ எனக்குத் தெரியாது. ஆனால் அவனுக்கு நீங்கள் சொல்லி வைத்திருக்கும் வித்தையை வைத்துக்

கொண்டு உங்களிடம் போரிட வருவது மரணத்தை நாடி வருவதற்குத்தான் சமானம். அந்தக் குழந்தையை எதற் காகக் கொலை செய்ய ஆசைப்படுகிறீர்கள்? அவனைக் கொல்வதால் உங்களுக்கு அவமானமே தவிர, அதில் பெரிய வீரமோ கீர்த்தியோ என்ன இருக்கிறது?" என்று கேட்டாள் சித்ரா.

"உன் தகப்பனிடம் நான் சாட்டையால் அடிபட்டதை விட இதைப் பெரிய அவமானமென்றா நினைக்கிறாய்?" என்று திருப்பிக் கேட்டான் அஜித்.

சித்ராவுக்கு பதில் ஏதும் சொல்லத் தெரியவில்லை. அஜித் சந்திரனே பேசினான்: "சித்ரா! உன் தம்பி உனக்குக் குழந்தையே தவிர உலகத்துக்குக் குழந்தையல்ல; வாலிப வயதை அடைந்திருக்கிறான். உன் தகப்பனார் சாட்டையால் அடித்த வடு இதோ என் முகத்தில் லேசாகத் தெரிகிறது பார். இதற்குப் பழி வாங்குவதாக நான் சபதம் செய்திருக் கிறேன். ஹிந்துக்கள் வழக்கம் உனக்குத் தெரியாதிருக்கலாம். ஆனால் க்ஷத்திரிய ஜாதியில் பிறந்தவன் செய்த சபதத்தை நிறைவேற்றாமல் இருக்க மாட்டான். தவிர, சண்டையில் நான்தான் ஜெயிப்பேனென்பது என்ன நிச்சயம்? போரில் எப்பொழுதும் ஜெயாப ஜெயம் யார் பக்கம் என்று சொல்ல முடியாது. ஆகையால், நீ போய் உன் தம்பியை அனுப்பு. என் பழைய கடனைத் தீர்த்துக் கொள்கிறேன்."

அவன் சொற்கள் ஒவ்வொன்றும் சித்ராவை சித்திர வதை செய்தன. ஏதோ யோசித்தாள். தம்பியைக் காப்பாற்ற வேண்டும் என்ற உறுதியால் அஜித் சந்திரனிடம் இருந்த அன்பை வெறுப்புப் போர்வையால் நன்றாக மூடிக் கொண்டாள். மிக உஷ்ணமான வார்த்தைகள் அவள் வாயிலிருந்து வெளிவந்தன. "சண்டையில் நீங்கள் இறந்து விட்டால்?" என்றாள்.



"யாருக்கும் நஷ்டமில்லை" என்றான் அஜித் சந்திரன்.

"எனக்கு நஷ்டம்" என்றாள் சித்ராதேவி.

"உனக்கா!"

"ஆம்; நீங்கள் இறந்துவிட்டால் எனக்கு நீங்கள் கொடுக்க வேண்டிய பழைய கடன் என்ன ஆவது? அதை யார் தீர்ப்பார்கள்?"

அஜித் சந்திரன் ஏதும் புரியாமல் விழித்தான். "உங்களுக்கு அது எங்கே ஞாபமிருக்கப் போகிறது? ஆனால், தங்களுக்குச் சேர வேண்டியதை மட்டும் நினைவு வைத்துக் கொண்டு தாங்கள் செலுத்த வேண்டிய கடனை மறப்பது ஒருவேளை ஹிந்துக்கள் தர்மமாக இருக்கலாம். அல்லது அது க்ஷத்திரியன் கடமையோ என்னவோ? உங்கள் சாட்டை யடிக்கு என் தம்பியின் உயிரை வசூலிக்க வந்தீர்களே, உங்கள் உயிரை நான் காப்பாற்றினேனே, அதற்கு என்ன கைமாறு செய்வதாக உத்தேசம்?" என்று சித்ரா கேட்டாள்.

"நீ என் உயிரைக் காப்பாற்றினாயா? எப்பொழுது?" என்றான் அஜித் சந்திரன் ஆச்சரியத்துடன்.

"என் தகப்பனார் வெளி முற்றத்தில் உங்களைக் கட்டி வைத்து அடித்தது ஞாபகமில்லையா?"

"அதை எப்படி மறக்க முடியும்? ஆம்! அன்று நீ குறுக்கே வந்து சாட்டையாலடிக்க வேண்டாமென்று அவர்களைத் தடை செய்தாய். அது ஞாபகமிருக்கிறது. ஆனால் நீ காலங் கடந்து வந்தாய். அதற்குள் நான் இறந்து விட்டதாக நினைத்து என்னை அவிழ்த்து விட்டார்கள்..."

"பிறகு..."

"பிறகு ஏதோ கனவு. உதயன் வீட்டில் கண் விழித்தேன்."

"உதயன் வீட்டுக்கு இங்கிருந்து எப்படிப் போனீர்கள்?"

"அதுதான் புரியவில்லை."

"எப்படிப் புரியும்? இறந்துவிட்டதாக நினைத்து உங்களை அவிழ்த்துவிட்ட வேலைக்காரர்கள் நீங்கள் கண் விழித்ததைப் பார்த்து என் தகப்பனிடம் சொல்ல ஓடியதைத் தடை செய்ய ஒரு சித்ரா இருக்கும்போது மற்ற விஷயங்கள் புரிவானேன்? எப்படியாவது உங்களைக் காப்பாற்றி விட்டால் ஆளுக்கு ஆயிரம் பொன் லஞ்சம் கொடுப்பதாகச் சொல்லித் தகப்பனை வஞ்சிக்க ஒரு பெண் இருக்கையில் உங்களுக்கு எதைப் பற்றித்தான் கவலை? உதயன் வீட்டுக்கு உங்களை அனுப்ப ஒரு மாணவி இருக்கையில் எப்படித் தப்பினோம் என்பதை மனத்தால் நினைக்க ஏது அவசியம்? இதைப்பற்றியெல்லாம் க்ஷத்திரியன் மனத்திற்கு என்ன அக்கறை? சிறு பையனை, பிள்ளையைப் போன்ற மாணவனை, தகப்பனிடம் ஏற்பட்ட கோப வெறியால் கொல்வதில் வேண்டுமானால் அக்கறை இருக்கும்" என்று படபடப்புடன் தன் கோபத்தையெல்லாம் அள்ளிக் கொட்டி னாள் சித்ராதேவி.

அஜித் சந்திரன் வெகு நேரம் மௌனமாயிருந்தான். பிறகு சொன்னான்: "ஆம் சித்ரா! என்னைத் தூக்கி வந்த வேலைக்காரர்களுக்கு நீ லஞ்சம் கொடுத்ததைப் பற்றியும் என்னைக் காப்பாற்றியதைப் பற்றியும் ஏதோ சொன் னார்கள். நான் அரை மயக்கத்தில் அவற்றையெல்லாம் கேட்டேன். இதுவரை அது வெறும் கனவென்றே நினைத்தேன்; இப்பொழுதுதான் உண்மை தெரிகிறது."

"அப்படியானால்..."

அஜித் சந்திரன் அவளை மேலே பேசவிடாமல், "என் பழி வாங்கும் படலம் இத்துடன் முடிகிறது. நம்மிருவர் இடையே உள்ள பழைய கடனுடன் கழிந்துவிடுகிறது" என்றான்.



"உபாத்தியாயரே...!" என்று சித்ரா மீண்டும் ஏதோ சொல்ல ஆரம்பித்தாள்.

"சித்ரா! நமது உறவு இத்துடன் முடியட்டும். நீ வந்த காரியம் முடிந்துவிட்டது. நீ எனக்கு உயிர்ப் பிச்சை யளித்ததை முன்பே கூறியிருந்தால் உன் மனோகர வலையை வீசாமலே உன் தம்பியின் உயிரைத் திருப்பி வாங்கியிருக்கலாம்" என்றான்.

அந்தக் கடுஞ்சொற்களைக் கேட்ட சித்ராவின் கோபம் பன்மடங்காயிற்று. அவள் முகம் சிவப்பதிலிருந்து உள்ளே ஜ்வாலை கிளம்புவதை அறிந்த அஜித் சந்திரன், "சித்ரா, கோபம் உண்மையை மறைத்துவிடுமா? அது போகட்டும். பெண்ணின் சஞ்சல புத்தி எனக்கிருந்தால் உன்னை என்றோ மறந்திருப்பேன். ஆனால், இத்தனைக்குப் பிறகும் உனக்குத் தீங்கு வருவதென்றால் என் மனம் கேட்கவில்லை ஆகையால், இதைச் சொல்லுகிறேன். உன் திருமணத்தைத் பிற்பாடு வைத்துக்கொள். இன்றிரவே உன் தகப்பனாருடன் இந்தப் பிராந்தியத்தை விட்டு ஓடிவிடு. என் படை இங்கிருந்து போக வேண்டியதுதான் தாமதம், வில்லவ மீண்டும் வருவார்கள். அவர்கள் அடுத்த தடவை தீ வைக் வரும்போது உங்களைக் காப்பாற்ற நான் இங்கிருக் மாட்டேன்; தோரமானாவின் உத்தரவையும் மீறி நான் இந்த பக்கமாக வந்திருக்கிறேன்."

"மீண்டும் வில்லவர் வருவார்களா?"

"என் வீரர்கள் அகல வேண்டியதுதான் தாமத கண்டிப்பாய் வந்துவிடுவார்கள். அவர்களுக்குத் தே மானா பின்பலமாயிருக்கிறான்."

"ஹூணர்களை அழிக்க முயல்பவன் தே மானாவா?"— சித்ரா பிரமித்தாள்.

"உன் தகப்பன் இந்தப் பிராந்தியத்தில் தலைவனா யிருக்கும் வரையில் தோரமானா இங்கு தலைவனாக முடியாது. அவன் தலைவனானாலொழிய ஹூண சாம் ராஜ்யத்தைப் பாரதத்தில் ஸ்தாபிக்க முடியாது. ஆகவே உன் தகப்பனை ஒழித்துவிடத் தோரமானா கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறான். நேராக அவனே உன் தகப்பனைக் கொன்றால் கபீசத்திலிருக்கும் ஹூணத் தலைவன் விரோதம் தோரமானாவுக்கு ஏற்படும். ஆகவே மறைமுக மாக உன் தகப்பனை அழிக்கத் திட்டமிட்டிருக்கிறான். வில்லவரைக் கிளப்பிவிட்டால் அவர்கள் பழியும் தீரும். தன் எதிரியும் தொலைவான் என்று தோரமானா நினைக் கிறான்."

இந்தத் தகவலைக் கேட்டு சித்ரா திகைத்துப் போனாள். அஜித் சந்திரன் மேலும் சொன்னான்: "யோசிக்க சமய மில்லை சித்ரா! இருக்கும் ஆபத்தை உன் தகப்பனிடம் சொல்லு. உன் தகப்பனைக் காப்பாற்ற எனக்கு அக்கறை யில்லை! உன்னைப் பற்றித்தான் கவலை" என்றான்.

சித்ரா அவனை நெருங்க ஓரடி எடுத்து வைத்தாள். இன்னொருவனுக்குத் தான் நிச்சயம் செய்யப்பட்டிருப் பதை நினைத்துக்கொண்டு அதே இடத்தில் ஒரு விநாடி நின்று, "வருகிறேன்! உபாத்தியாயரே!" என்று சொல்லி மாளிகைக்குச் செல்லத் திரும்பினாள்.

அவள் போன திக்கையே உபாத்தியாயன் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் மனத்தில் எழுந்து அலைமோதிக் கொண்டிருந்த எண்ணங்களின் இரைச்சலால் தனது படைத் தலைவன் தன்னை நோக்கி வந்ததைக்கூட அவன் கவனிக்க வில்லை. இரண்டாம் முறை படைத்தலைவன் கூப்பிட்ட பிறகுதான் அஜித் சுயநினைவை அடைந்தான்.



"இன்று வாட்போர் கிடையாதென்று நினைக்கிறேன்" என்றான் படைத்தலைவன்! தன்னிடமிருக்கும் பயத்தால் படைத்தலைவன் மேலுக்கு மரியாதை காட்டினாலும் உள்ளே நகைத்துக் கொண்டிருக்கிறானென்பது உபாத்தியாய னுக்கு நன்றாகத் தெரிந்தது. ஆனால் அதை வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல், "உன் புத்திக் கூர்மையை மெச்சு கிறேன். இன்னும் பத்து நிமிஷங்களில் நாம் கிளம்புகிறோம்; வீரர்களை அணிவகுத்து நிறுத்து" என்றான்.

பத்து நிமிஷங்களில் ரணபேரிகை முழங்கியது. குதிரைகள் அடிலன் மாளிகையை விட்டுப் பாய்ந்து சென்றன. கடைசியாகச் சென்ற குதிரையின் மீது அஜித் சந்திரன், மனம் மிகப் பெரிய ஏமாற்றத்தின் பாரத்தால் அழுந்தியிருக்கத் தலைகுனிந்த வண்ணம் சென்றான். அவன் செல்வதை மேல் தளத்திலிருந்து சித்ரா பார்த்துக்கொண்டு நின்றாள். வாழ்விலிருந்து ஏதோ ஓர் ஒளி செல்வதைப் போன்ற உணர்ச்சியால் அவள் மனம் வெடித்துக்கொண்டு இருந்தது. அஜித் சந்திரன் கடைசியாக ஒருமுறை மாளிகை யின் தளத்தை நோக்கிவிட்டுக் குதிரையைத் தட்டி விட்டான். மாடியில் நின்றிருந்த சித்ராதேவியின் கண்களில் திரண்டு தேங்கியிருந்த இரண்டு நீர்த்துளிகள் அவன் பிரிவைத் தாங்கமாட்டாமல் உருண்டு விழுந்தன.

# 14. படகுத்துறை வீரர்கள்

**வா**ன வீதியில் திடீரென ஒரு நட்சத்திரம் பளிச்சென்று கண்ணுக்குத் தோன்றி மறைந்துவிட்டால் எப்படியிருக்கும்? அஜித் சந்திரன் வந்ததும், வந்த வேகத்தில் திரும்பிச் சென்றதும் அப்படித்தானிருந்தது சித்ராதேவிக்கு. மற்றவர் மனங்களில் அது வெவ்வேறு விதமான குழப்பங்களை விளைவித்திருந்தது. தன்னிடம் அடிமையாயிருந்தவன், அடிபட்டு மாண்டவன், எப்படிப் பிழைத்தான் என்பதே அடிலனுக்குப் பெரிய மர்மமாயிருந்தது. அத்துடன் ஹூணர்களுக்கு எப்படி உபசேனாதிபதியானான்? தோரமானாவுக்கும் இவனுக்கும் என்ன சம்பந்தம்? என்ற கேள்விகள் அவனைத் திரும்பத் திரும்ப வாட்டின. மாப்பிள்ளை ராகுலனுக்கு இந்தக் கவலை சிறிதுமில்லை. அடிலன் உயிரையோ அல்லது அவன் மகன் உயிரையோ உறிஞ்ச வந்த உபாத்தியாயன் ஏன் சண்டை போடாமல் திரும்பி விட்டான்? அவனைத் தோட்டத்தில் சந்தித்த சித்ரா என்ன உபாயத்தால் உபாத்தியாயனைச் சாந்தப்படுத்தி அனுப்பி விட்டாள்? என்று ராகுலன் யோசித்தான். இந்த யோசனைகளால் அவன் மனத்தில் சந்தேக வித்தும் நன்றாக முளைவிட ஆரம்பிக்கவே சித்ராதேவி தன்னந்தனியே நின்றிருந்த மேல் தளத்துக்கு வந்து சேர்ந்தான். அவன் வந்ததையோ, அவனைத் தொடர்ந்து பின்னால் தகப்பன் வந்ததையோ, சித்ராதேவி கவனிக்கவே இல்லை. அவள் மனம் அஜித் சந்திரனைப் பற்றிய சிந்தனையில் ஆழ்ந்து கிடந்தது. தங்கள் சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்ள வந்த அடிலனும் ராகுலனும் யார் முன்னதாகச் சித்ராதேவியிடம் பேச்சை ஆரம்பிப்பதென்று அறியாமல் விழித்துக்கொண்டு நின்றார்கள். வாழ்க்கையில் எந்த விஷயத்திலும் பொறுமையே அறியாத அடிலனே முதலில் பேச்சைத் துவக்கி "சித்ரா!" என்றழைத்தான். தகப்பன் குரலைக் கேட்ட சித்ரா ஏதோ தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்டவள் போல் திடீரெனத் திரும்பினாள். ஏதோ பேச வாயெடுத்தவள் தகப்பனுக்குப் பின்னால் ராகுலன் நிற்பதைப் பார்த்ததும் தலையைப் பழையபடி திருப்பிக்கொண்டு "என்ன அப்பா" என்று கேட்டாள்.

அடிலன் அவளை மெல்ல அணுகி, "சித்ரா! ஏன் இப்படி மாடியில் தன்னந்தனியாக நிற்கிறாய்? நம்மைப் பிடித்த சனியன்தான் தொலைந்து விட்டானே" என்றான்.

சித்ராவின் மனம் இருந்த நிலையில் ராகுலன் அடிலனையே பேசவிட்டிருந்தால் எவ்வளவோ நன்றாயிருந்திருக்கும். ஆனால், வருங்கால மாப்பிள்ளை தன் சாமர்த்தியத்தையும் சிறிது காட்டினான். "சனியன் யாரைப் பிடித்தாலும் சீக்கிரம் விடுவதில்லை, அதுவும் பெண்களின் மேல் அவன் பிடிப்பு விழுந்துவிட்டால் அந்தப் பிடிப்பிலிருந்து அவர்களை விடுவிப்பது ரொம்பவும் கஷ்டம்" என்று சொல்லிவிட்டுச் சித்ராவைத் தான் மறைமுகமாகத் தாக்கிய சாமர்த்தியத்தை நினைத்துக் குரூரமாகச் சற்று சிரிக்கவும் சிரித்தான்.

கூர்மையான புத்தியை உடைய சித்ராதேவியிடமா ராகுலன் கெட்டிக்காரத்தனம் பலிக்கும்? அவனிருந்த பக்கமே சித்ரா திரும்பவில்லை. தகப்பனைப் பார்த்து "அப்பா! சனியையாவது ஹிந்துக்கள் சனிபகவான் என்று மரியாதையாக அழைக்கிறார்கள். சனி நம்மைவிட்டுப் பிரிந்து செல்லும்போது நல்லதைத்தான் செய்துவிட்டுப் போவானாம். ஆனால் ராகு, கேது என்ற இரண்டு சர்ப்பங்கள் இருக்கின்றன பாருங்கள்! அவற்றால் ஹிம்சை

யைத் தவிர வேறொன்றும் இல்லையாம். தெரியுமா உங்களுக்கு?'' என்று கேட்டாள்.

ராகுலன் அசட்டுத்தனத்தை அடிலன் வெறுத்தாலும் தன் மகள் அவனை நிந்திப்பது சரியல்ல என்று நினைத்த தால் "சித்ரா! என்ன இதெல்லாம்?'' என்று கோபங் கலந்த குரலில் சிறிது கண்டிப்பையும் காட்டினான்.

"உபாத்தியாயர் அந்தக் காலத்தில் சொல்லிக் கொடுத் தது. சந்தர்ப்பம் வரவே ஞாபகப்படுத்திப் பார்த்தேன்'' என்று சொல்லிவிட்டு சித்ரா, ராகுலனை இகழ்ச்சியுடன் பார்த்தாள்.

அடிலன் மிகுந்த சங்கடத்திற்குள்ளாகிப் பேச்சை மாற்றி னான். "சித்ரா, இந்த உபாத்தியாயன் எப்படித் தப்பினா னென்று தெரியவில்லையே?'' என்றான்.

"எப்படித் தப்பினால் என்ன? தப்பினது நமக்கும் நல்லதாயிற்றல்லவா? அவர் அன்று தப்பியதால் இன்று நாம் வில்லவரிடமிருந்து தப்பினோம்.''

"தப்பி மானத்தை இழந்தோம்! நம்மை அவமானப் படுத்தவல்லவா உபாத்தியாயன் நம்மைக் காப்பாற்ற முன் வந்தான்?''

"அவமானத்திலிருந்து நாம் தப்பத்தான் வழியிருந்ததே!''

"என்ன வழி?''

"நீங்களாவது, தம்பியாவது அவரிடம் போரிட்டிருக் கலாம். இல்லையானால் மாப்பிள்ளையைத் தேர்ந்தெடுத் திருக்கிறீர்களே, அவரையாவது சண்டைக்கு அனுப்பி யிருக்கலாம்.''

சித்ரா தங்களைப் பார்த்து நகைக்கிறாள் என்பதை அடிலன் சந்தேகமறத் தெரிந்து கொண்டான். ராகுலன் தைரியத்தைச் சற்று முன்பு அவனே பார்த்திருந்தானா கையால் சித்ராவுக்கு எந்த விதத்திலும் பதில் சொல்ல



வகையில்லாமல் தவித்தான். பதில் சொல்ல முடியாமல் போகவே அவன் உள்ளத்தில் கோபம் பொங்கி எழுந்தது. சித்ராவிடம் தன் கோபம் செல்லாதென்பதை அறிந்திருந்தா னாகையால் வருங்கால மாப்பிள்ளையின் மீது எரிந்து விழுந்தான். "சித்ராவைப் போன்ற ஒரு பெண்ணை வசப் படுத்தக்கூடியவன் சிறந்த வீரனாயிருக்க வேண்டும் என்பதை இப்பொழுதாவது தெரிந்து கொண்டீர்களா?'' என்று இரைந்தான்.

ராகுலன் பதிலுக்குத் தன் விஷமத்தையும், உள்ளே பொங்கிக் கிடந்த பொறாமையையும் காட்டினான்.

"தெரிந்து கொண்டேன். உபாத்தியாயன் வீரன் என்பது தெரிகிறது. ஆனால் ஒரு சந்தேகம்...'' என்று மெள்ள இழுத்தான்.

சித்ரா அவனை உற்றுப் பார்த்து, "என்ன சந்தேகம்?'' என்று கேட்டாள்.

"தோட்டத்தில் அந்த வீர புருஷன் உன்னை வசப்படுத்தி னானா? அல்லது நீ அவனை வசப்படுத்தினாயா? இந்த சந்தேகம்தான்'' என்று சொல்லிப் புன்முறுவல் செய்தான். பாம்பின் விஷத்தை விடக் கடுமையான விஷம் அவன் உள்ளத்திலிருப்பதை சித்ரா, அவன் புன்முறுவலிலிருந்தே தெரிந்து கொண்டாள். ஆனால், ஏற்கெனவே எரிமலை போல் குமுறிக்கொண்டிருந்த அடிலன் அக்கினியைக் கக்க ஆரம்பித்தான்.

"ராகுலா! சித்ரா என் பெண் என்பதை நினைவில் வைத்துக்கொள்'' என்று கூவிய அடிலன் சொற்களில் ஹுஊணர்கள் உக்கிரம் நன்றாகப் பரிமளித்தது.

ஆனால் ராகுலன் இதற்கெல்லாம் மசியவில்லை. "அத்துடன் அவள் என் மனைவியாகப் போகிறவள் என்ப தையும் நினைவில் வைத்துக்கொண்டிருக்கிறேன்'' என்றான்.

"இப்படியே நீ பேசிக்கொண்டு போனால் அந்த நினைப்பை அகற்ற நேரிடும்" என்றான் அடிலன்.

இருவரையும் சித்ரா தடுத்து, "இந்த வீண் தர்க்கம் எதற்கு? பொழுது விடிந்ததும் திருமணமிருந்தாலல்லவா இதைப்பற்றி யோசிக்க வேண்டும்" என்றாள்.

"ஏன் திருமணம் இருக்காது?"

"நாமிருக்கமாட்டோம்."

அடிலனுக்கு மட்டுமின்றி ராகுலனுக்கும் இந்தச் செய்தி பெரிய அதிர்ச்சியை அளித்தது. உபாத்தியாயன் சொன்ன தகவல்களை சித்ரா தன் தகப்பனிடம் விவரமாக எடுத்துச் சொன்னாள். அடிலன் தீவிர யோசனையில் இறங்கி மாடியில் அங்குமிங்கும் உலாவினான். மீண்டும் வில்லவர் வருவார்கள் என்பதைக் கேட்ட ராகுலன் மனத்தில் திகில் நிரம்ப நுழைந்துகொள்ளவே அவனுக்கிருந்த சந்தேகம் எங்கோ ஓடிவிட்டது. பிராண பயத்தால் அடிலனையும் சித்ராவையும் மாறிமாறிப் பார்த்தான். உலவிக் கொண்டிருந்த அடிலன் சித்ராவிடம் வந்து, "சித்ரா! உபாத்தியாயன் சொல்லுவது உண்மையென்று உனக்குத் தெரியுமா? நமக்கெதிராக வில்லவரைத் தோரமானா கிளப்பிவிட்டானென்பதை நம்பலாமா?" என்று கேட்டான்.

"நம்புவதும் நம்பாததும் உங்கள் இஷ்டம். ஆனால் உபாத்தியாயர் பொய் சொல்லமாட்டார். அது உங்களுக்கே தெரியும்" என்றாள் சித்ரா.

அடிலன் அதை நன்றாக அறிந்திருந்தான். உபாத்தியாயனிடம் அவன் கண்ட ஒரே குறை அவன் தன் மகள் மேலே வைத்த ஆசைதான். மற்ற நற்குணங்களை உத்தேசித்தே எந்த அடிமைக்கும் அளிக்காத சலுகையையும் அந்தஸ்தையும் அடிலன் அஜித் சந்திரனுக்கு அளித்திருந்தான். கடந்த காலத்தைச் சிந்தித்த அடிலன், "வாஸ்தவம். உபாத்தியாயன்



பொய் சொல்லமாட்டான். ஆனால், அவன் நம்மை எச்சரிக்க வேண்டிய அவசியமென்ன சித்ரா?" என்று கேட்டான்.

சித்ரா எப்படிப் பதில் சொல்வாள்? 'என் மேல் உபாத்தியாயர் உயிரே வைத்திருக்கிறார். எனக்காகத்தான் உங்களையெல்லாம் காப்பாற்றப் பார்க்கிறார்' என்று எந்தப் பெண் பதில் சொல்வாள்? மூர்க்கக் குணம் படைத்த ஹூண மகளாயிருந்தாலே கஷ்டம். உபாத்தியாயன் படிப்பில் பண்பட்ட சித்ராவால் பதில் சொல்ல முடியுமா! பதில் சொல்லாமல் தகப்பனை ஒருமுறை பார்த்துவிட்டுத் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டாள். பதிலை அவள் பார்வையிலிருந்து அறிந்த அடிலன் மேலே எந்தக் கேள்வியும் கேட்கவில்லை. "ராகுலா! உபாத்தியாயன் சொல்வது உண்மைதான். என் உயிர் மட்டும் இதில் சம்பந்தப்பட்டிருந்தால் நான் கவலைப்பட மாட்டேன். ஆனால் என் விருந்தினர்கள் உயிருக்கும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. என்ன செய்யலாமென்பதைக் கலந்தாலோசிக்கலாம் வா" என்று கூப்பிட்டான். இருவரும் செல்லு முன்பு, "ஏன் சித்ரா! நீயும் வருகிறாயா?" என்று கேட்டான் அடிலன். வரவில்லையென்பதற்கு அறிகுறியாகச் சித்ரா தலையை ஆட்டினாள். அவர்கள் மாடிப்படிகளில் தடதடவென்று இறங்கிய சத்தம் அவள் காதுகளில் விழவில்லை. உபாத்தியாயனைத் தொடர்ந்து அவள் மனம் சென்றது. உபாத்தியாயனோ அவள் கருத்துக்கும் எட்டாத முக்கிய வேலையாகத் தக்ஷசீலத்தை நோக்கிப் போய்க்கொண்டிருந்தான்.

தோரமானா வெகு சாமர்த்தியமாய் வடபாரதத்தை இரண்டாகத் துண்டித்திருந்தான். ஸிந்துநதிப் பிராந்தியம் ஏற்கெனவே ஹூணர்கள் வசமிருந்ததால், ஸிந்துவின் பக்கத்துக் கிளையான வைதஸ்தா நதியோரமாகத் தன் படைகளைச் சிறு சிறு கும்பல்களாகப் பல இடங்களில் நிறுத்தி

யிருந்தான். வைதஸ்தா நதி வடக்கேயிருந்து சிறிது தென்மேற்கே ஓடிவந்து ஸிந்துவோடு கலக்கிறது. அதன் கரையோரமாகப் படைகளைத் தோரமானா நிறுத்திவிட்டதால் வடபாரதத்தின் மேற்கு எல்லையும் கிழக்கு எல்லையும் இரண்டு கூறுகளாகப் பிரிந்துவிட்டன. இப்படி இரண்டாகக் கிழிக்கப்பட்ட வடபாரதத்தின் கிழக்குப் பகுதியில் ஸ்கந்தகுப்தன் ராஜ்யமும், மேற்குப் பகுதியில் தோரமானாவின் ஆதிக்கமும் இருந்து வந்தது. போதாக் குறைக்கு மாளவத்தின் மீது எப்பொழுது பாய்ந்து குப்த ராஜ்யத்தை ஊடுருவலாம் என்று தோரமானா சமயத்தை எதிர்பார்த்திருந்தான்.

இத்தகைய ராஜீய நிலையில் ஸ்கந்தகுப்தன் அனுபவித்த கஷ்டங்கள் பல. சைன்னியத்திலிருந்து வீரர்கள் பலர் சம்பளமின்மையால் படையை விட்டு விலகினார்கள். அப்படி விலகிய வீரர்களையெல்லாம் தோரமானா தன் படையில் சேர்த்துக் கொண்டான். இப்படி இந்துக்களும் ஹூணர்களும் சேர்ந்த படை குப்த ராஜ்யத்தை ஆட்டக் கூடிய ஸ்திதிக்கு அதிகரித்துவிட்டது. ஆகவே ஸ்கந்தகுப்தன் தோரமானாவின் படைகளை வடக்கேயிருந்து தாக்கும் நோக்கத்துடன் இந்தியாவின் தலைப்பாகத்திலிருந்து வரும் தக்ஷசீலத்தில் தன் படைகளைக் குவிக்க ஆரம்பித்தான். அந்தப் படையைப் பற்றிய தகவலை அறியவே தோரமானா அஜித் சந்திரனை அனுப்பினான். வழியில் மலைவாசல் வில்லவர் புரட்சி செய்யப்போவதை எப்படியோ தெரிந்து கொண்ட உபாத்தியாயன் சித்ராவின் உதவிக்கு விரைந்தான். சித்ராவின் சந்திப்பு ஒரு வழியாக முடிந்துவிடவே அஜித் சந்திரன் கடமையின் மார்க்கத்தில் சென்றான்.

தோரமானா எதிர்பார்த்ததற்கு மேலாகவே தக்ஷசீலத்தில் அஜித் சந்திரன் காரியங்களைச் சாதித்தான். அங்கு அவன் என்ன ராஜதந்திரத்தைக் கையாண்டான் என்பது யாருக்கும்



தெரியாது. ஆனால் தக்ஷசீலத்திலிருந்து நேர் தெற்கே தாக்கக் குவிந்திருந்த ஸ்கந்தகுப்தன் படைகள் மேற்கு நோக்கிச் சென்றுவிட்டன. அங்கிருந்த படைத்தலைவர்களுக்கு அஜித் சந்திரன் நிரம்ப லஞ்சத்தைக் கொடுத்துவிட்டான் என்ற வதந்தி எங்கும் பரவியது. தக்ஷசீலத்தின் விவகாரங்களைப் பற்றி அஜித் சந்திரன் எழுதியனுப்பிய ஓலையைப் படித்த தோரமானா, "தக்ஷசீலத்திலிருந்து படைகளை அனுப்ப இருபதினாயிரம் ஸ்வர்ணங்களைக் கொடுத்தது அதிகந்தான். இருந்தாலும் தற்சமயம் அபாயம் நீங்கிவிட்டது. அஜித் சந்திரன் எந்தப் பணியையும் சாமர்த்தியமாகத்தான் செய்து முடிக்கிறான். ஆனால் பொற்காசுகளை அதிகமாகச் செலவழிக்கிறான்" என்று சொல்லிக்கொண்டான். இப்படித் தோரமானாவுக்குத் திருப்திகரமாகத் தக்ஷசீலத்தில் அலுவல்களைச் செய்து முடிப்பதில் ஒருவார காலத்தைச் செலவிட்ட உபாத்தியாயன் படைகளை மாளவ எல்லைக்குச் செல்ல உத்தரவிட்டுத் தான் மட்டும் நாலைந்து வீரர்களுடன் மூலஸ்தானபுரத்தை நோக்கிப் பயணமானான்.

ஸிந்து நதியின் மேற்கேயுள்ள முதல் உபநதி வைதஸ்தா நதி. அது ஸிந்துவுடன் கலக்கும் ஸ்தலத்திற்குச் சற்றுக் கீழேயிருக்கிறது மூலஸ்தானபுரம். குப்த ராஜ்ய எல்லைக்கருகில் இருந்ததாலும் நிலப்பரப்பும் அங்கே குறுகியதாலும் குப்த ராஜ்யக்காரர்கள் ஹூணர்களை வேவு பார்ப்பதற்கும் அந்த இடம் நல்ல வசதியாயிருந்தது. மூலஸ்தானபுரத்துக்குச் சற்று தூரத்தில் இருந்தது வைதஸ்தா நதியின் படகுத்துறை. படகுத்துறையிலிருந்து கூப்பிடு தூரத்தில் ஒரு வைத்தியசாலை. மௌரியர்கள் காலத்தில் ஏற்பட்டுக் குப்தர்களாலும் பரிபாலிக்கப்பட்டு வந்த அந்த வைத்தியசாலை ஹூணர்கள் வசமாகிவிட்டது. அந்த வைத்தியசாலையை நோக்கிச் சென்ற அஜித் சந்திரன் ஆற்றங்கரையில் இருந்த சில வீரர்களின் அதிசய நிலையைக் கவனித்தான். அவ்வப்பொழுது வேவு

பார்க்கும் படைகள் மோதும்போது காயப்படும் வீரர்களுக்கு வைத்தியம் செய்யவே அங்கு வைத்தியசாலை இருந்து வந்தது. ஆனால் ஆற்றங்கரையில் கண்ட ஒவ்வொரு வீரனும் காயமடைந்தவனாகவோ நோயாளியாகவோ காணப்பட வில்லை. வீரர்கள் சிலரின் கழுத்துகளில் தங்கச் சங்கிலி தொங்குவதையும் சிலர் கைகளில் வைர மோதிரங்கள் மின்னுவதையும் கண்ட உபாத்தியாயன் சந்தேகம் அதிக மாகவே, "டேய், வா இப்படி" என்று ஒரு வீரனைக் கூப்பிட்டான்.

உபசேனாதிபதியின் கட்டளையை முதலில் அந்த ஹூணன் செவியில் வாங்கவே இல்லை. இரண்டாம் முறை அஜித் சந்திரனிடமிருந்து எழுந்த அதிகாரங் கலந்த குரல் அவனை மெல்ல எழுப்பவே, அவன் தள்ளாடி நடந்து வந்து உபாத்தியாயன் குதிரைக் கடிவாளத்தைப் பிடித்துக் கொண்டு நின்றான். "இங்கு என்ன செய்து கொண்டிருக் கிறீர்கள்?" என்று உபாத்தியாயன் வினவினான்.

"வைத்தியம் செய்து கொண்டிருக்கிறோம்."

"யாருக்கு?"

"எங்களுக்குத்தான்."

"உனக்கு என்ன காயம்?"

"காயமில்லை, சுரம்."

"அவர்களுக்கு?"

"அவர்களுக்கும் என்னைப்போல் காய்ச்சல்தான்."

அவன் நன்றாகக் குடித்திருந்தான். தூரத்தில் உட்கார்ந் திருந்த மற்றவர்களும் குடித்திருந்தார்கள். அவனுடன் மேலே எதுவும் பேசிப் பிரயோசனமில்லை என்பதைத் தெரிந்து கொண்ட உபாத்தியாயன், "உங்கள் படைத்தலைவன் எங்கே?" என்று கேட்டான்.



"வெளியே போயிருக்கிறார், சற்று நேரத்தில் வருவார்."

"அதோ படகுத் துறையிலிருக்கும் தர்மசாலையில் நான் சாப்பிட்டு இளைப்பாறுகிறேன். உங்கள் படைத்தலைவன் வந்ததும் என்னை உடனே வந்து சந்திக்கச் சொல்."

"நீங்கள் யார்?"

"தோரமானாவின் உபசேனாதிபதி," என்று சொல்லி விட்டு அஜித் சந்திரன் தர்மசாலையை நோக்கிக் குதிரை யைச் செலுத்தினான். அவனுடன் வந்த நான்கு வீரர்கள் அவனைத் தொடர்ந்து சென்றனர்.

தர்மசாலை அதிகாரியான கிழவன் உபசேனாதிபதியை மிகுந்த மரியாதையுடன் வரவேற்று, மாடி அறைக்கு அழைத்துச் சென்று அங்கிருந்த ஆசனத்தில் அமர்த்திப் போஜனம் செய்வித்தான். உபாத்தியாயன் எங்கோ யோசித்துக் கொண்டே சாப்பிட்டுக் கையலம்பி முடித்தான். வெளியே பலமான இரைச்சல் கேட்டது. சாளரத்தின் வழியே வெளியே எட்டிப் பார்த்த அஜித் சந்திரன் இரண்டு புரவிகள் பூட்டப்பட்ட ஒரு வண்டியைச் சுற்றி ஹூண வீரர்கள் பலமாகக் கூவிக்கொண்டிருப்பதையும், வண்டி ஓரமாகக் குதிரை மேல் வந்துகொண்டிருந்த படைத் தலைவன் காதில் யாரோ ஒருவன் 'குசுகுசு'வென்று ஏதோ சொல்லுவதையும் கவனித்தான்.

"யாரவன்? உபசேனாதிபதியா?" என்று இரைந்து குதிரையிலிருந்து குதித்து வெகு வேகமாக மாடிப்படிகளில் ஏறி உள்ளே நுழைந்த படைத்தலைவனைக் காண அஜித் சந்திரனுக்கே ஆச்சரியமாகிவிட்டது. வந்த படைத்தலைவன் வேறு யாருமல்ல. கலியாண நாளன்று காமினியை இழந்த மாப்பிள்ளை பல்தேவ்தான்!

# 15. வண்டியில் வந்தவள்

வாழ்க்கையில் மிதமிஞ்சிய கஷ்டம் ஏற்பட்டால் ஒன்று மனிதன் பண்படுகிறான். இல்லை, நாசமாகி விடுகிறான். அவனவன் தரத்தைப் பொறுத்த விஷயம் அது. நெருப்பில் வைக்கோல் விழுந்தால் சட்டென்று பற்றி எரிந்து தீய்ந்து போகிறது. தங்கம் விழுந்தால் முன்னைவிட அதிகப் பளபளப்பைப் பெற்றுப் பிரகாசிக்கிறது. மனிதன் வாழ்வும் இப்படித்தான். வைக்கோலைப் போல் உரமற்ற தக்கையான மனிதன், வாழ்க்கையின் சோதனைகளில் மாட்டிக் கொண்டால் நாசமாகிறான். ஆனால், லட்சியப் புருஷனாயிருப்பவனுக்கு வாழ்க்கையின் சோதனைகள் மெருகு கொடுக்கின்றன. இயற்கையிலேயே உரம் பெற்ற அவன் குணங்கள் இன்னும் அதிகப் பளபளப்புடன் லட்சியத்தின் உச்சநிலையை அடைகின்றன. வாழ்க்கையின் கடுமையான சோதனைகளில் சிக்கிய பல்தேவும், அஜித் சந்திரனும் மேலே குறிப்பிட்ட இருவகை மனிதர்கள்.

உள்ளே நுழைந்த பல்தேவை ஒரே பார்வையில் எடை போட்டுக்கொண்ட அஜித் சந்திரன், பல்தேவின் உத்தம குணங்கள் தீய்ந்து போய்விட்டதை அறிந்தான். பார்வைக்குப் பல்தேவ் கேவலம் ஒரு கொள்ளைக்காரனைப் போலிருந்தானேயொழிய சைன்னியத்தை நடத்தக்கூடிய ஒரு படைத் தலைவனாகக் காணப்படவில்லை. ஏற்கெனவே உயரமும் பருமனாயுமிருந்த அவன் சரீரம், குடியால் இன்னும் சற்று அதிகமாக ஊதியிருந்தது. அவன் கண்களில் முன்பிருந்த பயம் இப்பொழுதில்லை. அதற்குப் பதில் வெறி குடிகொண்டிருந்தது. இதழ்க் கோடிகளில் தெரிந்த சிரிப்பு காலித்தனத்



தைக் காட்டியது. இதையெல்லாம் அஜித் சந்திரன் விவரமாகக் கவனித்தானே யொழிய பல்தேவை வரவேற்க ஓர் அடி முன் எடுத்து வைக்கவுமில்லை, முகத்தில் வெறுப்பையோ சிரிப்பையோ வேறெவ்வித உணர்ச்சியையோ காட்டவில்லை.

உபசேனாதிபதி யார் என்பதைக் கவனித்த பல்தேவின் வேகம் மட்டும் சட்டென்று தடைப்பட்டது. வாயிற்படியைத் தாண்டியும் தாண்டாததுமாக ஒரு கணம் ஸ்தம்பித்து நின்றான். குடிவெறி கூடச் சிறிது கலைந்து முகத்தில் ஆச்சரியக் களை படர்ந்தது.

"யார் உபாத்தியாயரா? நம்பவே முடியவில்லையே!" என்று ஏதோ உளறினான். அத்துடன் காரணமில்லாமல் சற்று சிரிக்கவும் சிரித்தான். தன்னைவிடப் பெரிய மனிதனாயிருப்பவனைத் திடீரெனச் சந்திக்கும்போது கீழ்த்தர மனிதனுக்கு இந்த மாதிரி அர்த்தமற்ற வார்த்தைகளும் அசட்டுச் சிரிப்பும் ஏற்படுவது சகஜம்.

உபாத்தியாயன் பதிலுக்குப் புன்முறுவல்கூடச் செய்யவில்லை. திடமான குரலில், "உள்ளே வா பல்தேவ்" என்றான். பல்தேவ் உள்ளே வந்து இடுப்பிலிருந்த கத்தியைக் கழற்றி ஒரு மூலையில் வைத்துவிட்டு, உபாத்தியாயனுக்கு ஒரு மஞ்சத்தை இழுத்துப் போட்டுத் தானும் ஒரு மஞ்சத்தை இழுத்துக்கொண்டு உட்கார்ந்தான். பல்தேவுடன் பேச ஆரம்பிக்கும் முன்பாக உபாத்தியாயன் அறையைச் சுற்றும் முற்றும் ஒருமுறை கவனித்தான். பழைய நாள் கட்டடம். சமீப காலத்தில் ராஜாங்கக் கஷ்டத்தாலும் மூலஸ்தானபுரம் அடிக்கடி கைமாறிக் கொண்டிருந்தபடியாலும் குப்தர்களோ ஹூணர்களோ இந்தத் தர்மசாலையைச் சரிவரக் கவனிக்காமல் விட்டிருந்தபடியால் சுவர்களில் காரை பெயர்ந்து விழுந்திருந்தது. ஆங்காங்குத் தீட்டப்பட்டிருந்த வர்ணச்

சித்திரங்கள் கண்ணழிந்தும் கால் அழிந்தும் விகாரமாகக் காணப்பட்டன. மஞ்சங்களின் உயர்ந்த வேலைப்பாடுகள் கூடப் பழுதாகி, மரக் கால்களிலிருந்த சிங்கங்கள், புலிகள் இவற்றின் மூக்குகள் மொக்கையாகியும் பாத விரல்கள் சக்கை பெயர்ந்தும் கிடந்தன. தர்மசாலை வாயிலை நோக்கி யிருந்த இரண்டு சாளரங்களிலும் இரண்டு குத்து விளக்குகள் பாசியேறிக் கிடந்தன. கூரையில் பிரமாதமான வேலைப்பாட்டுடன் பல முகங்களோடு தொங்கிக் கொண் டிருந்த வெண்கல விளக்குகூட ஏழை ஸ்திரீயின் தலை போல வெகு நாட்களாக எண்ணெயைக் காணாமலிருந்தது. இப்படியிருந்த அறையின் மூலைகளில் தன் உடைகளையும் உடைவாள் முதலியவற்றையும் பல்தேவ் சுழற்றி எறிந் திருந்தான். அவன் குடிப்பதற்கு உபயோகப்படுத்தியிருந்த காச்மீரக் கோப்பைகளும் ஒரு மூலையில் கிடந்தன. தாறு மாறாயிருந்த அந்த அறையின் நிலைமையிலிருந்து பல்தேவ் எப்படி மாறியிருக்கிறான் என்பதை உபாத்தியாயன் உணர்ந்து கொண்டான்.

இந்த ஆராய்ச்சியின் காரணமாக மௌனமாயிருந்த உபாத்தியாயனைப் பல்தேவ் பேச்சுக்கிழுத்தான்.

"உபாத்தியாயரே! என்னை இந்த இடத்தில் எதிர் பார்த்திருக்க மாட்டீர்கள். ஆனால் நீங்கள் வந்தது எனக்கு எவ்வளவோ மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. யாரோ உப சேனாதிபதி வந்திருக்கிறார் என்று கேட்டதும் முதலில் பயந்தே போய்விட்டேன்" என்றான் பல்தேவ்.

அஜித் சந்திரன் அவனை உற்றுப் பார்த்தான். பல்தேவ் யாருக்கும் பயப்படுகிற ஆளாகத் தெரியவில்லை. தன்னிட முள்ள பழைய மரியாதையாலேயே பல்தேவ் பணிவாகப் பேசுகிறான் என்பதை உணர்ந்து கொண்ட அஜித் சந்திரன்,



"பயம் எதற்குப் பல்தேவ்? கடமை தவறுபவனுக்கல்லவா பயம் வேண்டும்?" என்றான்.

பதிலுக்கு பல்தேவ் சிரித்தான். "கடமையா உபாத்தி யாயரே! கடமை, தர்மம் எல்லாம் அவரவர் சக்தியையும் செல்வாக்கையும் பொறுத்தது. ஆகையால் இந்த விஷயங் களில் எது கடமை, எது கடமை அல்ல என்று நிர்ணயிப்பது கஷ்டம்" என்று சொன்ன பல்தேவ் தன் தத்துவத்தை தானே விளக்க ஆரம்பித்தான்:

"இப்பொழுது தோரமானாவுடன் போர் முனையி லிருக்க வேண்டியது என் கடமை என்று நீங்கள் நினைப்பீர் கள். நான் அப்படி நினைக்கவில்லை. இங்கிருந்து சிகிச்சை செய்து கொள்வதுதான் என் கடமை என்று நினைக்கிறேன்" என்று சொல்லிக்கொண்டு போனவனை அஜித் தடை செய்து "சிகிச்சையா, உனக்கு உடம்புக்கு எதுவுமிருப்பதாகத் தெரியவில்லையே?" என்று சொல்லிவிட்டு மாப்பிள்ளை யின் பூதாகரமான உடலை ஏற இறங்கப் பார்த்தான்.

"இங்கு நடைபெறும் சிகிச்சை உடலுக்கல்ல, உள்ளத் துக்கு" என்றான் பல்தேவ்.

"உள்ளத்துக்கா?"

"ஆம் உபாத்தியாயரே! என் உள்ளத்தில் கூரிய பல ஈட்டிகள் பாய்ந்திருப்பது உங்களுக்குத் தெரியாதா? மண நாளன்று மனைவியை இழந்தேன், பிறகு அடிமையாக அடிபட்டேன்..."

"அதற்காக..."

"அந்த உள்ளப் புண்களை இங்கிருந்து ஆற்றி வருகிறேன். தோரமானாவுக்குப் பயந்து பல ஹூணப் பிரபுக்கள் குப்த ராஜ்ய எல்லைக்குள் ஓடுகிறார்கள். ஏனென்றால் தோரமானா மலைவாசலை அடைத்துக் கபீசத்துக்கும் பாரதத்துக்கும் தொடர்பில்லாமல் செய்து

விட்டான். இங்கிருக்கும் பிரபல ஹூணர்களைச் சிறுகச் சிறுக ஒழித்து ஹூணப் படைகளுக்கெல்லாம் தானே தலைவனாகி ஹிந்துஸ்தானத்தில் தானும் ஒரு மன்னனாகப் பார்க்கிறான். இப்பொழுது ஹூணப் பிரமுகர்களுக்கு அடைக்கலம் கருணையின் பெயராலும் தர்மத்தின் பெயராலும் அளித்துக் கொண்டிருப்பது குப்த ராஜ்யந்தான். அப்படி அங்கு செல்ல பிரயத்தனப்படும் ஹூணப் பிரபுக் களைப் பிடித்துப் பழிக்குப் பழி வாங்கி வருகிறேன். அவர்கள் எடுத்து வரும் பொற்காசுகளையும் நகைகளை யும் கொள்ளையடிக்கிறேன். கொஞ்சம் மீறிப் பேசுபவர் களுக்குக் கசையடி கொடுக்கிறேன். இங்கு என்னுடன் பார்வைக்கு இருநூறு வீரர்கள்தான் இருக்கிறார்கள். ஆனால் ரஸ்தாவில் சஞ்சரிக்க ஐநூறு வீரர்கள் இருக்கிறார்கள். அவர்கள் வலையில் சிக்கிவரும் ஹூண மீன்கள் பல்தேவின் பசிக்கு இரையாகின்றன. மூலஸ்தானபுரத்தில் பல்தேவின் ஆட்சி பலமாக நடக்கிறது'' என்று விவரித்து இடிஇடி என்று வெறி உதிரும் சிரிப்பைக் கொட்டினான்.

அஜித் சந்திரன் வெறுப்புக் கலந்த பார்வை ஒன்றை பல்தேவ்மீது வீசினான். "பாரதத்தின் சேவைக்காக மலை வாசலில் ரத்தத்தை ஆறாகப் பெருக்கிய வில்லவர் வம்சத்தில் பிறந்த நீ கொள்ளைக்காரனாக மாறிவிட்டாயா? இதைச் சொல்லிக்கொள்ள உனக்கு வெட்கமாயில்லையா?''

"இதில் வெட்கமென்ன இருக்கிறது! நான் செய்வதும் பாரத நாட்டுச் சேவைதான்; என் ரத்தத்தைச் சிந்தவில்லை. எதிரிகள் ரத்தத்தைச் சிந்துகிறேன். நம்மிடமிருந்து ஹூணர்கள் பறித்த செல்வத்தை திரும்பப் பெறுகிறேன்.''

"யுத்த காலத்தில் எதிரியின் ரத்தத்தைச் சிந்தலாம், தவறில்லை. நிராயுதபாணியான எதிரியைப் பிடித்துக் கசை யடியால் ரத்தத்தைச் சிந்துவது தர்மமா?''



"இதை ஹூணர்கள் யோசித்தார்களா? தங்களை அடில மகாப்பிரபு என்ன செய்தார்? உபாத்தியாயரே, உங்களுக்குப் பட்டும் புத்தி வரவில்லை'' என்றான் பல்தேவ். இவ்வளவு துணிச்சலுடன் பேசுவதைப் பார்த்த உபாத்தியாய னுக்குத் தன்னையறியாமல் சிரிப்பு வந்துவிட்டது.

"பல்தேவ்! தர்க்கத்திலும் தேர்ச்சி பெற்றுவிட்டாய்?'' என்றான் அஜித் சந்திரன்.

"அதில் மட்டுமல்ல உபாத்தியாயரே, என்னுடன் இருக்கும் எழுநூறு வீரர்களை ஏமாற்றவும் கற்றுக் கொண் டிருக்கிறேன். வரவரக் கொள்ளையில் என் சகாக்கள் அதிக பங்கு கேட்கிறார்கள். ஆகவே, அவர்களிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டியிருக்கிறது. உதாரணமாக இதோ பாருங்கள். இன்று ஒரு ஹூணன் வண்டி பிடிபட்டது. திரைக்குள்ளே ஒரு யுவதியும் வாலிபனும் உட்கார்ந்திருந்தார்கள். காலடியில் இருந்த பெரிய பெட்டியில் வெள்ளித் தாம்பாளங்கள், தங்க நகைகள் இருந்தன. நான் திரையை விலக்கிப் பெட்டியைத் திறந்ததும் என்னோடு இரு வீரர்களும் தலையை நீட்டி னார்கள். அவர்கள் வெள்ளித் தாம்பாளங்களையும் நகை களையுந்தான் பார்த்தார்கள். ஆனால், பல்தேவின் கண்கள் இன்னுமொரு சிறிய சம்புடத்தையும் கவனித்தன. வீரரை அப்புறம் விரட்டிவிட்டுச் சம்புடத்தைத் திறந்தேன். அத்தனை யும் வைரம். வைடூரியக் கோமேதகக் கற்கள். அவற்றைக் கொண்டு ஒரு ராஜ்யத்தை வாங்கலாம். அதை இந்த நாய்கள் பார்த்து விட்டால் சும்மா இருக்க மாட்டார்கள். ஆகையால், உடனே சம்புடத்தை மூடிப் பெட்டியிலேயே வைத்து வண்டித் திரையைப் பழையபடி விட்டேன். வண்டியை என் கண் பார்வையிலேயே கொண்டு வந்து விட்டேன். எப்படி உபாத்தியாயரே?''

அஜித் சந்திரன் அந்த உத்ஸாகக் கேள்விக்குப் பதில் சொல்லவில்லை. "வண்டியிலிருந்த இருவர் யார்?" என்று கேட்டான்.

"இருட்டில் சரியாகத் தெரியவில்லை. அதிகமாகக் கவனித்தால் இதர வீரர்கள் சம்புடத்தைப் பார்த்தாலும் பார்க்கலாம். ஆகையால், பெட்டியின் பரீட்சையோடு நிறுத்திக் கொண்டேன். நாம் இருவரும் முதலில் சாப்பிடு வோம். பிறகு வண்டியிலிருக்கும் விருந்தினர்களை விசாரிப் போம்" என்றான். மறுபடியும் ஏதோ நினைத்துக் கொண்டு, "வண்டியிலிருக்கும் அந்தப் பெண்ணை விட்டு விட்டுத் தனியாகச் சாப்பிடுவானேன்? இந்தத் தர்மசாலைக் கிழவனை விட அவள் பரிமாறினாலே நன்றாக இருக்குமே" என்று சொல்லிவிட்டு, "யாரங்கே, சுராஜ்" என்று கூப்பிட்டான். கீழேயிருந்து, "இதோ வந்து விட்டேன்" என்று சப்தம் வந்தது. சற்று நேரத்தில் பலிஷ்டனான ஒரு வீரன் உள்ளே நுழைந்தான்.

"சுராஜ்! வண்டியிலிருக்கும் பெண்ணை அழைத்து வா" என்று உத்தரவிட்டான் பல்தேவ்.

"வேண்டாம் பல்தேவ்! நியாயமல்ல" என்றான் அஜித் சந்திரன்.

"ஹூணர்கள் நம்மிடம் என்ன நியாயத்தைக் காட்டி னார்கள்?" என்று சீறினான் பல்தேவ்.

அவன் பேச்சில் எவ்வளவோ உண்மை இருக்கிறது என்பதை அஜித் சந்திரன் உணர்ந்தான். ஆனால், அவன் தூய உள்ளம் அபலையான ஒரு பெண்ணைப் பழிவாங்கும் இழிந்த நிலைக்கு இறங்க மறுத்தது. ஆனால், பல்தேவ் இருக்கும் ஸ்திதியில் யார் எது சொன்னாலும் அவன் கேட்க மாட்டான் என்பதை அஜித் சந்திரன் அறிந்தான். தவிர, தன்னுடன் வந்திருக்கும் நாலைந்து வீரர்களை வைத்துக்



கொண்டு தான் பல்தேவை அடக்க முடியாது என்பதும் வெட்ட வெளிச்சமாக அவனுக்குத் தெரிந்திருந்தது. எது எப்படி நடந்தாலும் தான் எதுவும் செய்வதற்கில்லையென்ற எண்ணத்தால் அஜித் சந்திரன் மௌனம் சாதித்தான். இடையில் உள்ளே வந்த தர்மசாலைக் கிழவன் விளக்கு களுக்கு நிரம்ப எண்ணெய் விட்டுத் திரிகளைத் தூண்டி விட்டுச் சென்றான். விளக்கு வெளிச்சத்தில் சுவரில் விழுந்த பல்தேவின் உருவ நிழல் ஏதோ பெரிய பிசாசு ஒன்று உட்கார்ந்திருப்பது போல் தெரிந்தது.

வண்டியிலிருந்த பெண்ணைப் பலாத்காரமாக இழுத்து வந்த சுராஜ் அவளை உள்ளே தள்ளினான். பெண்ணைக் கண்ட பல்தேவும் அஜித் சந்திரனும் ஏககாலத்தில் எழுந் தார்கள். ஏக்கத்தால் எழும்பித் தாழ்ந்த மார்புடனும் கலைந்த கேசத்துடனும் விழிகளில் கோபம் கக்க சித்ராதேவி அவர்கள் எதிரில் நின்றாள். "சித்ராதேவி!" என்று பல்தேவ் ஆச்சரியத்தால் கூவினான்.

# 16. கடவுள் இருக்கிறார்

சற்று நேரம் அந்த அறையில் நிசப்தம் நிறைந்திருந்தது. அந்த நிசப்தம் ஏதோ விபரீதமான ஒரு நாடகத்துக்கு அஸ்திவாரம் என்ற காரணத்தால் வெளியில் ஆகாசத்தில் இருந்த தாரகைகள் கூட கண்களைச் சிமிட்டிக் கொண்டு ஜன்னல் வழியாக உள்ளே பார்த்தன. பல்தேவின் குடி வெறியில் பாதிக்கு மேல் கலைந்துவிட்டது. அவன் சித்ராவைப் பார்த்த பார்வையிலிருந்து அவன் மூளை எதையோ தீவிரமாக யோசிக்கிறது என்பதை அஜித் சந்திரன் தெரிந்து கொண்டான். பல்தேவுக்குப் பின்னால் விளக்கு வெளிச்சம் படாத மூலையில் அஜித் சந்திரன் நின்று கொண்டிருந்ததால் சித்ரா அவனைப் பார்க்கவில்லை. தனக்கு எதிரில் பயங்கரமாக நின்றுகொண்டிருந்த பல்தேவையே பிரமித்துப் பார்த்தாள். "சித்ராதேவி மூலஸ்தானபுரத்தை நோக்கி ஏன் வந்தாள்? அவளும் தோரமானாவுக்குப் பயந்து தப்பி ஓடுகிறாளா? வண்டியில் இவளுடன்கூட வந்திருப்பவன் யார்?" என்ற கேள்விகளில் அஜித் சந்திரனின் மனம் லயித்திருந்தது.

மூவருக்கும் யோசனையால் ஏற்பட்ட மௌனத்தை பல்தேவ் முதலில் கலைத்தான். "சித்ரா! பயப்படாதே. நான் உன் குடிகளில் ஒருவன். மலைவாசல் பிராந்தியத்திலிருந்த வில்லவர் வம்சத்தைச் சேர்ந்தவன். நல்லவேளையாக யாரிடமும் பிடிபடாமல் என்னிடம் பிடிபட்டாய்" என்றான் பல்தேவ்.

சித்ரா அவன் வார்த்தைகளைத் தவறாக அர்த்தம் செய்துகொண்டாள். அவள் கண்களில் அதுவரை காணப்பட்ட கோபமும் சிறிது தணிந்தது. "ஐயா! இது என்



பாக்கியம். வண்டியில் கூட வந்திருப்பவன் என் தம்பிதான். எங்களிருவரையும் எப்படியாவது காப்பாற்றி விடுங்கள். உங்களுக்கு எவ்வளவு பணம் வேண்டுமானாலும் தருகிறேன். தோரமானாவிடம் நாங்கள் சிக்கினால் என்ன நேரிடுமென்று சொல்ல முடியாது" என்றாள் சித்ராதேவி.

"தோரமானாவிடம் நீங்கள் போகவேண்டிய அவசியமே இல்லை. சித்ரா! உனக்கிருக்கும் அழகுக்கு எந்த இடத்திலும் நீ சுகமாயிருக்கலாம். பணத்தைப் பற்றிக் கவலைப்படாதே. அதைச் சம்பாதிக்கும் வழி எனக்குத் தெரியும். உனக்குப் பணம் நான் தருகிறேன். என் இஷ்டத்திற்கு மட்டும் வழி விடு," என்று சொல்லிக்கொண்டே அவளை நெருங்கினான் பல்தேவ்.

சித்ரா சற்றுப் பின்னால் நகர்ந்தாள். அவன் சொன்ன சொற்களிலும் பேசிய மாதிரியிலும் கபடமும் கெட்ட எண்ணமும் பூரணமாக இருந்ததை சித்ரா கவனித்தாள். அவள் கண்களில் கோபம் போய் பயம் தெரிந்தது. "ஐயா! அபலையான ஒரு பெண்ணிடம் இப்படிப் பேசுவது நியாயமா? பெண்ணைக் கௌரவிக்க வேண்டியது வீரர்கள் கடமையல்லவா?"

பல்தேவ் கட்டடமே அதிரும்படி சிரித்தான். "ஹிந்து ஸ்திரீகளிடம் ஹூணர்கள் இந்தக் கடமையை என்றாவது கையாண்டது உண்டா சித்ரா?" என்று கோபம் லேசாகத் தொனித்த குரலில் கேட்டான் பல்தேவ்.

"யாரோ செய்த குற்றத்துக்காக யார் மேலோ பழி வாங்க முயல்வதுதான் நீ கற்றுக்கொண்ட தர்மமா?" என்று சித்ரா கேட்டாள்.

பல்தேவ் அவளை உற்றுப் பார்த்துக்கொண்டே சொன்னான்: "சித்ரா! என்னைச் சரியாகப் பார். நான் யாரென்று தெரிகிறதா? உனக்குத் தெரியாதிருக்கலாம். ஆனால்

நிச்சயமாகக் கேள்விப்பட்டிருப்பாய். ஏனென்றால் என் பெயர் மலைவாசலில் பிரசித்தம். எப்படிப் பிரசித்தமென்று கேட்கிறாயா? மணநாளன்று மனைவியைக் கோட்டை விட்டவன் என்று பிரசித்தம். ஆனால், உனக்குத் தெரிய நியாயமில்லை. நீ எஜமான் பெண். மனைவிமார்களை ஹூணர்களிடம் பறி கொடுக்கும் ஹிந்துக் கணவர்களின் பெயர்களைத் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் உனக்கில்லை. ஆனால் கற்பழிக்கப்பட்ட பெண்ணின் பெயராவது தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். காமினி என்ற பெயரைக் கேள்விப்பட்டிருக்கிறாயா?''

சித்ராவின் முகத்தில் அச்சம் அதிகமாகப் படர்ந்தது. பல்தேவ் பார்வையும் பேச்சும் மனிதன் வெறியின் உச்சத்தை அடைந்த நிலையையே காட்டின. நடுங்கும் குரலில், "காமினி!'' என்று உச்சரித்தாள்.

"ஆம்! காமினிதான். கல்யாண நாளன்று உன் அப்பன் தூக்கிக் கொண்டு போன அதே காமினிதான். உன் முன் தற்சமயம் இருப்பவன் அந்தக் காமினியின் புருஷன் பல்தேவேதான். சித்ரா! கண்டிப்பாய் கடவுள் இருக்கிறார்'' என்றான் பல்தேவ்.

"அதை இப்பொழுதுதான் தெரிந்து கொண்டாயா?'' ஏதோ சொல்லவேண்டும் என்பதற்காகச் சித்ரா அந்தக் கேள்வியைக் கேட்டாள். ஆனால், அந்தக் கேள்வி பல்தேவின் வெறிக்குச் சரியான தூண்டுகோலாய் இருந்தது.

"ஆமாம் சித்ரா! இப்பொழுதுதான் தெரிந்துகொண்டேன். கடவுள் இல்லை என்று நான் தீர்த்துக்கட்டி வெகு நாளாகிறது. அன்று மலைவாசலில் என் வாழ்க்கை நாசமான பிறகு கடவுளைப் பற்றிய நம்பிக்கையை இழந்து விட்டேன். எந்தக் குற்றமும் செய்யாத என் மனைவியைத் தூக்கிச் சென்ற அடிலனை ராஜபோகத்திலும், மனைவியைப் பறி கொடுத்த என்னை அடிமைத்தனத்திலும் ஆழ்த்தியவன் கடவுளல்ல. கடவுளாய் இருந்தாலும் அவன் அக்கிரமக்காரர்களின் கையாள் என்று விலக்கிவிட்டேன். ஆனால், நான் நினைத்ததெல்லாம் எவ்வளவு பிசகு என்பதை இன்று உணர்ந்துகொண்டேன். கடவுள் இருக்கிறார். நியாயத்துக்கும் தர்மத்துக்கும் அவர் இருப்பிடமென்பதை இன்று பூர்ணமாக நம்புகிறேன். இல்லாவிட்டால் என் மனைவியை எவன் தூக்கிச் சென்றானோ அவன் பெண்ணை என்னிடம் ஒப்படைப்பாரா?'' என்றான் பல்தேவ். அவன் உதடுகள் உணர்ச்சி மிகுதியால் துடித்தன.



இருட்டில் மூலையில் மறைந்து நின்ற அஜித் சந்திரன் பல்தேவின் வார்த்தைகளில் எத்தனை உண்மை இருக்கிறதென்பதை நினைத்துப் பார்த்தான். அன்று காமினி இருந்த நிலையில் இன்று சித்ரா இருக்கிறாள். அன்று அடிலன் எதையும் செய்யக்கூடிய சக்தியையும் அந்தஸ்தையும் பெற்றிருந்தான். இந்த இடத்தில் பல்தேவ்தான் எஜமான். அவன் செய்யும் எதையும் தடை செய்ய யாராலும் முடியாது. பல்தேவ் சொன்னதெல்லாம் உண்மைதான். ஆனால், கடவுள் என்ன முடிவுக்காக இங்கு சித்ராவைக் கொண்டு வந்திருக்கிறார் என்பதை பல்தேவ் எப்படித் தீர்மானிக்க முடியும்? இந்த நினைப்புகளில் இருந்த உபாத்தியாயனை இடையே நிகழ்ந்த சம்பவம் இந்த உலகத்துக்கு இழுத்து வந்தது. உணர்ச்சியால் மெய் மறந்திருந்த பல்தேவின் மேல் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்த சித்ரா அவன் வயிற்றுக்கு நேராக சட்டையில் செருகி வைத்திருந்த உடைவாளைக் கையில் எடுத்துக் கொண்டாள். அத்துடன் பல்தேவ் தொடர, அறையைச் சுற்றிப் பின்னடைந்து கொண்டே பேசினாள்: "அடே பல்தேவ்! இப்பொழுது புரிந்து கொண்டாயா— கடவுள் உனக்கு மட்டுமில்லை எனக்கும் உண்டு என்பதை? நான் உன் கையில் சிக்குவேன் என்று மட்டும் நினைக்காதே.

அதைவிட இந்தக் கத்தியை என் மார்பில் செருகிக் கொள்வேன். கிட்டே வராதே, எட்ட நில்'' என்று சொன்னாள். பல்தேவ் அவள் பேச்சைக் கவனிக்கவில்லை. அவள் சஞ்சாரத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். மஞ்சத்தருகில் அவள் வந்ததும் தன் காலால் மஞ்சத்தைச் சற்று இடறினான். சித்ராதேவியின் காலில் மஞ்சம் சாய்ந்தது. அடுத்த நிமிடம் பல்தேவ் அவள் மீது பாய்ந்து கத்தியிருந்த கையை மணிக்கட்டுக்கருகில் இறுகப் பிடித்துக் கையிலிருந்த கத்தி கீழே விழ உதறினான். விழுந்த கத்தியைக் காற்செருப்பால் உதைத்து அறையின் மூலையில் தள்ளினான்.

அறை நடுவில் நின்றுகொண்டு அவள் கையைப் பிடித்தவாறே பல்தேவ் சொன்னான்: "சித்ராதேவி! கடவுள் என் பக்கம்தானிருக்கிறார். உண்மையில் உன் தகப்பனால் வாழ்க்கை அழியப் பெற்றவன் நான்தான்."

சித்ராவின் கண்களில் நீர் சுரந்தது. "அடப் பாவி! ஈவிரக்கமில்லையா? ஒரு பெண் தவிக்கிறேனே தெரியவில்லையா? இத்தனைக்கும் உன் மனத்தில் கருணை சுரக்கவில்லையா?" என்று விக்கி விக்கிச் சொன்னாள்.

"என் மனைவி இதைவிடக் கதறினாளே! உன் தகப்பன் கேட்டானா? நான் அவன் காலைப் பிடித்துக் கெஞ்சினேன்; காலால் உதைத்துத் தள்ளினான். நீ அந்தச் சமயத்தில் பார்த்திருந்தால் தெரியும். ஆனால் அப்பொழுது நீ இல்லை. நானும் என் மனைவியும் மாத்திரமா உங்களால் சீரழிந்தோம்? என் மனைவி மானத்தைக் காக்க வந்த இந்த உபாத்தியாயனைச் சாட்டையால் அடித்து உன் தகப்பன் கொன்றே விட்டானே! அத்தனைக்கும் இன்று பரிகாரம் கிடைக்கப் போகிறது" என்றான் பல்தேவ்.

அப்பொழுதுதான் இருளில் இன்னோர் உருவம் நிற்பதை சித்ரா கவனித்தாள். அறையின் இருட்டை விட்டு



மெள்ள ஜன்னலருகில் வெளிச்சத்துக்கு வந்தான் அஜித் சந்திரன். உபாத்தியாயனைக் கண்டதும் சித்ராவின் கண்களில் சற்று நம்பிக்கை உதயமாயிற்று. "பல்தேவ்! உபாத்தியாயரை என் தகப்பனார் கசையால் அடித்தது வாஸ்தவம். ஆனால் அவர் உயிரை நான் காப்பாற்றினேன்; வேண்டுமானால் கேட்டுப் பார். என்னைக் காக்க வேண்டிய கடமை அவருக்கு இருக்கிறது," என்று சொல்லி உபாத்தியாயனை நோக்கிப் பரிதாபமான பார்வையொன்றை வீசினாள். பல்தேவும் உபாத்தியாயனை நோக்கித் திரும்பினான்.

உபாத்தியாயன் முகத்தில் எந்தவித உணர்ச்சியையும் காணோம். அழகிய கற்சிலைபோலிருந்தது முகம். அவன் உதடுகள் மட்டும் திறந்து சித்ராவுக்குப் பதில் சொல்லின: "என் உயிரைக் காத்ததற்குப் பதில் உன் மாளிகை நந்தவனத்தில் உன் தம்பியின் உயிரை யாசித்தாய். அதைக் கொடுத்தேன். அத்துடன் அந்தப் பழைய கடன் தீர்ந்துவிட்டது. ஆகையால் என்னிடம் உதவியை எதிர்பார்க்காதே. பல்தேவிடமே உன் பிரார்த்தனைகளைச் செலுத்து, இங்கு அவன்தான் தலைவன்" என்றான்.

குரூரமான இந்த வார்த்தைகளால் அதிர்ச்சி அடைந்தாள் சித்ரா. எப்படியும் தப்ப வழியில்லை என்பதைப் பூரணமாகத் தெரிந்துகொண்டாள். "நீ ஒரு புருஷனா! நீ ஒரு வீரனா? உன்மேல் எத்தனை அன்பு வைத்தேன். அட பதரே! என்னெதிரில் நிற்க உனக்கு வெட்கமாயில்லையா?" என்று கர்ஜித்தாள்.

பல்தேவ் அவள் கையைப் பிடித்துப் பலவந்தமாகத் தனக்காக இழுத்தான். அவள் அழகிய உடலைப் பார்த்தான். சித்ரா பின்னடைந்தாள். "அடி, வாடி" என்று கிட்டே இழுத்துத் தழுவ முயன்றான். அவன் கைகள் அவளைச்

சுற்றி இரண்டு சர்ப்பங்களைப் போல் சென்றன. திடீரென அவன் பிடியிலிருந்து திமிறிக்கொண்ட சித்ரா கேசம் குலைந்து தொங்க ஓடி, "உபாத்தியாயரே!" என்று கூச்ச லிட்டாள்.

"அதெல்லாம் பலிக்காதடி அடிலன் மகளே! உபாத்தி யாயருக்கு எது நியாயம் என்று தெரியும். வீணாகக் கத்தாதே, வா இப்படி" என்று சொல்லிக்கொண்டே பல்தேவ் அவளை நோக்கி ஓர் அடி எடுத்து வைத்தான். ஆனால், எதிர்பாராத ஒரு காரியம் அப்பொழுது நடந்தது. அவளைத் தூக்கச் சென்ற பல்தேவ் இரண்டாவது அடி எடுத்து வைக்குமுன் சிறிது தள்ளாடினான். பிறகு பூமியில் குப்புற விழுந்தான். சித்ரா திகிலுடன் பார்த்தாள். முன்னைப் போலவே உணர்ச்சி ஏதுமில்லாத முகத்துடன், கையில் ஓங்கிப் பிடித் திருந்த வெண்கலக் குத்துவிளக்குடன் உபாத்தியாயன் நின்றுகொண்டிருந்தான். பல்தேவ் தலையிலிருந்து ரத்தம் ஆறாகப் பெருகிக் கொண்டிருந்தது. சித்ரா ஏதோ பேச வாயெடுத்தாள். "பேச்சு இருக்கட்டும் கதவைச் சாத்தி சீக்கிரம் தாளிடு" என்றான் உபாத்தியாயன்.

# 17. விளக்கும் விளக்கமும்

சித்ரா அடிமேலடி எடுத்து வைத்துப் பூனைபோல் நடந்து சென்று, கதவை சப்தம் போடாமல் மெள்ளச் சாத்திப் பெரிய மரத்தாழ்ப்பாளையும் ஜாக்கிரதையாகச் செருகி விட்டுத் திரும்ப அறையின் நடுவுக்கு வந்தாள். அஜித் சந்திரன் அவளை ஏறெடுத்துப் பார்க்கவுமில்லை, பேசவு மில்லை. கூரையிலிருந்து பல முகங்களுடன் பிரும்மாண்ட மாகத் தொங்கிக் கொண்டிருந்த வெண்கல விளக்கையே பார்த்துக்கொண்டு நின்றான். மண்டையில் ரத்தம் பெருகக் கீழே கிடந்த பல்தேவின் கைகால்கள்கூட அசையவில்லை! அந்த அறையில் அந்த க்ஷணம் பயங்கரமான அமைதி நிலவி யிருந்தது. தான் இருந்த பயங்கர நிலையோ, அதை எடுத்துக் காட்டுவதுபோல் அறையைச் சூழ்ந்திருந்த இருளோ சித்ராதேவிக்கு எத்தகைய பயத்தையும் அளிக்கவில்லை. எவ்வளவோ பேர் கசையடி பட்டு ரத்தம் ஆறாகப் பெருகிச் சாவதைப் பார்த்த அந்த ஹூண மகளுக்கு பல்தேவின் சலனமற்ற நிலையோ அவன் தலையிலிருந்து பெருகிய ரத்தமோ ஒரு பொருட்டாகத் தெரியவில்லை. தன்னைக் காக்கும் நினைவை உபாத்தியாயன் இழக்கவில்லை என்ற உறுதியும் சென்ற சில விநாடிகளில் ஏற்பட்டு விட்டபடியால் பல்தேவின் ஆட்கள் ஆயிரம் பேரிருந்தாலும் இனிக் கவலை யில்லை என்ற நெஞ்சத் துணிவும் அவளுக்கு ஏற்பட்டு விட்டது. தன்னைக் காக்க ஓர் ஆண்மகன் இருக்கிறான் என்ற துணிவு இருந்தால் பெண்ணின் மனம் ஒரு தனி பலத்தைப் பெற்று விடுகிறது. இதை உத்தேசித்துத்தானோ என்னவோ பெண்ணைக் காலாகாலத்தில் ஒருவன் கையில்

பிடித்துக் கொடுத்துவிட்டால் தங்கள் கவலை தீர்ந்தது என்று பெற்றோர்கள் நினைக்கிறார்கள்.

சித்ராதேவியின் மனம் இப்பலத்தைப் பெற்றதோடு நில்லாமல் தான் செய்த ஒரு பிழையையும் திருத்திக் கொள்ள முன்வந்தது. ஆகவே, கூரையைப் பார்த்துக் கொண்டு நின்ற உபாத்தியாயனைச் சித்ரா அணுகி, மெள்ள அவன் கரத்தோடு தன் கரத்தை இணைத்துக் கொண்டாள். அவள் கையின் பிணைப்பால் உடம்பில் ஊடுருவிச் சென்ற உணர்ச்சியைச் சிறிதும் வெளிக்குக் காட்டிக்கொள்ளாமலே உபாத்தியாயன் கூரையிலிருந்த பார்வையை அந்தப் பாவை மீது திருப்பினான். அவன் கரம் அவள் பிடியிலிருந்து தன்னை விடுதலை செய்து கொண்டது. அவன் மனத்தில் இருந்த அபிப்பிராயங்களை சித்ரா தெரிந்துகொண்டாள். "உபாத்தியாயரே! முன்பின் யோசிக்காமல் உங்களைச் சற்று முன் கண்டபடி பேசிவிட்டேன்..." என்று இழுத்தாள்.

"முன் யோசனையைப் பெண்ணிடம் எதிர்பார்க்கும் முட்டாளல்ல நான். பின்னால் ஏற்படும் யோசனையைப் பற்றிக் கவலைப்படும் நாளும் போய்விட்டது. ஆகையால் உன் முன்பின் யோசனையைப் பற்றி நான் சிந்திக்கவே இல்லை. இப்பொழுது அதைவிட முக்கிய விஷயமிருக்கிறது" என்றான் உபாத்தியாயன் அமைதியாக.

சித்ராவின் கோபம் மீண்டும் சரசரவென்று தலைக்கேறியது. "என்னிடம் அக்கறையில்லையானால் என்னை எதற்காகப் பல்தேவிடமிருந்து காப்பாற்றினீர்கள்?" என்று சீறினாள்.

"ஆபத்திலிருக்கும் எந்தப் பெண்ணுக்கும் ஓர் ஆண் மகன் செய்ய வேண்டிய கடமையைச் செய்தேன். இன்று நீ இருந்த நிலையில் எந்தப் பெண் இருந்தாலும் இதைத்தான் செய்திருப்பேன். பெண்களைக் கற்பழிக்கும் ஹூணர்கள்



வர்க்கதைச் சேர்ந்தவனல்ல நான். அபலைகளை எப்படியாயினும் காப்பாற்ற வேண்டும் என்று எல்லா ஆண்களுக்கும் ஆணை விதித்துள்ள ஆரியவர்க்கம் என் வர்க்கம். நீ என் எஜமான் மகளென்ற பயத்தால் உன்னைக் காப்பாற்றவில்லை. ஏதோ சில நாட்கள் என் மேல் அன்பு வைத்தாய் என்ற பாசத்துக்காகவும் காப்பாற்றவில்லை. பெண் என்பதால் காப்பாற்றினேன். என் பணிப் பெண்ணாயிருந்தால் கூட இப்படித்தான் காப்பாற்றியிருப்பேன்," என்று வார்த்தைகளை உதிர்த்தான் உபாத்தியாயன்.

சித்ரா ஏதோ சொல்ல மறுபடியும் வாயெடுத்தாள். "வீண் தர்க்கத்துக்கு இப்பொழுது சமயமில்லை சித்ரா! அதற்கு நிரம்ப அவகாசம், பின்னால் தருகிறேன். இப்பொழுது இதற்கு ஏதாவது சாக்கு கண்டுபிடிக்க வேண்டும்" என்று கீழே அசையாமல் கிடந்த பல்தேவைச் சுட்டிக் காட்டினான் அஜித் சந்திரன்.

"நீங்கள் உபசேனாதிபதியல்லவா? இவன் சாதாரண படைத்தலைவன்தானே! இங்கிருக்கும் வீரர்கள் நீங்கள் சொல்கிறபடிதானே கேட்பார்கள்? இவனை அடித்ததற்குச் சாக்கு ஏன் கண்டுபிடிக்க வேண்டும்?" என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் சித்ரா.

"இவன் வீரர்கள் ராணுவக் கட்டுப்பாட்டுக்கு அடங்கியவர்களாயிருந்தால் நான் சொல்கிறபடி நடப்பார்கள். ஆனால், படையின் இப்பகுதியைப் பல்தேவ் கொள்ளைக் கூட்டமாக மாற்றியிருக்கிறான். இவர்கள் கட்டுப்பாடு கொள்ளையில் கிடைக்கும் பொருளை அஸ்திவாரமாகக் கொண்டது. இவர்களை எந்த வழிக்கும் கொண்டுவர முடியாது. பல்தேவ் இப்படி அடிபட்டுக் கிடப்பது வெளியிலிருக்கும் வீரர்களுக்குத் தெரிந்தால் நாமிருவரும் உயிருடன் தப்ப முடியாது. என் உயிரைப் பற்றி நான்

கவலைப்படவில்லை. உன் உயிரைப்பற்றிக்கூட எனக்கு அக்கறையில்லை. உன் உயிருடன் உன் மானமும் கலந்திருக் கிறதே என்றுதான் யோசிக்கிறேன்" என்றான் அஜித் சந்திரன்.

இதைக் கேட்ட சித்ராவின் உள்ளம் குளிர்ந்தது. ஆண் களின் அசட்டுத்தனத்தை நினைத்த அவள் இதழில் லேசாகப் புன்முறுவல் ஓடிற்று. 'உபாத்தியாயருக்கு என்னிடம் அன்பில்லை. என் உயிரைப்பற்றிக்கூடக் கவலையில்லை. ஆனால் என் மானத்தைப்பற்றி மட்டும் கவலை! இன்னொரு புருஷன் என்னைத் தொடுவதைச் சகிக்கமாட்டார். என்னிடம் அன்பில்லாவிட்டால் நான் எக்கேடு கெட்டால் இவருக்கென்ன!' என்று பலபடி எண்ணி, உபாத்தியாயன் உள்ளத்தில் தன் மீதிருந்த அன்பு எள்ளளவும் குறைய வில்லை என்பதை பூரணமாக அறிந்து கொண்டாள். தனக்குச் செய்த உதவியை எந்தப் பணிப்பெண்ணுக்கும் செய்யக்கூடிய வீரன் உபாத்தியாயன் என்பதை சித்ரா உணராதவளல்ல. ஆனால் உபாத்தியாயன் பணிப்பெண் ணுக்கு உதவி செய்யக்கூடிய வழி வேறு. பல்தேவ் தவறி நடக்கும்போது அவனை வேண்டாமென்று தடுத்திருக்கலாம். 'சீ பணிப்பெண் மீது கை வைப்பதா பல்தேவ்' என்று புத்தி சொல்லியிருக்கலாம். தர்க்கம், சமாதானம், உபதேசம், வேண்டுகோள் முதலிய பல முறைகளைக் கையாண்டிருக் கலாம். என்ன அயோக்கியனாக மாறியிருந்தாலும் உபாத்தி யாயரிடம் நன்றியை மறக்காத பல்தேவ் செவி கொடுத் திருந்தாலும் இருப்பான். ஆனால், இது எதையும் செய்யாமல் உடம்பில் துள்ளி எழுந்த சகல நரம்புகளையும் அடக்கி இருளில் நின்று தான் மன்றாடியபோதும் தன்னை விடுவிக்க இஷ்டமில்லாததுபோல் பாசாங்கு செய்து, எதிர்பாராத சமயத்தில் பல்தேவின் தலையில் பயங்கரமாகத் தாக்கிய



உபாத்தியாயன் உணர்ச்சி வேகம் எத்தன்மையதென்பதை சித்ரா நன்றாக உணர்ந்து கொண்டாள். தனக்கு உரியவனை இன்னொருவன் தொடுகிறானே என்ற ஆத்திரம் பூராவும் சேர்ந்து பல்தேவ் தலையில் பயங்கர அடியாக இறங்கியிருக் கிறதென்பது அந்தப் பெண் உள்ளத்துக்கு நன்றாகப் புலனா யிற்று. இத்தனை ஆபத்திலும் இந்த ஞானோதயம் அவள் மனத்தில் சந்தோஷத்தையும் உடலில் ஒரு நாணத்தையும் பரப்பியது.

இவ்வளவு 'கேள்வி பதில்' முடிவுகள் மூளையில் ஓடிக் கொண்டிருந்ததால் மௌனமாகப் பதில் சொல்லாமல் நின்ற சித்ராவை உபாத்தியாயனும் திரும்பிப் பார்க்க வில்லை. வேறு முக்கிய வேலையில் மும்முரமாயிருந்தான். சற்றுத் தூரத்திலிருந்த மஞ்சத்தை இழுத்துக் கூரை விளக்குகள் எதிரில் போட்டுக்கொண்டு, அதற்கு மேல் ஏறி விளக்கின் வெண்கலச் சங்கிலியைப் பிடித்துப் பலங் கொண்ட மட்டும் இழுத்தான். சித்ரா ஏதும் புரியாமல் அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள். உபாத்தியாய னுடைய நீண்ட கைகள் சங்கிலியை ஒரு சுற்றுச் சுற்றிப் பிடித்துப் பலமாக அசக்கின. அந்தப் பழைய விளக்கின் சங்கிலி பொறுத்தப்பட்டிருந்த கூரை மரத்துண்டு மெள்ள மெள்ள விரிய ஆரம்பித்தது. அதில் ஆழப் பதிக்கப் பட்டிருந்த சங்கிலி முனையும் வெளிவர ஆரம்பித்தது. உபாத்தியாயன் முகத்தில் வியர்வைத் துளிகள் அரும்பின. மூச்சைப் பிடித்துக்கொண்டு மீண்டும் ஓர் இழுப்பு இழுக்கவே சங்கிலி முனை பூராவும் கழன்று வெளியே வந்துவிட்டது. விளக்கைக் கையிலெடுத்துக் கொண்டு உபாத்தியாயன் மஞ்சத்திலிருந்து கீழே இறங்கி முகத்திலிருந்த வியர்வைத் துளிகளைத் துடைத்துக் கொண்டான். அவன் எதற்காக விளக்கைக் கூரையிலிருந்து அவ்வளவு கஷ்டப்

பட்டுப் பிடுங்கினான் என்று சித்ராவால் ஊகிக்க முடியவில்லை. உபாத்தியாயன் மூளை மட்டும் வெகுதுரிதமாக வேலை செய்து கொண்டிருந்தது. "சித்ரா, கதவின் தாழ்ப்பாளை நீக்கிக் கதவை மெள்ளத் திறந்துவிடு" என்றான். சித்ரா எதைப்பற்றியும் பேசக்கூடிய ஸ்திதியில் இல்லை. அவன் சொன்னபடி செய்தாள். "பயந்துகொண்டு அறையின் மூலையில் நில்" என்றான் உபாத்தியாயன். நாடக ஆசிரியர் சொற்படி நடக்கும் நடிகை போலச் சித்ரா தன் முகபாவத்தைக் காட்டினாள். உபாத்தியாயன் பல்தேவின் பக்கத்தில் நின்றுகொண்டு கூரையிலிருந்து எடுத்த அந்த வெண்கல விளக்கைத் தன் தலைக்குமேல் தூக்கித் திடீரென்று கீழே போட்டான். பிரும்மாண்டமான அந்த வெண்கல விளக்கின் வீழ்ச்சியால் தர்மசாலை பூராவும் பெரும் சத்தம் கிளம்பியது. பழைய நாள் கட்டடமாதலால் எதிரொலியும் பலமாயிருந்தது. அந்த இரைச்சலோடு இரைச்சலாக, "சுராஜ்! சுராஜ்!" என்று அதிகாரமும் கோபமும் கலந்த குரலில் உபாத்தியாயனும் அதட்டிக் கூவினான்.

மாடிப்படிகளில் பலர் சரசரவென்று ஏறிவரும் சப்தம் கேட்டது. முதலில் சுராஜும் அவனைத் தொடர்ந்து தர்மசாலைக் கிழவனும், கிழவனுக்குப் பின்னால் இன்னும் இரண்டு வீரர்களும் ஓடிவந்தார்கள். அறைக்குள் முதலில் நுழைந்த சுராஜ், பல்தேவ் இருந்த நிலையைக் கண்டு திகைத்துப் போனான். ஒரு விநாடி சந்தேகத்துடன் அறையைச் சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, "இது எப்படி நேர்ந்தது?" என்று அஜித் சந்திரனைக் கேட்டான்.

அஜித் சந்திரன் கண்கள் கோபத்தால் ஜொலித்தன. அவன் பார்த்த பார்வையில் சுராஜ் வெலவெலத்தான். கூரிய இரு கத்திகள் தன் இதயத்தை ஊடுருவுவது போலிருந்



தது சுராஜுக்கு. சுராஜின் கேள்விக்கு அஜித் சந்திரன் நேரடியாகப் பதில் கூறாமல், "நீ எத்தனை நாளாக தோரமானாவின் சைன்னியத்தில் வேலை செய்கிறாய்?" என்று கேட்டான். அவன் பார்வையினாலும் தன் கேள்விக்குச் சம்பந்தமில்லாத பதில் கேள்வியினாலும் சுராஜ் சிறிது குழம்பிக் கொண்டே, "ஆறு மாத காலமாக வேலை செய்கிறேன்" என்றான்.

உபாத்தியாயன் சொற்கள் மிகக் கடுமையாக வெளிவந்தன. "ஆறு மாத காலமாகச் சைன்னியத்திலிருக்கிறாய். தோரமானாவின் உபசேனாதிபதியிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும், எப்படிப் பேச வேண்டும் என்பதைத் தெரிந்துகொள்ளவில்லை. உன்னைப் போன்ற மடையர்களை வைத்துக்கொண்டு பல்தேவ் எப்படித்தான் காலந் தள்ளுகிறானோ?" என்றான். சீற்றம் மிகுந்த உபாத்தியாயன் வார்த்தைகளைக் கேட்ட சுராஜ் நடுங்கினான். அவன் பயத்தைக் கவனித்த உபாத்தியாயன் இன்னும் மூர்க்கத்தனமாகவே பேச ஆரம்பித்து, "உபசேனாதிபதியைக் கேள்வியா கேட்கிறாய்? அதைவிட அதோ கிடக்கும் விளக்கு எப்படிக் கீழே விழுந்தது என்பதைக் கவனித்திருந்தால் பல்தேவ் தலையில் பட்ட காயத்திற்குக் காரணம் உன் மந்தபுத்திக்கும் தெரிந்திருக்கும். உன்னைப் பிறகு கவனிக்கிறேன்," என்று சொல்லிவிட்டு உபாத்தியாயன் தர்மசாலைக் கிழவனை நோக்கி, "டேய்! இதுதான் தர்மசாலையை நடத்தும் லக்ஷணமா? மேலே மரம் விரிந்து விளக்குச் சங்கிலி ஆணி நழுவி நின்று எத்தனை நாளாகியிருக்கும்?" என்று கேட்டான்.

கிழவன் நடுங்கிக் கொண்டே, "சேனாதிபதியவர்களே, விளக்குச் சங்கிலி கழன்றிருந்ததை நான் கவனிக்கவில்லை" என்று அலறினான்.

"அதை ஏன் கவனிக்கப் போகிறாய்! பல்தேவ் போன்ற பொறுப்புள்ள படைத்தலைவனுக்கு ஏற்பட்ட இந்த ஆபத்துக்கு உன்னை நான் சும்மாவிடப் போவதில்லை. பல்தேவ் நல்ல வேளையாகப் பிழைத்துக் கொண்டான். அந்த விளக்கு மட்டும் என் தலையில் விழுந்திருந்தால் என் பிராணனே போயிருக்கும்" என்று கூறிக் கீழே கிடந்த பல்தேவின் கைகால் அசைவதைக் காட்டினான் அஜித் சந்திரன்.

இப்படி உபாத்தியாயன் சாமர்த்தியமாக ஒருவர் மேலிருந்து இன்னொருவர் மேல் தாவி மிரட்டியதாலும் பல்தேவிடம் தனக்குள்ள பரிவைக் காட்டியதாலும் விளக்கு விழுந்தது எதிர்பாராத ஒரு விபத்து என்று எல்லோரும் நம்பினார்கள். அவர்கள் மேற்கொண்டு யோசிக்கவோ அறையைச் சுற்றி நிதானித்து நோக்கவோ உபாத்தியாயன் இடங்கொடுக்காமல், "சுராஜ்! இப்படி வா, பல்தேவைப் பிடி, முதலில் காயத்தைக் கழுவி மருந்து வைத்துக் கட்டுவோம்" என்று உத்தரவு போட்டு வாசற்படிக்கருகில் நின்றுகொண்டிருந்த வீரர்களை நோக்கி, "டேய்! இவளைக் கொண்டு போய் பழையபடி வண்டியில் உட்கார வைத்து ஜாக்கிரதையாகக் காவல் புரியுங்கள். நான் மீண்டும் சொல்லும் போது அழைத்து வரலாம்" என்றான். அவன் உத்தரவுகளை நிறைவேற்றுவதில் அனைவரும் சுறுசுறுப்புடன் ஈடுபட்டனர்.

# 18. மயக்கத் துளிகள்

**எ**ல்லா விவகாரங்களும் தன் நன்மைக்காகவே நடக்கின்றனவென்பதை உணர்ந்துகொண்ட சித்ரா, வீரர்கள் பின்னால் வாய் திறவாமல் நடந்து சென்றாள். சுராஜும் தர்மசாலைக் கிழவனும் உதவ பல்தேவை மெள்ளப் பிடித்துத் தூக்கிக்கொண்டதும், "பல்தேவ் படுக்கும் அறை எங்கிருக்கிறது?" என்று அஜித் சந்திரன் கேட்டான். "இரண்டாவது மாடியிலிருக்கிறது" என்றான் கிழவன். மூவருமாக பல்தேவை ஆடாமல் அசையாமல் அவன் அறைக்குத் தூக்கிச் சென்று அங்கிருந்த மஞ்சத்தில் படுக்க வைத்தார்கள். தர்மசாலைக் கிழவனை ஒரு பாத்திரத்தில் சுடுநீர் கொண்டு வரச்சொல்லி, பல்தேவ் மண்டைக் காயத்தை மிக ஜாக்கிரதையாகத் துடைத்து, அடிபட்டிருந்த இடத்தில் ரத்தப் பொருக்குகள் இல்லாமல் சுத்தமாய்த் துடைத்தபின் "இங்கு பச்சிலை மருந்து ஏதாவது கிடைக்குமா?" என்று உபாத்தியாயன் விசாரித்தான். "எஜமான்! இந்தக் கிழவனே வைத்தியன்," என்று சுராஜ் விளக்கியவுடன் கிழவனை ஒருமுறை ஊன்றிக் கவனித்தான் உபாத்தியாயன். பிறகு, "உனக்கு வைத்தியம் தெரிந்திருப்பது அவசியம்தான். உன் தர்மசாலையில் படுத்து முழு உருவத்தோடு காலையில் யார் எழுந்திருக்கப் போகிறார்கள்?" என்று சொல்லிவிட்டு, "காயத்துக்குக் கட்ட சீக்கிரம் மருந்து ஏதாவது கொண்டு வா" என்று அதட்டினான். கிழவன் கொண்டு வந்த மருந்துப் பசையைத் தானே வைத்து நன்றாகக் கட்டுப் போட்டான் உபாத்தியாயன். அவன் பல்தேவுக்குச் சிசுருஷை செய்த அக்கறையைக் கவனித்த சுராஜுக்கு உபாத்தியாயனிடம் ஏதாவது சந்தேகம் இருந்திருக்குமானால் அது காற்றாகப் பறந்துவிட்டது.

உபாத்தியாயன் செய்த சிகிச்சையால் சிறிது சுய நினைவு வந்து கண்ணை விழித்த பல்தேவ் எதிரிலிருந்த மூவரையும் ஒருமுறை பார்த்தான். பிறகு கண்ணைத் தன் அறை பூராவும் ஓடவிட்டு மெள்ள எழுந்திருக்கவும் முயன்றான். ஆனால் மண்டைக் காயத்திலிருந்து எழுந்த வலியால் 'ஹா' என்று அலறி மீண்டும் படுக்கையில் சாய்ந்தான். உபாத்தியாயன் அவன் நெற்றிக் கட்டில் கையை வைத்து அமுக்கிச் சிறிது வலி குறையச் செய்து, "பல்தேவ்! ஏதோ மயிரிழையில் உயிர் தப்பினாய். இப்போதும் அபாய நிலையில்தான் இருக்கிறாய். பிடிவாதத்தால் எழுந்திருக்க முயன்று கீழே விழுந்தாயோ மூலஸ்தானபுரத்துக்கு வேறு படைத்தலைவனைத் தேட வேண்டியதுதான். ஜாக்கிரதை. படுக்கையை விட்டு அசையக்கூடாது?" என்றான்.

சுராஜும் உபாத்தியாயனோடு சேர்ந்துகொண்டான். "ஆமாம் எஜமான்! அந்தப் பாழும் வெண்கல விளக்கு, திடீரென்று அறுந்து உங்கள் தலையில் விழுந்திருக்கிறது. விளக்கு எவ்வளவு கனம் என்பது உங்களுக்குத் தெரியும். உபசேனாதிபதியின் உதவியில்லாவிட்டால் நீங்கள் பிழைத்திருப்பதுகூடச் சந்தேகம்" என்றான். சுராஜ், அஜித் சந்திரனுடன் சேர்ந்துகொண்டதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. உபாத்தியாயன் பல்தேவுக்குச் செய்த சிசுருஷை, அவன் முதலில் கொண்ட சந்தேகத்தை நிவர்த்தித்தது ஒன்று. எதற்கும் யார்மேலாவது எரிந்துவிழும் பல்தேவின் கோபாக்கினியிலிருந்து தப்ப வேண்டுமென்பது இரண்டு. ஆகவே சுராஜும் பலமாக உபாத்தியாயன் கட்சியை ஆதரித்தான். பல்தேவும் வேறெதுவும் பேச வகையில்லாமல், "அந்தப் பெண்..." என்று கேட்க ஆரம்பித்தான்.

"பத்திரமாய்க் காவலில் வைத்திருக்கிறேன். உனக்குத்தான் அகஸ்மாத்தாக விபத்து நேர்ந்ததென்றால் நானில்லையா? என் பிடியிலிருந்து அவளைத் தப்பவா விடுவேன்?" என்று உபாத்தியாயன் சொன்னான். இதைச் சொல்லும்போது உபாத்தியாயன் மனத்தில் சிரித்துக் கொண்டதை அவன் கண்களிலிருந்து கண்டு கொண்டிருக்கலாம். மந்த புத்தியுள்ள பல்தேவுக்கு அவ்வளவு தூரம் புரியவில்லை. தவிர, மண்டை வலி வேறு தாங்க முடியாமலிருக்கவே, "அப்பா" என்று அலறினான்.



அஜித் சந்திரன் தர்மசாலைக் கிழவனைப் பார்த்து, "என்ன வைத்தியரே! இவ்வளவு வலி இருந்தால் நோயாளி எப்படித் தூங்குவான்?" என்று கேட்டான்.

"காயம் ஆறினாலொழிய வலி போகாதே" என்றான் கிழவன்.

"இதைச் சொல்ல ஒரு வைத்தியன் தேவையில்லை. பல்தேவ் இன்றிரவாவது நிம்மதியாகத் தூங்கினால்தான் நல்லது. அதற்கு ஏதாவது வழி இருக்கிறதா?" என்ற உபாத்தியாயன் கேள்விக்குக் கிழவன் உடனே பதில் சொல்லாமல் ஏதோ யோசித்தான்.

"என்ன யோசிக்கிறாய்?" என்றான் உபாத்தியாயன், பொறுமையை இழந்தவன்போல்.

"ஒன்றுமில்லை. லேசாக மயக்கம் தரக்கூடிய திராவகம் வடித்து வைத்திருக்கிறேன். அதில் நான்கு துளிகள் பாலில் விட்டுக் கொடுத்தால் இன்றிரவு இவர் தூங்கலாம். அந்தத் திராவகப் படிகத்தை எங்கு வைத்திருக்கிறேனோ ஞாபகமில்லை" என்றான் கிழவன்.

"இமைப்பொழுதில் அந்தத் திராவகம் இங்கு வந்து சேர வேண்டும். போய் சீக்கிரம் தேடி எடுத்து வா" என்று உத்தரவிட்டான் உபாத்தியாயன். கஷ்டப்பட்டு தேடிக் கிழவன் கொண்டு வந்த ஸ்படிகக் குப்பியிலிருந்து நாலைந்து துளிகளைப் பாலில் விட்டு, பல்தேவுக்குக் கொடுத்துச் சற்று

நேரம் மூவரும் அங்கேயே நின்றார்கள். துளிகள் நன்றாக வேலை செய்தன. சில நிமிஷங்களில் அயர்ந்து தூங்க ஆரம்பித்தான் பல்தேவ். "இனி நாம் போகலாம். வா சுராஜ்" என்று கூப்பிட்டுக்கொண்டே உபாத்தியாயன் முன்னே செல்ல மற்ற இருவரும் பின்தொடர்ந்து முதல் மாடி யிலுள்ள அறைக்கு வந்து சேர்ந்தார்கள். கிழவன் உதவியால் அறை சுத்தமாயிற்று. மஞ்சத்தில் உட்கார்ந்து கொண்ட உபாத்தியாயன் கிழவனை அனுப்பிவிட்டு, "சுராஜ்! இன்றிரவு லேசில் தூக்கம் வருவதாகத் தெரியவில்லை; வண்டியிலிருக்கும் பெண்ணை அழைத்து வா" என்றான். சற்று நேரத்தில் சித்ராவுடன் திரும்பி வந்த சுராஜிடம், "நீ கீழே இரு, அவசியமானால் கூப்பிடுகிறேன்," என்று சொல்லிய உபாத்தியாயனை நோக்கிப் புன்முறுவல் செய்து விட்டு சுராஜ் படிகளில் இறங்கிச் சென்றான்.

அவன் சென்றதும் அறைக் கதவைத் தாளிட்ட உபாத்தி யாயன், "பார்த்தாயா சித்ரா, இதுதான் கொள்ளைக் கூட்டத் தைச் சேர்ந்தவர்களின் கொள்கை. எந்தப் பெண்ணை யார் கூட்டிப் போகிறார்கள், நம் படைத்தலைவன் விரும்பிய பெண்ணை உபசேனாதிபதி அழைத்துப் போகிறானே என்பதிலெல்லாம் இவர்களுக்கு அக்கறையில்லை. முழு நோக்கம் பணத்தின் மேல்தான். அது சரியாகக் கிடைக்கும் வரையில், தங்களுக்குள் சூது நடவாத வரையில், ஒழுக்கத் தைப் பற்றிக் கவலையே இல்லை" என்றான் உபாத்தியாயன். பிறகு அவள் நின்று கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டு, "ஏன் நிற்கிறாய்? வா, இப்படி உட்கார்" என்று எதிரிலிருந்த மஞ்சத்தைக் காட்டினான்.

சித்ரா மஞ்சத்தில் உட்கார்ந்து கொண்டாள். உபாத்தி யாயன் இமை கொட்டாமல் அவளையே பார்த்துக் கொண் டிருந்தான். அவன் பார்வை சென்ற இடங்களை உணர்ந்து



சித்ரா வெட்கி நெளிந்து ஒரு பக்கமாகத் திரும்பிக் குனிந்து உட்கார்ந்துகொண்டு, ஏதோ பேச்சைத் துவக்க வேண்டும் என்பதற்காக, "நான் திடீரென்று இங்கு எப்படி வந்து அகப்பட்டுக் கொண்டேனென்பது உங்களுக்கு ஆச்சரிய மாயிருக்கும்" என்று ஆரம்பித்தாள்.

"இதில் எனக்கு ஆச்சரியமொன்றுமில்லை. மலை வாசல் பிராந்தியத்தில் உங்களால் தங்க முடியாதென்பது எனக்கு முன்பே தெரிந்த விஷயம். நீ உன் தகப்பனாருடன் கணவாய் வழியாகக் கபீசத்துக்குச் செல்லாமல் இங்கு ஏன் தனிமையில் வந்தாய் என்பதுதான் தெரியவில்லை" என்றான் உபாத்தியாயன்.

"கணவாய் மார்க்கங்களைத் தோரமானா அடைத்து விட்டான். அவன் வீரர்கள் கபீசத்துக்குச் செல்லும் வழி களையும் காவல் காத்து நிற்கிறார்கள்."

"அப்படியா?"

"ஆமாம். கபீசத்துக்கும் போக வழியில்லை, மலை வாசலில் இருப்பதற்கும் வழியில்லை. நீங்கள் சொன்னபடி அன்றிரவு மீண்டும் வில்லவர் எழுச்சி ஏற்பட்டது. நாங்கள் தப்பினதே ஆச்சரியம். என் தகப்பனாரும் ராகுலனும் ஒரு வழியாகவும், நானும் என் தம்பியும் மற்றொரு மார்க்கமாக வும் பிரிந்து குப்த ராஜ்யத்தை நோக்கிப் பயணமானோம்!"

"குப்த ராஜ்யத்துக்கா!"

"ஆம்; தஞ்சமென்று அடைந்து விட்டால் வைரிகளையும் ஸ்கந்தகுப்தன் ஆதரிப்பான் என்று சொல்கிறார்கள். தவிர, அதை விட்டால் அடைக்கலத்திற்கு வேறு இடமில்லை. இங்கிருந்தால் தோரமானா என் தகப்பனாரை உயிருடன் விடமாட்டான்! ஆகையால்தான் குப்த ராஜ்யத்துக்குக் கிளம்பினோம். தகப்பனார் தக்ஷசீலத்துக்காகப் போய் மீண்டும் தெற்கில் திரும்பி பாடலிபுத்ரத்துக்கு வருவார்.

நான் இப்படி மூலஸ்தானபுரம் வழியாகப் பாடலிபுத்ரத்தை அடைந்து அவருடன் சேர்ந்துகொள்ள யோசித்தேன்... இடையில்...''

''உபாத்தியாயனிடம் அகப்பட்டுக் கொண்டாய்'' என்று அஜித் சந்திரன் வார்த்தையைச் சிரித்து முடித்தான். பிறகு, ''வண்டியிலிருப்பது உன் தம்பிதானே?'' என்றான். 'ஆம்' என்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தாள் சித்ரா.

உபாத்தியாயன் மஞ்சத்திலிருந்து எழுந்து தீவிரமாக எதையோ யோசித்துக் கொண்டே அறையில் அங்குமிங்கும் உலாவினான். பிறகு சாளரத்துக்கருகே சென்று வெளியில் எட்டிப் பார்த்தான். மதில் கதவு பலமாகப் பூட்டப்பட்டிருந்தது. வண்டியை ஒரு வீரன் காவல் புரிந்து கொண்டிருந்தான். மற்ற வீரர்கள் யாரையும் காணோம். எங்கே போயிருப்பார்கள் என்று யோசித்துக் கொண்டேயிருக்கையில் சித்ராவின் மலர்க்கரம் அவன் கையில் இணைந்து கொண்டது. உபாத்தியாயன் கையை இழுத்துக் கொள்ளவில்லை. திரும்பியும் அவளைப் பார்க்கவில்லை. சாளரத்தின் வெளியிலேயே அவன் கண்பார்வை போய்க்கொண்டிருந்தது.

''உபாத்தியாயரே!'' என்ற சித்ராவின் குரல் தர்மசாலைக் கிழவனின் மருந்துத் துளிகளை விட அதிக மயக்கத்தைத் தரும்படியாயிருந்தது. அவள் அவனுக்கு வெகு அருகிலிருந்தாள். அவள் ஆடை அவன் மேல் உராய்ந்து கொண்டிருந்தது. உபாத்தியாயன் உணர்ச்சி வசப்பட்டிருந்தாலும் அதை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமலே, ''மணமான பெண் இப்படி நடப்பது சரியல்ல'' என்றான்.

''நியாயந்தான்...'' என்றாள் சித்ரா.

''அப்படியானால்...'' என்று கேட்டுச் சட்டென்று திரும்பினான் உபாத்தியாயன். அவள் வெகு அருகில் நின்றிருந்ததால் அவன் திரும்பிய வேகத்தில் அவள் எழில் உடல்



அவன் மேல் திடீரெனப் பட்டுவிடவே உபாத்தியாயன் ஒரு கணம் நிலை கலங்கிப் போய் அவளைப் பார்த்தான். சித்ராவின் இதழ்களில் மயக்கமான புன்முறுவல் படர்ந்திருந்தது. அவன் சந்தேகத்தைப் பூராவும் தீர்க்க, ''எனக்கு இன்னும் மணமாகவில்லை உபாத்தியாயரே'' என்றாள். அவள் பேச்சு மிக மிருதுவாக வெளிவந்தது. சாளரத்துக்கு அருகே இயற்கையளித்த சிறு வெளிச்சத்தில் அவள் முக பாவம் இருந்த நிலையாலும், அவள் சமீபத்தாலும், அவள் பூவுடல் பூராவும் தன்மீது சாய்ந்திருந்த முறையாலும், அவள் தனக்கு மணமாகவில்லை என்று சொல்லி ஊட்டிய நம்பிக்கையாலும், யாருக்கும் கிட்டாத இன்ப உலகத்துக்குச் சித்ரா தன்னை அழைத்துச் செல்வதை உபாத்தியாயன் உணர்ந்து மெய்மறந்தான். அந்த அறைக்குக் கீழேயிருந்த கூடத்திலிருந்து கிளம்பிய கூச்சலும் சிரிப்பும் அவனை ஓர் உலுக்கு உலுக்கி சுயநினைவுக்குக் கொண்டு வந்தன.

சித்ராவை விட்டு அறைக் கோடிக்குச் சென்று கதவைத் திறந்து கீழே நோக்கினான் அஜித் சந்திரன். கீழ்க் கூடத்திலிருந்த வீரர்கள் குடித்துப் பெரிய அமர்க்களம் செய்து கொண்டிருந்தார்கள். அஜித் சந்திரன் ஏதோ அரை விநாடி யோசித்துவிட்டுச் சித்ராவிடம் திரும்பி வந்தான். ''சித்ரா! உன்னை விடுவிக்க வழி கண்டுபிடித்து விட்டேன். வா இப்படி,'' என்று அவளை இழுத்து அவள் தோள் மேல் இடது கையைப் போட்டுக் கட்டிக் கொண்டான். சித்ரா எவ்வித ஆட்சேபணையும் செய்யவில்லை. ''சித்ரா! என்னுடன் சரசமாயிருப்பது போல் நடித்துக் கொண்டு வா. மற்ற விஷயங்களை நான் கவனித்துக் கொள்கிறேன்'' என்றான்.

சித்ரா இருந்த மனோநிலையில் அவள் நடிக்க வேண்டிய அவசியமே இல்லை. உபாத்தியாயனை நாடி நின்ற மனம் உபாத்தியாயனுடைய எந்த இஷ்டத்துக்கும்